
புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | ஆகஸ்டு 06, 2015 | புரட்சி 14 | முழக்கம் 30 | விலை: ரூ.3.00

## உச்சநீதிமன்றத்தில் 'மனுசாஸ்திர' சுலோகம்

மேமன் கருணை மனுவை தள்ளுபடி செய்த நீதிபதிகளில் ஒருவரான அனில் தவே, தூக்குத் தண்டனையை நியாயப்படுத்திட 'மனுதர்மத்தை' சமஸ்கிருத மொழியில் எடுத்துக் காட்டினார்.

"அரசன் சரியாக விசாரணை நடத்தினால், அவனிடத்தில் கருத்த மேனியும், சிவந்த கண்களும் கொண்ட பாவத்தைப் போக்குகிற தண்டம் எனும் தெய்வத் தன்மையுடைய புருஷன் பிறக்கிறான். ஆதலால் அத்தகைய அரசனிடத்தில் மக்கள் துன்பமடைய மாட்டார்கள்."

– (மனு அத்.7 : சுலோகம் 25)

இதே நீதிபதிதான் நான் சர்வாதிகாரி ஆனால் கீதையை தேசிய நூல் ஆக்குவேன் என்று சொன்னவர் ஆவார்.

### பதவி விலகிய அதிகாரி

"யாகூப் மேமன் கருணை மனுக்களை தள்ளுபடி செய்து விசாரணை நடத்தியது உச்சநீதிமன்றத்தின் இருண்ட காலம். நீதி நெறி முறைகள் கைவிடப்பட்டன" என்று எதிர்ப்பு தெரிவித்து, உச்சநீதிமன்றத்தின் துணைப் பதிவாளர் முனைவர் அனுப் சுரேந்திர நாத், தனது பதவியிலிருந்து விலகியுள்ளார். ஜூலை 30ஆம் தேதி நள்ளிரவில் அவசர அவசரமாக கருணை மனுவை விசாரித்தபோது சுரேந்திர நாத்தும் உடனிருந்தார். ஆனால், உச்சநீதிமன்றத்தின் அதிகாரபூர்வ இணைய தளத்தில் இந்த விலகல் செய்தி அவசர அவசரமாக மறுக்கப்பட்டுள்ளது. உச்சநீதிமன்றத்தின் பொதுச் செயலாளர் என்ற பொறுப்பில் உள்ள அதிகாரி சார்பில் வெளியிடப்பட்ட மறுப்பில், "சுரேந்திரநாத் என்ற ஆய்வாளர் குறுகிய காலத்துக்கு மட்டும் இப்பதவியில் நியமிக்கப்பட்டவர்; அவர் மீண்டும் தனது ஆய்வுப் பணியை தொடங்க விரும்பியதால், விடுவிக்கப்பட்டுள்ளாரே தவிர, உச்சநீதிமன்றம் நடத்திய விசாரணைக்கு எதிர்ப்பு தெரிவித்து அல்ல" என்று அந்த மறுப்பு கூறுகிறது. ஆனால் சுரேந்திரநாத் தனது வலைதளத்தில், "மேமன் தூக்கிலிடுவதற்கு கடைசி 24 மணி நேரத்தில் உச்சநீதி மன்றத்தின் செயல்பாடுகள் அற்பமாகவும், கேலிக்குரிய தாகவும் இருந்தது. ஜூலை 29ஆம் தேதி மாலை 4 மணிக்கும், 30ஆம் தேதி விடியற்காலை 5 மணிக்கும் பிறப்பித்த இரண்டு ஆணைகளும் உச்சநீதிமன்ற வரலாற்றில் இருண்ட காலம்" என்று வெளிப்படையாக அறிவித்துள்ளார். தேசிய சட்ட பல்கலைக்கழகம் நடத்தும் தூக்குத் தண்டனை தொடர்பான சட்டச் சிக்கல்களுக்கான ஆலோசனை மய்யத்தின் இயக்குனர் சுரேந்திரநாத், உச்சநீதிமன்றத்தின் துணைப் பதிவாளர் பதவியைத் தூக்கி எறிந்துவிட்டு, மீண்டும் இயக்குனர் பதவிக்கு திரும்பிவிட்டார். அவமானப்பட்டுள்ள உச்சநீதிமன்றம், பொய்யான மறுப்புகளை வெளியிட்டு வருகிறது.

### எதிர்ப்பு வலுக்கிறது

பாரதிய ஜனதா கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும், மத்திய அமைச்சர் மேனகாவின் மகனுமான வருண் காந்தி தூக்குத் தண்டனையை ஒழிக்க வேண்டும் என்றும், தூக்குத் தண்டனை குற்றங்களைக் குறைக்கவில்லை என்றும் கூறியுள்ளார். பா.ஜ.க.வுக்குள்ளே கலகக் குரல் ஒலித்திருப்பது அக்கட்சியை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது. காங்கிரஸ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான சசிதரூர், தூக்குத் தண்டனைக்கு எதிராக குரல் கொடுத்துள்ளார். மேற்குவங்க சட்டமன்றத்தின் முன்னாள் தலைவர் ஹஷீம் அப்துல்கலீம், முஸ்லிம்கள் மட்டுமே தூக்குத் தண்டனைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்; சீக்கியர்களுக்கு எதிராக, குஜராத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்ட கலவரத்தில் எவரும் தண்டிக்கப்படாதது ஏன் என்று கேட்டுள்ளார்.

அதேபோல் மேமன் இறுதி ஊர்வலத்துக்கு பெரும் எண்ணிக்கையில் திரண்டவர்களில் தீவிரவாதிகள் இருக்கிறார்கள் என்று திரிபுரா மாநில ஆளுநர் தத்தகத்தாராய் கூறியதற்கு முன்னாள் தலைமை நீதிபதி அல்டமாஸ்கபீர் இந்தக் கருத்தை ஏற்க முடியாது என்று கூறியுள்ளார்.

# அடக்குமுறை சட்டங்களை முறியடிப்போம்!

அடக்குமுறை சட்டங்களை எதிர்த்து மக்களிடையே விழிப்புணர்வு இயக்கம் நடத்தப்பட வேண்டும் என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி வலியுறுத்தினார்.



அரசு அடக்குமுறை எதிர்ப்புக் கூட்டமைப்புச் சார்பில் இந்துத்துவ மக்கள் விரோத அரசின் அடக்குமுறைக்கு எதிராகக் கண்டனக் கருத்தரங்கம் கோவை அண்ணா மலை அரங்கில் 30.7.2015. அரங்க. குணசேகரன் (தமிழக மக்கள் புரட்சிக் கழகம்) தலைமையில் நடந்தது. கருத்தரங்கில், தமிழகத்தில் காவல் துறை புதிதாகப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கும் மற்றொரு அடக்குமுறை சட்டமான 'சட்ட விரோத செயல்பாடுகள் தடுப்புச் சட்ட'த்துக்கு (Unlawful Activities (Prevention) Act - UAPA) கடும் எதிர்ப்பு தெரிவித்து தோழர்கள் பலரும் உரையாற்றினர். 'தடா', 'பொடா' சட்டங்களைப்போல் இதுவும் ஒரு கொடூரமான அடக்குமுறை சட்டமாகும். இந்த சட்டங்கள் முறைகேடாகவே பயன் படுத்தப்பட்டதைத் தொடர்ந்து கடும் எதிர்ப்புகள் எழுந்த நிலையில் பொடா சட்டத்தை நீக்கிய அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி, இந்தச் சட்டத்தில் இடம் பெற்றிருந்த பல மோசமான பிரிவுகளை சட்ட விரோத தடுப்புச் சட்டத்தில் இணைத்து விட்டது. ஏற்கெனவே இந்த நோக்கத் தோடு இரண்டு முறை திருத்தத்துக்கு உள்ளான இந்த சட்டம், மேலும் கொடூரமாக மாற்றப் பட்டது. 2008ஆம் ஆண்டு மும்பை நகரம் பயங்கரவாதிகளால் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டதைப் பயன்படுத்தி மன்மோகன் ஆட்சி இந்த திருத்தப்பட்ட சட்டத்தைக் கொண்டு வந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

கருத்தரங்கில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினார். அவரது உரையிலிருந்து:

பிரிட்டிஷ் ஆட்சியில் அடக்குமுறை சட்டங்களை எதிர்த்தவர்கள் 'சுதந்திரம்' பெற்ற பிறகு, அதைவிடக் கொடுமையான சட்டங்களைக் கொண்டு வருகிறார்கள். ஒரு சட்டம் எதிர்ப்புக் காரணமாக கைவிடப்பட்டால், அதே வேகத்தில் மற்றொரு சட்டத்தைக் கொண்டு வந்து விடுகிறார்கள். அப்படி வந்த சட்டம்தான், இந்த சட்டவிரோத தடுப்புச் சட்டம். பிரிட்டிஷ் ஆட்சி கொண்டு வந்த சட்டத்தை உருவாக்கியது ரவுலட் மட்டுமல்ல, குமாரசாமி சாஸ்திரி என்ற பார்ப்பனரும் சேர்ந்துதான். அந்தச் சட்டத்தை உருவாக்கினார், 'ரவுலட்-சாஸ்திரி' சட்டம் என்று தான் அது அப்போது அழைக்கப் பட்டது. பின்னால் 'சாஸ்திரி'யை விடுவித்து, 'ரவுலட்' சட்டம் என்று குறுக்கி விட்டார்கள். பிரிட்டிஷ்காரன் கொண்டு வந்த இந்த சட்டத்தில்கூட ஒருவரை விசாரணையின்றி 6 மாதம் வரை தான் சிறை வைக்க முடியும். தலைமை நீதிபதியால் நியமிக்கப்பட்ட 3 உயர்நீதிமன்ற நீதிபதிகளும் சேர்ந்து முடிவெடுத்தால் மட்டுமே மரணதண்டனை விதிக்க முடியும். நீதிமன்ற விசாரணைகள்கூட வெளிப்படையாகவே நடந்தன.

இந்த உரிமைகள்கூட இந்திய அரசுகளால் கொண்டுவரப்பட்ட அடக்குமுறை சட்டங்களில் மறுக்கப்படுகின்றன. மரணதண்டனைகூட குற்றத்தில் நேரடியாக ஈடுபட்டவர்களுக்கு மட்டுமே வழங்க வேண்டும் என்ற மரபு முதன்முதலாக இந்திரா கொலை வழக்கில் மீறப்பட்டது. நேரடியாக குற்றத்தில் ஈடுபடாத கேகர் சிங் தூக்கிலிடப்பட்டார். இராஜீவ் கொலை வழக்கிலும் இதுதான் நடந்தது. குற்றத்தில் நேரடியாக ஈடுபட்ட சிவராஜ்-தாணு உயிருடன் பிடிபடவில்லை. சதி செய்ததாகக் குற்றம்சாட்டப் பட்டவர்களுக்கு தூக்குதண்டனை விதித்தார்கள். இப்போது யாகூப் மேமன் வழக்கிலும் இதுதான் நடந்திருக்கிறது. அவரது சகோதரர் டைகர்மேமன் குற்றத்தில் நேரடியாக ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளார். அவரைப் பிடிக்க முடியவில்லை. அதற்காக குற்றத்தில் நேரடியாக ஈடுபடாத அவரது தம்பியை தூக்கில் போட்டுள்ளார்கள்.

மகாராஷ்டிரா சிறை விதிகளின்படி மரண தண்டனை அறிவிக்கப்பட்டு, ஒரு வார அவகாசம் தரப்பட்ட பிறகே தூக்கிலிடப்பட வேண்டும். ஆனால், அவசர அவரமாக விடியற்காலை உச்சநீதிமன்றம் கருணை மனுவை தள்ளுபடி செய்த உடனே, அடுத்த சில மணி நேரத்தில் காலை 7 மணிக்கு தூக்கில் போட்டுவிட்டார்கள். அதுவும் மரணதண்டனை ஒழிக்கப்பட வேண்டும் என்று அழுத்தமாகக் குரல் கொடுத்து வந்த அப்துல் கலாம் உடல் நல்லடக்கம் செய்யப்பட்ட அதே நாளில் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. இது குறித்து நாம் கடுமையாக கவலையோடு சிந்திக்க வேண்டும்.

காவல்துறையின் தலையீடு அனைத்துத் துறைகளிலும் நடந்து கொண்டிருக்கிறது. காவல்துறை தான் ஆட்சி நடத்துவதுபோலவே தெரிகிறது. ஒரு ஊரில் குடிநீர் கிடைக்கவில்லை என்று மக்கள் போராடினால், சாலை மறியல் செய்தால், உடனே காவல்துறைதான் அங்கே போய் சமரசம் பேசுகிறது. மக்கள் போராடும் போது அந்தப் பிரச்சினைக்குத் தொடர்பான அரசுத் துறை அதிகாரிகள் அங்கே சென்று அதில் தலையிட்டு, நடவடிக்கை எடுத்ததாக ஒரு சம்பவத்தையாவது கூற முடியுமா ?

விசாரணையில் காவல்துறை அடிப்பது, சித்திரவதை செய்வது சட்ட விரோதம். ஆனால், அது தானே நடக்கிறது. இதை எதிர்த்து மக்களிடையே விழிப் புணர்வை உருவாக்க வேண்டும். திரைப் படங்களில் புகைபிடிக்கும் காட்சிகளோ, மது அருந்தும் காட்சிகளோ வரும்போது, திரையில் மது குடிப்பது, புகைப்பிடிப்பது உடலுக்குக் கேடு என்று அறிவிப்பு போடுவதுபோல், காவல்துறை திரைப் படங்களில் சட்டவிரோதமான விசாரணைகளில் தாக்குதல் நடத்துவது, சித்திரவதை செய்வது போன்ற காட்சிகள் வரும்போது, இது சட்ட விரோதமானது என்று எழுத்தில் அறிவிக்க வேண்டும்.

**(பலத்த கைதட்டல்)**

திருவாங்கூர் சமஸ்தானத்தை இந்தியாவுடன் இணைக்க முடியாது, அது தனிநாடாகவே இருக்கும் என்று கூறியவர், அந்த சமஸ்தானத்தின் 'திவான்' ஆக (தலைமை அதிகாரி) இருந்த சர். சி.பி. இராமசாமி அய்யர். அவரைத்தான் 1961இல் உருவாக்கப்பட்ட தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவுக்கு தலைவராகப் போட்டார்கள். அதன் பரிந்துரைப்படி இந்தியாவில் பிரிவினை கொள்கைகளைப் பேசுகிறவர்கள் தேர்தலில் நிற்க முடியாது என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். (16ஆவது சட்டத் திருத்தம்) பிறகு 1963இல் தேர்தலில் போட்டியிடுகிறவர்கள்

( 4ஆம் பக்கம்)

தலையங்கம்

## போராட்டக் களமாகும் தமிழகம்

*தமிழ்நாட்டில் மதுக்கடைகளை இழுத்து மூட வேண்டும் என்ற போராட்டம், அரசியல் கட்சிகளையும் தாண்டி மக்கள் போராட்டமாக உருவெடுத்து வருகிறது. சசிபெருமாள் என்ற காந்தியவாதி, கைபேசி கோபுரத்தின் மீது ஏறி நின்று நடத்திய போராட்டத்தில் உயிரிழந்ததைத் தொடர்ந்து போராட்டத்தின் வேகம் அதிகரித்திருக்கிறது. மதுவிலக்கு குறித்து ஜூலை 19இல் தர்மபுரியில் கூடிய திராவிடர் விடுதலைக் கழகச் செயலவை நிறைவேற்றிய தீர்மானத்தின் ஒரு பகுதியை சுட்டிக்காட்ட விழைகிறோம்.*

தமிழ்நாட்டில் ஒரு காலத்தில், ‘மதுக்குடி’ தனிப்பட்ட சிலரின் பழக்கமாக இருந்த நிலை மாறி, இன்று சமூகத்தையே சீர்குலைத்து வருகிறது. மாணவர்களையும் இளைஞர்களையும் போதை அடிமைகளாகவும் குடிநோயாளிகளாகவும் மாற்றி வருவது ஆபத்தான அறிகுறியாகும். மதுக் கடைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதும், விற்பனைக்கு கூடுதலாக இலக்கை நிர்ணயிப்பதும் ஒரு மக்கள் நலன் பேணும் ஆட்சிக்கான செயல் திட்டமாக இருக்க முடியாது.

அதே நேரத்தில் முழுமையாக மதுவிலக்கை நடை முறைப்படுத்துவதிலும் பல ஆபத்துகள் இருக்கவே செய்கின்றன. கள்ளச் சாராயம் வர்த்தகமாகி, காவல்துறை-கள்ளச் சாராய வியாபாரிகள் இரகசிய கூட்டு உருவாகி, மேலும் பல சமூக-சட்ட ஒழுங்கு நெருக்கடிகளை உருவாக்கிவிடும்.

**– தீர்மானத்தின் ஒரு பகுதி**

*முழு மதுவிலக்கு சாத்தியமில்லை என்பதால் தற்போதுள்ள மதுவிலக்கு கொள்கையில் கடுமையான மாற்றங்கள் வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.*

*முதல் கட்டமாக கல்வி நிறுவனங்கள், மக்கள் குடியிருப்பு, மருத்துவமனைகள் உள்ளிட்ட பகுதிகளிலுள்ள மதுக்கடைகளை மூட வேண்டும் என்பதும் இப்போது போராட்டம் நடத்துவோரின் கோரிக்கையாகும். இதில் முழுமையான நியாயம் இருக்கிறது. அ.இ.அ.தி.மு.க. ஆட்சி, இந்தப் போராட்ட உணர்வுகளை அலட்சியப்படுத்துவதும் காவல்துறையின் வழியாக அடக்கி, சட்டம்-ஒழுங்குப் பிரச்சினையாகவே அணுகுவதும் வன்மையான கண்டனத்துக்கு உரியதாகும்.*

*1991இல் தமிழ்நாட்டில் சாராயக் கடைகளை மூடும் உத்தரவைப் பிறப்பித்தவர், இதே முதலமைச்சர் தான். சாராயக் கடைகளை மூட உத்தரவிட்டவர், அதைவிட மோசமான உடல்உறுப்புகளை பாதிக்கக்கூடிய மது வகைகளை ‘டாஸ்மாக்’ மூலம் மக்களிடையே விற்க அனுமதிப்பது என்ன நியாயம்? மனிதாபிமானமுள்ள எந்த ஒரு ஆட்சியும் இப்படி செயல்படாது. அரசியல் செல்வாக்குடன் மது உற்பத்தி தொழிற்சாலைகளை நடத்துவோர், மலிவான ஆபத்தான மது வகைகளை விற்பனைக்குக் கொண்டு வருவதாக கூறப்படுகிறது. இவைகள் அரசு பரிசோதனைக்கு உட்படுத்துவதும் இல்லை. இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு ‘உயிர்க்கொல்லி’கள் மது என்ற பெயரில் விற்பனைச் சரக்காக மாற்றப்படுகின்றன.*

*அறவழியில் நடக்கும் போராட்டங்களை அரசு அலட்சியப்படுத்துகிறது. அதுவே வன்முறைப் போராட்டமாக மாறும்போது மட்டுமே, அரசு திரும்பிப் பார்க்கிறது என்றால், அரசே, வன்முறையைத் தூண்டி விடுவதாகத் தானே அர்த்தம்?*

*மதுக்கடைகளை இழுத்து மூடும் போராட்டம் நடந்தால், அங்கே அது தொடர்பான அதிகாரிகள் வந்து மக்கள் பிரச்சினைகளை கேட்பது இல்லை. மாறாக காவல்துறைதான் வருகிறது. தமிழ் நாட்டில் அனைத்துப் பிரச்சினைகளிலும் தலையிடக்கூடிய அதிகாரம் கொண்ட அமைப்பாக காவல்துறை மாற்றப்படுவதே கடும் கண்டனத்துக்கு உரியதாகும். இப்போது மதுக்கடைகளுக்கு எதிராக நடக்கும் போராட்டம், சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை தொடர்பானது அல்ல. இது சமூகப் பிரச்சினை. எனவே சமூக கண்ணோட்டத்தில் ஆட்சி இதை அணுக வேண்டும்.*

*திராவிடர் விடுதலைக் கழக செயலவை தீர்மானப்படி முதல்கட்டமாக மதுக் கடைகள் எண்ணிக்கையைக் குறைத்து, மதுவுக்கு எதிரான பரப்புரையை மக்கள் இயக்கங்களுடன் இணைந்து அரசு நடத்த முன்வர வேண்டும். ‘எது நடந்தாலும் இறங்கி வர மாட்டோம்’ என்ற ஆணவம் அரசியலில் மக்கள் சக்தி முன் மண்டியிட்டு தோற்றுப் போயிருக்கிறது என்ற உண்மையை தமிழக ஆட்சிப் புரிந்து கொள்ள வேண்டும்!*

# கச்சிதமாகப் பொருந்துகிறார் கலாம்!

முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம், ஜூலை 27ஆம் தேதி ஷில்லாங்கில் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனத்தில் உரையாற்றிக் கொண்டிருக்கும்போதே மாரடைப்பு ஏற்பட்டு சாய்ந்து விட்டார். வேறு எந்த குடியரசுத் தலைவருக்கும் மக்களிடம் கிடைத்திடாத அனுதாபமும் இரங்கல் உணர்ச்சியும் கலாம் அவர்களுக்கு கிடைத்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையல்ல. அரசு அமைப்புகளும் ஊடகங்களும் முழுமையான அர்ப்பணிப்புடன் தங்கள் துயரங்களை வெளிப்படுத்தின. கிராமம், நகரம் வேறுபாடின்றி தமிழகம் முழுதும் கலாமுக்கு அஞ்சலி பதாகைகள் கண்ணீர் செலுத்தின. இது ஒரு வித்தியாசமான நிகழ்வுதான்.

பல அரசியல் தலைவர்களின் மரணங்களை தமிழகம் சந்தித்திருக்கிறது. செய்தி வந்தவுடனேயே தொண்டர்களில் சிலர் வன்முறைகளைக் கையில் எடுத்துக் கொள்வார்கள். கடைகளை அடைக்கச் சொல்லி தாக்குதல் நடக்கும்; பேருந்துகள் கல்வீச்சுகளுக்கு உள்ளாகும்; மூட மறுக்கும் கடைகள் சூறையாடப்படும்; தமிழ் நாட்டின் இந்த ‘அரசியல் கலாச்சாரம்’ அப்துல் கலாமின் மரணத்தில் விடைபெற்றுக் கொண்டது. அனைத்துமே அமைதியாக நடந்து முடிந்தன. கடைகளை தாமாகவே முன்வந்து மூடி, கலாமுக்கு இரங்கலைத் தெரிவித்துக் கொண்டார்கள். அரசியல் தலைவர்களின் நேர்மையில் மக்கள் நம்பிக்கை இழந்து வருகிறார்கள் என்ற உண்மையும், கலாம் மரணத்துக்கு மக்கள் காட்டிய இரங்கல் உணர்த்தி நிற்கிறது.

கலாம் - ஒரு ஏழை படகோட்டியின் மகனாகப் பிறந்தார்; வறுமையில் வாடினார்; உழைத்தார்; படித்தார்; விஞ்ஞானியானார்; குடியரசுத் தலைவர் என்ற அதிகாரத்தின் உச்சத்தைத் தொட்டார். எதிர்ப்புகளே இல்லாத பொதுமைக்கான அடையாளத்தையும் பெற்றார்.

இந்திய அரசியலில் எல்லோருக்கும் இசைவான எதிர்ப்புகளே இல்லாத ஒரு ‘முகமாக’ கலாம், எப்படி மாற முடிந்தது ? இதை சாத்தியப்படுத்தியது எது ? கலாம் இரங்கல் நினைவின் ஊடாக அலசிப் பார்க்க வேண்டிய கருத்துகள் இவை:


பிறப்பால் கலாம் ஒரு முஸ்லிம். ஆனால், தனது மத அடையாளத்துக்கு அழுத்தம் தராதவராகவே இருந்தார். மாறாக, சமூகத்தில் கட்டமைக்கப்பட்டு மக்களின் பொதுப் புத்தியில் திணிக்கப்பட்ட பார்ப்பனியப் பெருமிதங்களோடு தன்னை இணைத்துக் கொண்டார். தமிழ் மறையான திருக்குறளை ஏற்றார். அதற்கு நேர் எதிரான பகவத் கீதையையும் போற்றினார். காஞ்சி சங்கரமடத்துக்கும் போனார். குடியரசுத் தலைவரான தனக்கு இருக்கை தரப்படாததையும் கருதிப் பார்க்காமல் நின்று கொண்டே தரிசனம் பெற்றார். திருப்பதி ஏழுமலையான் தரிசனத்தையும் விட்டு வைக்கவில்லை. இந்தியாவின் பார்ப்பனியம் பெருமைக்குரியதாக அடையாளப்படுத்தியிருக்கும் குறியீட்டு நிறுவனங்களாக இந்த இரண்டையும் குறிப்பிடலாம்.

இஸ்லாமியர்களாக இருந்தாலும், பார்ப்பனிய கலாச்சார அடையாளங்களோடு சமரசம் செய்து கொண்டால் அவர்கள் போற்றுதலுக்குரிய பெருமக்கள்; உண்மையான தேசபக்தர்கள் - கலாம் இதற்கு உடன்பட்டார். எனவே எல்லோருக்கும் ‘பொதுமை’யானார்.

இரண்டாவது, இந்தியாவில் ஜாதி, தீண்டாமை, சமூக ஒடுக்குமுறைகள், வர்க்க ஏற்றத் தாழ்வுகள், தேசிய இனப் பிரச்சினைகள் என்று பிரச்சினைகள் ஏதுமில்லாதது போலவும், இந்தியாவில் வாழும் அனைவருமே ‘இந்தியர்களாகி’ - இந்தியா என்ற தேசம் ஒருமைப்பட்டுவிட்டதாகவும், இதை வல்லரசாக்குவதே அடுத்த இலக்கு என்றும், பார்ப்பனியம் புனைந்துள்ள பொய்மைகளை, அப்படியே எதார்த்தமாக கலாம் ஏற்றுக் கொண்டதாகும்.

இந்த நாட்டில் புரையோடிக் கிடக்கும் ஆழமான பிரச்சினைகளில் அது சமூக நீதியாகட்டும், ஜாதி-தீண்டாமை வெறியாகட்டும்; பன்னாட்டு வணிகமாகட்டும்; இயற்கை வளங்கள் சுரண்டலாகட்டும் - எது குறித்தும் அப்துல்கலாம் கருத்து தெரிவிக்காத மனிதராகவே இருந்தார்.

கலாம் முன் வைத்த ‘தேசபக்தி’, தேசத்தின் வலிமையை பேசியது, இராணுவ வலிமையையும், அணு



குண்டுகள் தயாரிப்பையும், அணுமின்சார உற்பத்தியையும் நியாயப்படுத்தியது; பார்ப்பனிய அரசுக்கு இது தானே வேண்டும் ? அவரை கொண்டாடி மகிழ்ந்தது.

மக்கள் பொதுப் புத்தியில் தனக்கான இடத்தை உறுதி செய்வதற்கு அப்துல்கலாமுக்கு பேராயுதமாக இருந்தது அவரது எளிமை. அரசு அமைப்பு தனக்கு வழங்கிய அதிகாரங்களுக்குள் முடக்கிக் கொள்ள விரும்பாத அவர், துணிவாக அவற்றை வெறுத்து ஒதுக்கி எளிமையை வாழ்வாக்கிக் கொண்டார். குடியரசுத் தலைவர் மாளிகையை இல்லாதவர்களுக்கு திறந்து விட்டார். மாளிகையை விட்டு வெளியேறிய பிறகும், சம்பிரதாயங்களை தகர்த்து ஆசிரியராகப் பணி தொடர்ந்தார். குழந்தைகள், இளைஞர்களுடன் உறவாடினார். மக்கள் நெஞ்சத்துக்குள் கலாம் நுழைவதற்கான கதவுகளை அவரது இந்த எளிமை அகலமாகவே திறந்து வைத்தது.

ஆனால், எளிமையும், நேர்மையும் உயர் பண்புகளும் மட்டுமே இந்த பார்ப்பனிய அரசு அமைப்புக்குள் தலைவர்களை புகழின் உச்சிக்கு ஏற்றி விடுமா ? அதுதான் இல்லை. இந்த பண்புகள் பார்ப்பன அரசு கட்டமைப்புக்குப் பயன்பட்டால் மட்டுமே இது சாத்தியம்.

இதே எளிமை-நேர்மை-அறிவாற்றல்களில் மேன்மையுற்று, குடியரசுத் தலைவர் பதவியை அலங்கரித்தவர்தான் கே.ஆர். நாராயணன். ஆனால், அப்துல்கலாமைப் போல் ஏன் அவர் ‘ஆராதிக்கப் படாமல்’ போனார் ? ஆழ்ந்து, அமைதியாக சிந்தித்தால் ஒரு உண்மை புலப்படும்.

கே.ஆர். நாராயணன், பார்ப்பன அரசமைப்போடு தன்னை கரைத்துக் கொள்ள தயாராக இல்லை. சமூக நீதிக்காக அவர் பேசினார். அரசியல் சட்டத்துக்கு மதச் சாயம் பூசுவதற்கான முயற்சிகள் நடந்தபோது, அவரது போர்க்குரல் கேட்டது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிகள், ஆளுநர் அதிகார மய்யங்களால் கலைக்கச் செய்த முயற்சிகளுக்கு அவர் உடன்படவில்லை; சங்கரமடம் பக்கம் திரும்ப மறுத்தவர். இப்படி ஏராளமாகப் பட்டியலிட முடியும்.

அதே நேரத்தில், கலாம் - பார்ப்பனியக் கட்டமைப்பிலிருந்து அவ்வப்போது விலகி நின்ற புள்ளிகளும் இருக்கவே செய்தன. அவரது தூக்குத் தண்டனை எதிர்ப்பைக் குறிப்பிடலாம். (ஆனாலும் தனஞ்செய் சட்டர்ஜி கருணை மனுவை நிராகரித்தவரும் கலாம் தான்). ஆனால், தமிழ் வழிக் கல்வி பற்றிய அவரது கருத்தைக் கூறலாம். கலாமுக்கு ஊடகங்களும் அரசு நிறுவனங்களும் சூட்டிய புகழ்மாலைகளில் இவை இடம் பெறவில்லை; சருகுகளாக உதறிவிடப்பட்டு விட்டன. அவரது உடல் அடக்கம் செய்த அதே நாளில் கலாமின் புகழ் பாடிக்கொண்டே அவரது கொள்கைக்கு எதிராக யாகூப் மேமன் தூக்கிலிடப்பட்டார். கலாமின் உடலோடு அவர் வலியுறுத்திய கருத்தும் சேர்த்தே தான் புதைக்கப்பட்டது.

நேர்மையும் எளிமையும் தியாகமும் நிறைந்த வாழ்க்கைகளோடு எதிர்நீச்சல் போட்ட எத்தனையோ தலைவர்கள் அனைத்து மக்களுக்கான ‘முகமாக’ மாற முடியவில்லை. காரணம், அவர்கள் முகமூடிகள் அணிய மறுத்தார்கள். ‘உத்தமர்’களாக, ‘புனிதர்’களாக ஏற்றிப் போற்றப்படும் பெருமைகள் கிடைக்க வேண்டுமானால் பார்ப்பனியமும் அரசும் புனைந்துள்ள அரசியல் கலாச்சார அடையாளங்களுக்குள் பொருத்திக் கொண்டால் மட்டுமே முடியும். கலாம், அதில் கச்சிதமாக பொருந்தினார். புகழும் பெருமையும் காலடியில் வந்து சேர்ந்தது.

ஒருவரின் மரணத்துக்கான இரங்கல் செய்தியில் புகழ்ச்சிகள் மட்டுமே இழையோட வேண்டியது அவசியமில்லை; ஆய்வுகளுக்கும் அதில் இடமுண்டு. பெரியார் விட்டுச் சென்ற பெருமைக்குரிய மரபு இது !

**– இரா**


# கழகத் தலைவர்–பொதுச்செயலாளர் பங்கேற்ற கழகக் கலந்துரையாடல் கூட்டங்கள்


கோவை


கோபி



ஈரோடு


திருப்பூர்

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பங்கேற்ற மாவட்டக் கலந்துரையாடல் கூட்டங்கள் ஜூலை 29ஆம் தேதி முதல் ஈரோட்டிலிருந்து தொடங்கின. ஈரோடு ரெசிடென்சி அரங்கில் பகல் 11 மணியளவில் கடவுள் ஆத்மா மறுப்புடன் கூட்டம் தொடங்கியது. மலேசிய மாந்த நேய திராவிடர் கழகத்தைச் சார்ந்த வே.சு. மணியம், தமிழகத்தில் பயணம் மேற்கொண்டிருக்கிறார். ஈரோடு பெரியார் நினைவிடத்தைப் பார்வையிட வந்த அவர், கழகத் தலைவர் கொளத்தூர் மணியை சந்தித்துப் பேசிய பிறகு, மாவட்டக் கழகக் கூட்டத்தில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, மலேசியாவில் கழகப் பணிகளை விளக்கி, சற்று நேரம் உரையாற்றி விடைபெற்றார். கலந்துரையாடலில் கழக அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, மாவட்ட செயலாளர் சண்முகப் பிரியன், மாவட்டத் தலைவர் செல்லப்பன், அமைப்பாளர் குமார், செல்வராஜ், மாணவர் விஜயரத்தினம், கிருஷ்ணமூர்த்தி, சத்தியமூர்த்தி, நகரத் தலைவர் திருமுருகன், இராசன்னா, சுகுணா, கோபிநாத், இசைக்கதிர், சித்தோடு எழில், ஆதரவாளர் முருகேசன், நடராசன், மோகன்ராஜ், ஆசிரியர் சிவக்குமார், அறிவியல் மன்ற அமைப்பாளர் ஆசிரியர் சிவகாமி, மூத்த பெரியார் தொண்டர்கள் இனியன் பத்மநாபன், அறிவுக்கன்பன் ஆகியோர் கருத்துகளை முன் வைத்தனர்.

ஒரு கிராமத்தைத் தத்தெடுத்து வாரம் ஒருமுறை பரப்புரை செய்தல்; பயிற்சி முகாம்களை நடத்துதல்; ஜாதி மறுப்புத் திருமணம் புரிவோருக்கு பாதுகாப்பு தரும் அமைப்புகளை உருவாக்குதல், தமிழின உணர்வோடு செயல்பட்ட காமராசர், புரட்சிக் கவிஞர் போன்ற தலைவர்களுக்கு விழா எடுத்து, அதன் வழியாக கொள்கைகளை பரப்புதல் உள்ளிட்ட பல்வேறு ஆக்கப்பூர்வ யோசனைகளை தோழர்கள் முன் வைத்தனர். பொதுச் செயலாளர் உரையைத் தொடர்ந்து, கழகத் தலைவர் நிறைவுரையாற்றி பொறுப்பாளர்களை அறிவித்தார். (விவரம்: தனியே வெளியிடப்பட்டுள்ளது)

**கோபி :** அதே நாளில் பிற்பகல் 4.30 மணியளவில் கோபி 'லைன்ஸ் கிளப்' அரங்கில் மாவட்டக் கலந்துரையாடல் நடைபெற்றது. ஈரோடு ப. சிவக்குமார், கடவுள், ஆத்மா மறுப்புகளைக் கூற, வெளியீட்டு பிரிவு செயலாளர் இராம. இளங்கோவன் தொடக்க உரையாற்றினார். மாவட்ட தலைவர் நாத்திக ஜோதி, பவானி வேணுகோபால், மாவட்ட செயலாளர் அர்ஜூனன், எலத்தூர் அழகிரி, நம்பியூர் ரமேஷ், கொடிவேரி ஜெயக்குமார், சூர்ய பிரகாசு, மூர்த்தி, அலங்கியம் ரவி, வேல் முருகன், கலைச்செல்வன், கொளப்பலூர் சுப்ரமணி, துரை, மூர்த்தி, சதுமுகை பழனிச்சாமி, பேச்சாளர் வேல்சாமி, ஓய்வு பெற்ற ஆசிரியர் காளியண்ணன் மற்றும் அறிவியல் மன்ற சார்பில் ஆசிரியர் சிவகாமி, ரஞ்சிதா ஆகியோர் கருத்துகளை முன் வைத்தனர். பொதுச் செயலாளர் உரையைத் தொடர்ந்து, கழகத் தலைவர் நிறைவுரையாற்றினார்.

மாவட்ட கழக அமைப்பு செயல்பாடுகள் தொடர்பாக, கழகத் தோழர்கள் கருத்துகளை முன் வைத்தோடு மாவட்டக் கழகம் தீவிரமாக செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தினர். மாவட்டக் கழகப் பொறுப்பாளர்களை கழகத் தலைவர் அறிவித்தார். (தனியே வெளியிடப்பட்டுள்ளது)

**திருப்பூர் :** 30.7.2015 அன்று காலை 11 மணியளவில் திருப்பூரில் மாவட்டக் கலந்துரையாடல் தொடங்கியது. மாவட்டக் கழகத் தலைவரும் கழகப் பொருளாளருமான திருப்பூர் துரைசாமி உரையைத் தொடர்ந்து, கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்துரையாடல் கூட்டத்தின் நோக்கத்தை எடுத்துக் கூறி, தோழர்கள் தங்கள் கருத்துகளை மனம் திறந்து முன் வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மாவட்ட செயலாளர் முகில்ராசு, அமைப்பாளர் சண்முகம், மாநகர செயலாளர் குமார், மணிகண்டன், பல்லடம் வடிவேலு, பல்லடம் மணிகண்டன், நீதிராசன், கருணாநிதி, பரிமளராசன், முகில் முத்து பிரசாத், தன கோபால், நாராயண மூர்த்தி, அகிலன், மலரினியன், பல்லடம் சுந்தரமூர்த்தி, சங்கீதா, மாஸ்கோ நகர் நகுலன், பானு, மூர்த்தி, உடுமலை குணசேகரன், பிரசாத், மாப்பிள்ளைசாமி, ஆசிரியர் சிவசாமி, குட்டிமணி, தண்டபாணி ஆகியோர் பேசினர்.

மாவட்டக் கழகம், நகரக் கழகம் தொடர்பான செயல்பாடுகளில் தோழர்கள் எழுப்பிய பிரச்சினைகளுக்கு மாவட்ட செயலாளர் முகில்ராசு விளக்கமளித்தார். கழகத் தலைவர் நிறைவாக எழுப்பப்பட்ட பிரச்சினைகளுக்கு விளக்கமளித்து, கழகப் பொறுப்பாளர்களை அறிவித்தார். (தனியே வெளியிடப்பட்டுள்ளது)

**கோவை :** மாலை 4 மணியளவில் கோவை மாநகர் மாவட்ட கலந்துரையாடல் ஆதித் தமிழர் அரங்கத்தில் நடைபெற்றது. நேரு வரவேற்புரையாற்ற, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் அறிமுகவுரையைத் தொடர்ந்து மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன், சூலூர் பன்னீர் செல்வம், உக்கடம் கிருட்டிணன், கிணத்துக்கடவு நிர்மல் குமார், அன்னூர் முருகேசன், மாணவர் வெங்கடேசன், சூலூர் பார்த்திபன், ஆதரவாளர் சாந்த குமார், நேரு தாஸ், அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, பொருளாளர் துரைசாமி ஆகியோர் பேசியதைத் தொடர்ந்து, கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரையாற்றி, பொறுப்பாளர்களை அறிவித்தார். பொள்ளாச்சி மாவட்டக் கழகத்தை, கோவை மாவட்டக் கழகத்துடன் இணைப்பது என்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

பயிற்சி முகாம்களை நடத்துதல்; கழக ஏடான 'புரட்சிப் பெரியார் முழக்கம்' ஏட்டுக்கான உறுப்பினர் சேர்ப்பு இயக்கத்தை தீவிரப்படுத்துதல்; 'எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்; எங்கள் தலைமுறைக்கு வேலை வேண்டும்' பரப்புரை இயக்கத்தை திட்டமிட்டு சிறப்பாக நடத்துதல்; புதிய நூல்களை வெளியிடுதல்; கழகப் பரப்புரை வாகனங்களை முழுமையாகப் பயன்படுத்துதல்; கழகத்தில் செயல்படத் தொடங்கியுள்ள புதிய இணைய தளம், மாவட்ட வாரியாக இணைய தளத்தில் செய்திகளை ஒருங்கிணைக்க செய்தி தொடர்பாளர்களை நியமித்தல் ஆகிய செயல்பாடுகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. இரண்டாம் கட்டப் பரப்பரைக் கூட்டங்கள் ஆகஸ்டு 5ஆம் தேதி சேலத்திலிருந்து தொடங்குகிறது.

**நமது செய்தியாளர்**

DATE OF PUBLICATION 06.08.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# தமிழகத்தில் நுழையும் புதிய அடக்குமுறை சட்டம்!

(முதல் பக்கத் தொடர்ச்சி)

ஒருமைப்பாடு உறுதி ஏற்க வேண்டும் என்று சட்டம் கொண்டு வந்தார்கள். இதேபோல்தான் இலங்கையில் தமிழ் ஈழம் கேட்பவர்கள், தேர்தலில் நிற்க முடியாது என்று 1978இல் சட்டம் கொண்டு வரப்பட்டது. தமிழ் ஈழத்தை முன்வைத்து போட்டியிட்டு வெற்றி பெற்று வந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவிகள் பறிக்கப்பட்டன.

டி.அய்.ஆர்., 'மிசா', 'என்.எஸ்.ஏ.', 'தடா', 'பொடா', 'பொடோ' கிரிமினல் சட்டத் திருத்தம் என்று 'சுதந்திர' இந்தியாவில் எத்தனையோ அடக்குமுறை சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. இது தவிர மாநில அரசுகளும், இதுபோன்ற சட்டங்களைக் கொண்டு வந்திருக்கின்றன.

2008இல் மும்பை தாக்குதலைத் தொடர்ந்து சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தில் கொடூரமான பிரிவுகள் சேர்க்கப்பட்டு திருத்தச் சட்டம் 2008 டிசம்பரில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டத்தை நாடாளுமன்றக் குழுவின் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும் என்றும் பல உறுப்பினர்கள் வலியுறுத்தினார்கள். ஆனால், ஆட்சியாளர்கள் அதை செவிமெடுக்கவில்லை. நாடாளுமன்றமும் விரிவாக விவாதிக்க வில்லை. மனித உரிமைகளுக்கு எதிரானவை என்று புறந்தள்ளப்பட்ட 'தடா', 'பொடா' சட்டத்தில் இடம் பெற்ற பல பிரிவுகள் இதில் சேர்க்கப்பட்டன. அரசுக்கு எதிராக வெறுப்பை உருவாக்கும் வகையில் எதை பேசினாலும், இந்த சட்டப்படி குற்றம். அத்யாவசியப் பொருள்களை தடுத்தல் குற்றம்; இதன்படி இரயில் மறியல் செய்தால்கூட இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்ய முடியும். ஒரு அமைப்பாக செயல்படாமல் தனித்தனியாக நண்பர் குழு வாகவோ அல்லது படிப்பு வட்டமாகவோ செயல்படுவதை அரசு விரோதம் என்று கருதினால் இந்த சட்டத்தின் கீழ் கைது செய்ய முடியும். ஒரு அமைப்பில் உறுப்பினராவதே கிரிமினல் குற்றமாக்கப்படுவது அரசியல் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளுக்கே எதிரானது.

இந்தச் சட்டம் 1967ஆம் ஆண்டு முதன்முறையாக கொண்டு வரப்பட்டபோதே சட்டத்தின் பிரிவுகளைப் பரிசீலித்த கூட்டு நாடாளுமன்றக் குழு சட்ட விரோதமாகக் கருதப்படும் இயக்கத்தின் மீதான தடையை மூன்று ஆண்டுகளிலிருந்து இரண்டு ஆண்டுகளாகக் குறைக்க வேண்டும் என்று கூறியதோடு, அடிப்படை உரிமைகளை மிகக் கடுமையாக இது மீறுவதாகக் கூறியது. அப்போது உறுப்பினராக இருந்த வாஜ்பாய், 'இது ஒரு கழுதை சட்டம், குதிரை உருவில் கொண்டு வரப்பட்டிருக்கிறது' என்றார். ஜார்ஜ் பெர்னாண்டஸ், இயக்கத்தை தடை செய்வதை ஓராண்டாகக் குறைக்க வேண்டும் என்றார். இவ்வளவும் மீறப்பட்டு 5 ஆண்டுகள் வரை ஒரு இயக்கத்தைத் தடைப்படுத்த சட்டம் திருத்தப்பட்டுள்ளது.

பொய்யான குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு தண்டனைக்கு உள்ளாகிறவர்கள், அரசிடம் இழப்பீடு கோருவதற்கு 'பொடா' சட்டத்தில் இருந்த உரிமைகூட (58ஆவது பிரிவு) இந்தச் சட்டத்தில் பறிக்கப்பட்டுள்ளது. தடை செய்யப்பட்ட அமைப்போடு தொடர்பு இல்லாதவர்களைக்கூட இந்தச் சட்டத்தில் கைது செய்ய முடியும். அப்படி கைது செய்யப்பட்டவர்கள் தங்களுக்கும், இயக்கத்துக்கும் தொடர்பு இல்லை என்பதற்கான ஆதாரங்களை அவர்கள்தான் முன்வைக்க வேண்டும் என்று குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீதே சுமையைத் தூக்கி வைக்கிறது. மனித உரிமைப் போராளி, டெல்லிப் பல்கலைக்கழக பேராசிரியர் ஜி.என்.சாய்பா, 90 சதவீதம் ஊனமுற்றவர். சக்கர நாற்காலியில் நகரக்கூடிய அவரை 2014 மே மாதம் இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்தார்கள். அவரது வீட்டில் ஆட்சேபத்துக்குரிய நூல்கள், ஆவணங்கள் இருந்தன என்பதுதான் அவர் மீது சுமத்தப்பட்ட குற்றம். 14 மாத சிறைவாசத்துக்குப் பிறகு, கடந்த ஜூலையில் 3 மாத பரோலில் விடு விக்கப்பட்டுள்ளார். இதே சட்டத்தின் கீழ் மருத்துவர் வினாயக்சென் கைது செய்யப்பட்டு, எந்த விசாரணையும் இன்றி இரண்டு ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டார். ஆனால், கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட பார்ப்பனர் சங்கராச்சாரி, ஒரு மாதத்திலேயே உச்சநீதிமன்றத்தில் விடுதலை செய்யப்பட்டு விடுகிறார். பிணை வழங்கிய நீதிபதி, அதற்கான பிணை உத்தரவிலேயே சங்கராச்சாரி குற்றமற்றவர் என்று 'தீர்ப்பே' எழுதுகிறார்.

தமிழ்நாட்டில் என்ன நிலை ? ஜாதி ஆணவப் படுகொலைகளைத் தடுக்க ஒரு சட்டம் இயற்ற, 2012ஆம் ஆண்டிலேயே ஒரு சட்ட வரைவை உருவாக்கி, சட்ட ஆணையம் மாநில அரசுகளின் கருத்து கேட்டு அனுப்பியது. தென்னகத்தில் அனைத்து மாநிலங்களும் கருத்து தெரிவித்துவிட்டன. தமிழ்நாட்டில் அக்கட்சியினரால் 'தெய்வமாகக்' கொண்டாடப்படும் 'தெய்வத்தாய்' ஆட்சி இதுவரை, இது குறித்து கருத்து தெரிவிக்கவில்லை. கோகுல்ராஜ் எனும் தலித் பொறியியல் பட்டதாரி ஜாதி கடந்து காதலித்ததற்காக கொலை செய்யப்பட்ட வழக்கில் நேரடி தொடர்புடைய குற்றவாளி யுவராஜ் இன்னும் கைது செய்யப்படவில்லை. அவர் 'வாட்ஸ் அப்' வழியாக காவல்துறைக்கே சவால்விட்டுப் பேசுகிறார். தவறான குற்றச்சாட்டில் தண்டிக்கப்பட்டு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு, பிறகு குற்றம் தவறானது என்று நிரூபிக்கப்பட்டால் அவர்களை விடுதலை செய்யும் வழிமுறைகள் அமெரிக்காவில் இருக்கின்றன. ஆனால், பேரறிவாளன் வாக்குமூலத்தைத் தான் தவறாகப் பதிவு செய்ததாக பதிவு செய்த அய்.பி.எஸ். அதிகாரி தியாகராஜன் ஒப்புக் கொண்டப் பிறகும், விடுதலை செய்வதற்கு சட்டம் அனுமதிப்பதில்லை. மாவோயிஸ்டு களுக்கு ஆதரவாக இருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் கோவையிலே தோழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தக் கைதுக்கு தமிழகத்தில் சட்டவிரோத தடுப்புச் சட்டத்தை (1967)பயன்படுத்தத் தொடங்கிவிட்டார்கள். தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சி 'பொடா' சட்டம் கொண்டு வந்தபோது, அறிவுப்பு வந்தவுடனே அதை அனைத்துக் கட்சிகளையும் திரட்டி பெரியார் திராவிடர் கழகம் எதிர்த்தது. பின்னர், பொடோ சட்டம் வந்தபோது தந்தை பெரியார் திராவிடர் கழகம் அனைத்துக் கட்சிகளையும் திரட்டி எதிர்ப்பைத் தெரிவித்தது. இனி தமிழக காவல்துறை முறைகேடாக இந்தச் சட்டத்தை கட்டவிழ்த்துவிடும் என்று எதிர்பார்க்கலாம். இந்த அடக்குமுறை சட்டங்களின் ஆபத்துகளை எதிர்த்து, மக்களிடம் விழிப்புணர்வை உருவாக்க வேண்டியது நமது கடமை. இதற்கான இயக்கத்தில் திராவிடர் விடுதலைக் கழகம் முழுமையாகப் பங்கேற்கும் என்று கொளத்தூர் மணி பேசினார்.

கருத்தரங்கில், கு. இராமகிருட்டிணன் (த.பெ.தி.க.), இரவிக்குமார் (ஆதித் தமிழர் விடுதலை முன்னணி), வி.எம். அபுதாகீர் (எஸ்.டி.பி.அய்.), இலக்கியன் (வெல்பேர் பார்ட்டி), நாகை திருவள்ளுவன் (தமிழ்ப் புலிகள்), வழக்கறிஞர் பழனியாண்டி (குடியுரிமை பாதுகாப்பு நடுவம்), வடிவேல் (ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம்) ஆகியோர் உரையாற்றினர். அரங்கம் முழுதும் கூட்டம் நிரம்பி வழிந்தது.

**– நமது செய்தியாளர்**

# மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

மாவட்டக் கலந்துரையாடல் கூட்டங்களில் கழகத் தலைவர் அறிவித்த மாவட்டப் பொறுப்பாளர்கள்.

**ஈரோடு (தெற்கு) மாவட்டப் பொறுப்பாளர்கள்**

மாவட்ட தலைவர் - சென்னிமலை செல்லப்பன்; மாவட்ட செயலாளர் - கு. சண்முக பிரியன்; மாவட்ட அமைப்பாளர்கள் - சென்னிமலை செல்வராசு, மரவபாளையம் குமார், மாநகர செயலாளர் - சிவானந்தம், மாநகர தலைவர் - திருமுருகன், மாநகர துணைத் தலைவர் - சத்தியராசு; பெருமாள்மலை கிளை தலைவர் - ராசன்னா; சித்தோடு கிளை தலைவர் - சத்தியராசு. மாவட்ட பொருளாளர் - மணகாட்டூர் கிருஷ்ணமூர்த்தி; மாவட்ட செய்தி தொடர்பாளர் - ஆசிரியர் மோகன்ராசு; மாவட்ட ஆலோசனை குழு உறுப்பினர் - அறிவுக்கன்பன், இனியன் பத்மநாபன், சென்னிமலை கோபிநாத்.

**ஈரோடு மாவட்டப் (வடக்கு) பொறுப்பாளர்கள்**

மாவட்ட தலைவர் - நாத்திகசோதி; மாவட்ட அமைப்பாளர் - ம. நிவாசு; மாவட்ட செயலாளர் - ந. வேணுகோபால்.

கோபி ஒன்றிய செயலாளர் - நா. அருளானந்தம்; நம்பியூர் ஒன்றிய செயலாளர் - இரமேசு; சத்தி ஒன்றிய செயலாளர் - இறையிலன் மூர்த்தி; டி.என்.பாளையம் ஒன்றிய செயலாளர் - செயக்குமார்; அந்தியூர் ஒன்றிய செயலாளர் - அர்ச்சுனன்; பவானி ஒன்றிய செயலாளர் - வினோத்; அம்மாபேட்டை ஒன்றிய செயலாளர் - வேல்முருகன்; பெருந்துறை ஒன்றிய செயலாளர் - துரை (கூதாம்பி).

தமிழ்நாடு அறிவியல் மன்றம் : மாவட்ட தலைவர் - இரா. காளியண்ணன் (மாவட்ட கல்வி அதிகாரி, ஓய்வு); மாவட்ட செயலாளர் - வீரன் (ஆசிரியர்); மாவட்ட அமைப்பாளர் - சுந்தரம் (ஆசிரியர்)

தமிழ்நாடு மாணவர் கழகம் : மாவட்ட அமைப்பாளர் - மூர்த்தி (கூதாம்பி); செய்தி தொடர்பாளர் - நிவாஸ்.

**திருப்பூர் மாவட்டப் பொறுப்பாளர்கள் :** மாவட்ட தலைவர் - சு. துரைசாமி; மாவட்ட செயலாளர் - முகில் இராசு.

திருப்பூர் நகரப் பொறுப்பாளர்கள்: மாநகர தலைவர் - சம்பூகன்; மாநகர செயலாளர் - நீதிராசன்.

**கோவை மாவட்டப் பொறுப்பாளர்கள் :** மாவட்ட தலைவர் - மேட்டுப் பாளையம் இராமச்சந்திரன்; மாவட்ட செயலாளர் - வீரபாண்டி பாபு; மாவட்ட அமைப்பாளர் - அன்னூர் முருகேசன்.

மாநகரத் தலைவர் - இனியன் நேருதாஸ்; செயலாளர் - கிணத்துக்கடவு நிர்மல் குமார்; பொருளாளர் - உக்கடம் கிருஷ்ணன்.

சூலூர் ஒன்றியம் - சூலூர் பன்னீர் செல்வம். உக்கடம் தெற்கு - பாருக்.

தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர் - வெங்கடேசன்.

வழக்கறிஞர் அணி - வழக்கறிஞர் தருமலிங்கம்

பொள்ளாச்சி மாவட்டம் கோவை மாவட்டத்துடன் இணைக்கப்படுகிறது.

# கழகத்தின் புதிய இணையதளம் dvkperiyar.com

நமது இயக்கத்தின் இணைதளம் dvkperiyar.com செயல்பட தொடங்கியுள்ளது. இந்த இணையதளத்தில் தலைமை கழகத்தின் அறிக்கை, 'புரட்சி பெரியார் முழக்க'த்தின் தலையங்கம், சிறப்பு கட்டுரை, மற்றும் குடிஅரசு செய்தி, ஏதேனும் ஒன்று முகப்பு பக்கத்தில் வாராவாரம் தகவல் உள்ளீடு செய்யப்படும்

செயற்களம் பகுதியில் அந்தந்த மாவட்ட செய்திகள் மற்றும் நிகழ்வுகள் அட்டவணை செய்யப்பட்டுள்ளது. மாவட்ட செய்திகள் மற்றும் நடைபெற உள்ள நிகழ்வுகளை மற்றவர்களுக்கு உடனுக்குடன் தெரியப்படுத்த **dvkperiyar@gmail.com** என்ற முகவரிக்கு அனுப்பவும். அனுப்பும் புகைப்படங்களில் ஏதேனும் ஒன்று landscape இருப்பது சிறப்பு. மேலும் காணொளிகள் ஏதேனும் இருந்தால் youtube ஏற்றி உரலி (link) அனுப்பவும். எந்த மாவட்டத்தின் கீழ் செய்தி வரவேண்டும் என்பதையும் தெரியப்படுத்தினால் உள்ளீடு செய்ய உதவியாக இருக்கும்.

கழக மின்னூல்கள், குடிஅரசு மின்னூல்கள் மற்றும் 'புரட்சிப் பெரியார் முழக்கம்' மின்னூல்கள் வரும் நாட்களில் இணையத்திலேயே முழுதுமாக ஏற்றப்படும். குடிஅரசு யூனிக்கோடாகவும் படிக்க, காணொளிகள் மற்றும் பாடல்கள் ஏற்றவும் பணிகள் நடைபெற்று வருகிறது.

**– தலைமை நிலையம்**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 6th August 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | ஆகஸ்டு 13, 2015 | புரட்சி 14 | முழக்கம் 31 | விலை: ரூ.3.00

## இது ‘சுதந்திர’ நாடா?

1950 ஜனவரி 26ஆம் தேதிய பலன், 1947 ஆகஸ்டு 15ஆம் தேதியைப் போல் ஒரு விலாசம் மாற்றும் தினமே யாகும். அதே முதலாளிதான்; அதே பணப்பெட்டிதான்; அதே தராசுதான்; அதே படிக் கல்தான்; அதே சரக்குதான்; அதே பித்தலாட்டம் தான். ஆனால், விலாசம் அதாவது ‘டிரான்ஸ்வர்’ செய்யப்பட்டது மட்டும் மாற்றம் அடைகிறது. குடிஅரசு ஆட்சி என்கிற புதுப் பெயரால் பழைய கொடுங்கோல் ஆட்சியே மேலும் அதிக பலத்துடனும், அதிகப் பாதுகாப்புடனும் 26-ந் தேதி முதற்கொண்டு நடைபெறப் போகிறது.

**– பெரியார்.**
(‘விடுதலை’, 20.1.1950)

நிற்க, மேல்நாடுகளில் ‘சுதந்திர நாள்’, ‘சுதந்திர ஆண்டு விழா’க் கொண்டாடுவது போல், நம் நாட்டில் சுதந்திர நாள், ஆண்டு விழாக் கொண்டாடுவது – புலியைப் பார்த்துப் பூனை சூடு போட்டுக் கொண்டதைப் போலாகும்.

மேல்நாட்டார்கள் சுதந்திரம் பெற்றபின் பெற்ற நாளைக் குறி வைத்துக் கொண்டாடுகிறார்கள். நாம் அதுபோல் கொண்டாட நமக்குச் சுதந்திரம் வந்து விட்டதா? நாம் ஏதாவது சுதந்திரத்தை அனுபவிக்கிறோமா? என்பதைப் பற்றி நமக்குக் கடுகளவு யோசனையும் இல்லாமல் – நம்மை அடிமைப்படுத்தி வைத்திருப்பவர்களின் சூழ்ச்சிக்கும் வஞ்சத்திற்கும் ஆளாகி அடிமைத் தளையை இறுக்கிக் கொள்ள நாம் ‘சுதந்திர விழா’க் கொண்டாடுகிறோம்.

இந்த நாட்டின் சுதந்திரம் பணக்காரர் மீது, ஏழை மூட மக்களை ஏவி விடுவதாக இருக்கிறதேயொழிய-மனிதனை (நம்மை) நாயிலும், பன்றியிலும் கேடாக இழிவுபடுத்தி, கீழ்சாதி ஆக்கிய ‘கடவுள்’, ‘சாஸ்திரங்களையோ’, சட்டங்களையோ, மக்களையோ – ஏனென்று கேட்க நாதியில்லை.

சுதந்திர நாட்டில் பிராமணன், சூத்திரன், பறையன், சக்கிலி இருக்கலாமா? அப்படி இருக்கும் நாடு சுதந்திர நாடா? ‘நரக’ நாடா?

இதை ஒழிக்கப் பாடுபட இந்த நாட்டில் ஏதாவது உரிமை இருக்கிறதா? உரிமை கேட்க வழி இருக்கிறதா? சுதந்திர நாட்டில் மனித சமுதா யத்தையே அடிமைப்படுத்தி மடையர்களாக ஆக்கி வைத்திருக்கும் இனத்தினர் (பார்ப்பனர்) மந்திரியாய், தலைவராய் இருக்கின்றார்கள் என்றால் இது சுதந்திர நாடாகுமா?

**– பெரியார்.**
(‘விடுதலை’, 15.8.1957)

# மாவட்ட கலந்துரையாடல் கூட்டங்களின் எழுச்சி

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, பொருளாளர் திருப்பூர் துரைசாமி ஆகியோர் மாவட்டந்தோறும் கழகத் தோழர்களை மாவட்ட கலந்துரையாடல் கூட்டங்களில் பங்கேற்று சந்தித்து வருகிறார்கள். கழக அமைப்புகளின் பணிகளை மேலும் தீவிரப்படுத்தவும், “எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்; எங்கள் தலைமுறைக்கு வேலை வேண்டும்” பரப்புரை இயக்கத்துக்கு திட்டமிடவும் கழக ஏடான ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ ஏட்டுக்கு மேலும் சந்தாக்களை சேர்ப்பது குறித்தும் கூட்டங்களில் விரிவாக விவாதிக்கப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு கூட்டத்திலும், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கூட்டத்தின் நோக்கத்தை விளக்கி தொடக்க உரை நிகழ்த்தினார். பெரியாரியம் சந்திக்கும் புதிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க பெரியாரியலை வளர்த்தெடுக்க வேண்டிய தேவைகள் குறித்தும், ஜாதி-தீண்டாமை வெறியை தூண்டிவிட்டு குளிர் காய நினைக்கும் ஜாதி சங்கத் தலைவர்கள் தூண்டிவிடும் ஜாதி வெறியை முறியடிப்பது குறித்தும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட இளைஞர்களுக்கு கார்ப்பரேட் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு உரிமைகளை உறுதி செய்வதற்கான சமூக நீதிப் போராட்டத்தை முன்னெடுப்பதன் அவசியம் குறித்தும் தனது முன்னுரையில் விளக்கினார்.

மாவட்டக் கலந்துரையாடலின் இரண்டாம் கட்டப் பயணம் ஆகஸ்ட் 5ஆம் தேதி சேலம் மேற்கு மாவட்டம், மேட்டூரிலிருந்து தொடங்கியது. மேட்டூர் தாய்த் தமிழ்ப் பள்ளியில் நடந்த கூட்டத்தில் தோழர் கோவிந்தராஜ் - கடவுள், ஆத்மா மறுப்புகளைக் கூறினார். தொடர்ந்து மாவட்டத் தலைவர் சூரிய குமார், மே.கா. கிட்டு, காவை இளவரசன், காவலாண்டியூர் ஈசுவரன், கொளத்தூர் டைகர் பாலன், காவலாண்டியூர் விஜயன், சக்திவேல், மாணவர்கள் விவேக், நாகராஜன், நகரத் தலைவர் மார்ட்டின், தாரமங்கலம் பாலு, அய்யாத்துரை, நகர செயலாளர் சுரேசு, கொளத்தூர் நகர செயலாளர் இராமமூர்த்தி, சக்திவேல், சம்பத், ஆர்.எஸ். பகுதி இராமச்சந்திரன், காவேரி, கிராஸ் மகேந்திரன், பழனி, நங்கவல்லி கிருஷ்ணன், குஞ்சாண்டியூர் சொக்கலிங்கம், செந்தில், குமரன் நகர் சீனி, கோவிந்தராஜ், பெரியார் பெருந்தொண்டர் சதாசிவம், அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, பொருளாளர் திருப்பூர் துரைசாமி ஆகியோர் உரையாற்றினர். நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றி கழகப் பொறுப்பாளர்களை அறிவித்தார்.

கழகத் தோழர்கள் முன் வைத்த கருத்துகள்: “கழகத்தால் ஜாதி மறுப்புத் திருமணம் நடத்தி வைக்கப்பட்ட இணையர்கள் பற்றிய தகவல் களை நூலாக வெளியிட வேண்டும். கழக அமைப்பு-பரப்புரை தொடர்பான பணிகளில் தோழர்களுக்கு தனித்தனியே பொறுப்புகளை பிரித்து ஒப்படைக்க வேண்டும். தங்கள் பங்களிப்பை வழங்குவதற்கு தோழர்கள் முன் வரவேண்டும். ஜாதி எதிர்ப்புப் பரப்புரை இயக்கங்களை ஜாதிவெறி சக்திகள் அதிகம் உள்ள பகுதிகளில் நடத்தலாம். புதிய இளைஞர்களை கழகத்தை நோக்கிக் கொண்டுவர வேண்டும். பள்ளிகளில் மாணவர்களுக்கு பெரியார் பிறந்த நாள் விழாவையொட்டி பெரியார் குறித்த பேச்சு-கட்டுரைப் போட்டிகளை நடத்த வேண்டும். கழகப் பரப்புரைக் கூட்டங்களைப் பயன்படுத்தி, தோழர்களை ஒருங்கிணைக்க வேண்டும்” என்ற கருத்துகள் முன் வைக்கப் பட்டன.

மேட்டூர் நகர செயலாளர் சுரேஷ், “நகர கழகம் மாற்றியமைக்கப்பட்ட பிறகு 10 கிராமப் பரப்புரைக் கூட்டங்கள், இரண்டு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டதை சுட்டிக் காட்டினார். மூடநம்பிக்கை ஒழிப்பு விளக்கப் பரப்புரைக்கான கருவிகள் மற்றும் ஒலி பெருக்கி வசதியுடன் கூடிய பரப்புரை வாகனத்தை தோழர் சதாசிவம், இயக்கத்துக்கு வழங்கி, பரப்புரைப் பணிகளை ஊக்கப்படுத்தி வருவதை நன்றியுடன் நினைவு கூர்ந்தார். அம்ஜத்கான் நன்றி கூறலுடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது.

### சேலம்

ஆகஸ்டு 5ஆம் தேதியன்று மாலை 5 மணியளவில் சேலம் கிழக்கு மாவட்டக் கலந் துரையாடல் கூட்டம், சேலத்தில் மாவட்டத் தலைவர் கருப்பூர் சக்திவேல் இல்லத்தில், தோழர் பரமேசுவரன், கடவுள்-ஆத்மா மறுப்புடன் தொடங்கியது. மாவட்ட செயலாளர் டேவிட் வரவேற்புரையைத் தொடர்ந்து, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கூட்டத்தின் நோக்கத்தை விளக்கினார். சேலம் நகர கழகத் தோழர்கள் பரமேசுவரன், பிரபு, பாலு, இரும்பாலை பழனிச் சாமி, அம்பிகாபதி, செல்வமணி, ஆத்தூர் தோழர்கள் மகேந்திரன், காளிதாசு, கணபதி, இளம்பிள்ளை தோழர்கள் தனசேகர், சவுந்தர், சவுந்தரராசன், ஏற்காடு தோழர்கள் சரவணன், கார்த்திக், உலகநாதன், பெருமாள், பிரகாசு, செம்மாண்டபட்டி சின்னத்துரை, வெற்றி முருகன், ஆத்தூர் ஸ்ரீராமுலு, ராகுல், சேலம் ராஜசேகரன், அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, பொருளாளர் திருப்பூர் துரைசாமி ஆகியோர் கருத்துகளை முன் வைத்தனர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரையாற்றி, கழகப் பொறுப்பாளர்களை அறிவித்தார்.

### திருச்செங்கோடு

நாமக்கல் மாவட்டக் கழகக் கலந்துரையாடல் கூட்டம், ஆகஸ்டு 7ஆம் தேதி பகல் 11 மணியளவில் திருச்செங்கோட்டில் பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்துக்கு சொந்தமான கட்டித்தில் நடந்தது. இரா. பிரகாசு, ‘கடவுள்-ஆத்மா மறுப்பு’ கூறினார். மாவட்டத் தலைவர் குமாரபாளையம் சாமிநாதன் வரவேற்புரை யாற்றினார். மாவட்ட செயலாளர் வைரம், பள்ளிப்பாளையம் சரவணன், முத்துப் பாண்டி, நாமக்கல் முத்துச்சாமி, குமாரபாளையம் தண்டபாணி, திருச்செங்கோடு கவுதமன், மல்ல சமுத்திரம் கண்ணன், பள்ளிப்பாளையம் தோழர்கள் தியாகு, மு. சரவணன், பிரகாசு, சரவணன், யுவராஜ், திருச்செங்கோடு சோமசுந்தரம், கோரிப்பட்டி பெரியண்ணன், சதீஷ்குமார், பிரகாசு, வெங்கிடு, நித்யானந்தம், தன லட்சுமி, ராஜலட்சுமி, மனோஜ் மோகன் ஆகியோரைத் தொடர்ந்து, அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, பொருளாளர் திருப்பூர் துரைசாமி ஆகியோர் கருத்துகளைத் தெரிவித்தனர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரை யாற்றி பொறுப்பாளர்களை அறிவித்தார்.

### கழகத் தலைவர் பேட்டி

கூட்டத்துக்கு நடுவே செய்தியாளர்களுக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேட்டியளித்தார்:

“கோகுல்ராஜ் கொலையில் தேடப்படும் குற்றவாளி யுவராஜ் என்பவர், இதுவரை கைது செய்யப்படவில்லை. நடந்தது ஒரு சாதாரண கொலைதான், இதற்கு ஏன் காவல்துறை இப்படி பெரிதுபடுத்த வேண்டும் என்றும் காவல்துறையால் தன்னை நெருங்க முடியாது என்றும், தனது ஜாதிக்காரர்களிடம் ‘வாட்ஸ் அப்’ வழியாக யுவராஜ் பேசி, அந்த பேச்சு பரப்பப்பட்டு வருகிறது. இதேபோல் வேறு ஒரு கொலை வழக்காக இருந்தால் தலைமறைவான குற்றவாளியைப் பிடிக்க காவல்துறை அவரது குடும்பத்தினரைக் கைது செய்து குற்றவாளியை சரணடைய வைத்திருப்பார்கள். ஆனால், இந்த யுவராஜை கைது செய்வதில் காவல்துறை அலட்சியம் காட்டி வருகிறது. இதைக் கண்டித்து ஆகஸ்டு 17ஆம் தேதி ஒத்த கருத்துடைய அமைப்புகளை ஒருங்கிணைத்து, திருச்செங்கோட்டில் திராவிடர் விடுதலைக் கழகம் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்துள்ளது” என்று தெரிவித்தார்.

தொடர்ந்து மதுவிலக்கு பிரச்சினை குறித்து செய்தியாளர்கள் கேட்டதற்கு, “முழுமையான மதுவிலக்கு சாத்தியமில்லை; அப்போது கள்ளச் சாராய வியாபாரிகளுக்கும் காவல்துறைக்கும் இரகசிய ஒப்பந்தம் உருவாகும். இளைஞர்கள் வேறு போதைப் பொருள்களை தேடிச் செல்லும் ஆபத்துகளுக்கும் வாய்ப்புகள் உண்டு. இந்த நிலையில் மதுவிலக்குக் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பதே எங்களின் நிலைப்பாடு. ஒரு காலத்தில், சில தனிப்பட்டவர்களின் பழக்கம் என்று இருந்த ‘குடி’, இப்போது சமூகத்தையே பாதிக்கும் நிலைக்கு சமூகப் பிரச்சினையாக மாறிவிட்டது. இந்த ஆபத்தான போக்குகளைத் தடுத்து நிறுத்த வேண்டும். மதுவிற்பனைக் கடைகளின் எண்ணிக்கையை பாதியாகக் குறைப்பது; நேரத்தைக் குறைப்பது; பள்ளி, மருத்துவமனை, மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் மதுக்கடைகளை மூடுவது; புகை எதிர்ப்புப் பிரச்சாரம்போல், மது எதிர்ப்புப் பிரச்சாரம் செய்வது போன்ற நடவடிக்கைகள் வழியாக மதுப் பழக்கத்தை படிப்படியாகக் குறைக்கும் முயற்சிகளை அரசு மேற்கொள்ள

(4ஆம் பக்கம்)

## யுவராஜை கைது செய்யாத காவல்துறையைக் கண்டித்து ஆக.17இல் திருச்செங்கோட்டில் கழகம் ஆர்ப்பாட்டம்

**தலையங்கம்**

# பார்ப்பனியத்தின் சதி வலை

‘இந்து’க்களை ஒரே அணியாக தமிழகத்தில் திரட்ட முடியாத நிலையில் வெவ்வேறு ஜாதிக் குழுக்களை தங்கள் கட்சிக்குள் கொண்டுவந்து சேர்க்கும் முயற்சிகளில் பா.ஜ.க. இறங்கியிருக்கிறது. இந்து மத அடையாளங்களுக்குள் முடங்கிவிடாமல் தமிழகத்தில் பல் வேறு படி நிலைகளில் நிறுத்தப்பட்டிருந்த ஜாதிக் குழுக்கள் அந்த அடை யாளத்தை முன்னிறுத்தி, தங்கள் உரிமைப் போரை முன்னெடுத்தன. இதுவே பெரியார் வலியுறுத்திய ‘வகுப்புவாரி பிரதிநிதித்துவம்’ என்ற கோட்பாடு. பார்ப்பன மேலாண்மைக்கும் ஆதிக்கத்துக்கும் அரணாக நின்ற ‘இந்து ஓர்மை’க்கு வேட்டு வைத்தது, இந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவம், பெரியார் போராட்டத்தால் அரசியல் சட்டத்தில் நிகழ்ந்த முதல் திருத்தத்தின் வழியாக ‘வகுப்புவாரி பிரதிநிதித்துவம்’ சமூக கல்வி அடிப்படையிலான இடஒதுக்கீடாக மாறி அது தமிழ்நாட்டில் ஆட்சிகளைக் கடந்து தீவிரமாக செயலாக்கம் பெற்றது. உரிமை மறுக்கப்பட்ட ஜாதிக் குழுக்கள் முன்னேறத் தொடங்கின. உண்மையில் ‘தலைவிதி’, ஜாதி தர்மம்’ என்ற பார்ப்பனக் கோட்பாடுகளை உடைத்து நொறுக்கிக் கொண்டு உருவானதே இந்த முன்னேற்றம்! இந்த நிலையில், இந்த ஜாதிக் குழுக்களை மீண்டும் ‘இந்துத்துவ’ அரசியலுக்கு வலைவீசி இருக்கும் முயற்சிகள் தமிழகத்தில் முளைவிடத் தொடங்கியிருக்கின்றன.

பட்டியல் இனப் பிரிவிலுள்ள 7 ஜாதிக் குழுக்களை ‘தேவேந்திர குல வேளாளர்’ என்ற பெயரில் அறிவிக்க வேண்டும் என்று, இந்தப் பிரிவைச் சார்ந்த சிலர், மதுரையில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் பா.ஜ.க. தலைவர் அமீத் ஷாவிடம் கோரிக்கை வைத்துள்ளனர். தங்களுக்கான இடஒதுக்கீடுகளும் வேண்டாம் என்றும் அவர்கள் அறிவித்திருக் கிறார்கள். இந்த முயற்சிக்கு திரை மறைவில் திட்டங்களைத் தீட்டி, செயல் வடிவம் கொடுத்திருப்பவர், ஆர்.எஸ்.எஸ். உயர்மட்டத் தலைவர்களில் ஒருவரான தமிழகத்தைச் சார்ந்த ஆடிட்டர் குருமூர்த்தி எனும் பார்ப்பனர்.

இடஒதுக்கீட்டைப் பயன்படுத்தி முன்னேறியவர்கள் எவராக இருந்தாலும், அந்த உரிமை இனியும் தனக்கோ, தனது குடும்பத்துக்கோ வேண்டாம் என்று அறிவிக்க உரிமை உண்டு. சொல்லப் போனால், அது இடஒதுக்கீட்டுக் கொள்கைக்கு கிடைத்த உண்மையான வெற்றி என்றே கூற வேண்டும். ஆனால், ஒட்டுமொத்த ஜாதிக் குழுவுக்கும் இந்த உரிமை வேண்டாம் என்று முடிவெடுக்கும் உரிமையை இவர்களே எப்படி தங்கள் கரங்களில் எடுத்துக் கொண்டார்கள்? சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்குமான அதிகாரத்தைத் தீர்மானிக்கும் பார்ப்பனியத்தின் பண்புதானே இது? இனியும், நாங்கள் ‘பட்டியல் இனப் பிரிவில்’ இருக்க மாட்டோம் என்ற அறிவிப்பில், ‘அவர்கள் கீழ்ஜாதியினர்; அதைவிட நாங்கள் உயர் ஜாதிக்காரர்கள்’’ என்ற பார்ப்பனியம் கட்டமைத்த ஜாதிப் பார்வைதானே அடங்கி யிருக்கிறது? ‘மேல்–கீழ்’ என்ற ஜாதிய கட்டமைப்பை மேலும் உறுதிப்படுததக்கூடிய செயல்தானே இது?

‘இட ஒதுக்கீடே வேண்டாம்’ என்று கூறியிருப்பதை வியந்து பாராட்டும் அமீத்ஷாவை கேட்க விரும்புகிறோம், அரியானாவில் அரசியலிலும் பொருளாதாரத்திலும் வலிமையான சக்திகளாகத் திகழும் ‘ஜாட்’ பிரிவினரை அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி, தேர்தல் ஆதாயத்துக்காக தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையத் தின் பரிந்துரைக்கு எதிராக, பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தது. பின்னர், உச்சநீதிமன்றம் இதை ரத்து செய்தது. பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தவுடன், இந்த வழக்கின் மேல்முறையீட்டில் ஜாட் பிரிவினரை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்ற முந்தைய அய்க்கிய முற்போக்குக் கூட்டணியின் கருத்தையே மோடி ஆட்சியும் உச்சநீதிமன்றத்தில் எடுத்துரைத்தது. இப்போது கேட்கிறோம்; ஜாட் சமூகத்தினருக்கு பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு வேண்டும் என்று வாதாடும் இதே பா.ஜ.க., தமிழ்நாட்டில், இடஒதுக்கீடு வேண்டாம் என்று கூறும் ஜாதிப் பிரிவினரை பாராட்டிப் புகழ்வது ஏன்? ஏன் இந்த இரட்டை வேடம்? அது மட்டுமல்ல, குருமூர்த்தி, பச்சை யாகவே ஜாதி வேண்டும் என்று இந்த நிகழ்ச்சியில் பேசியிருக்கிறார். ஜாதி இந்தியாவின் ‘சமூக மூலதனம்’ (Social capital) என்கிறார். இந்து சாஸ்திர புராணங் களால் இழிவுக்கு உள்ளாக்கப்பட்ட ‘சூத்திரனும்’, ‘பஞ்சமனும்’ உழைத்து, பார்ப்பன உயர்ஜாதிக் கூட்டத்தின் சுரண்டலுக்கு உதவு வதால், குருமூர்த்திகளுக்கு இது ‘சமூக மூலதனம்’ ஆகத் தெரிகிறது. அது மட்டுமல்ல, “இன்று இந்தியா உயர்ந்து நிற்கிறது என்றால், அது ஜாதிகளால் தான். எனவே ஜாதி இருக்க வேண்டும். ஒவ்வொரு ஜாதியும் தன்னை உயர்ந்தவர் என்று நினைத்தால் நாட்டில் ஜாதி சண்டையே வராது’’ என்றும் குருமூர்த்தி, ‘தத்துவ விளக்கம்’ தந்திருக்கிறார். ஒரே கேள்வி; ஒவ்வொருவரும் தங்களை உயர்ந்த ஜாதி என்று நினைத்துக் கொண்டால், யாரைவிட உயர்ந்த ஜாதி என்ற கேள்வி அடுத்து வராதா? அப்படி ஒரு கேள்வி வரும்போது, உயர்ந்த ஜாதிகளாகக் கருதிக் கொண்டிருப்போருக் கிடையே யாரை விட யார் உயர்ந்தவர் என்ற மோதல் வெடிக்காதா? குருமூர்த்திகளிடம் இதற்கு என்ன பதில் இருக்கிறது என்று கேட்கிறோம்.

எல்லா ஏழைகளும் தங்களை வசதியானவர்கள் என்று நினைத்துக் கொண்டால், ஏழை பணக்காரன் பிரச்சினைகளே இல்லாது போய்விடும் என்று குருமூர்த்தியின் ‘தத்துவத்தை’ மேலும் நீட்டித்துப் பார்த்தால் மக்கள் வாய்விட்டு சிரிப்பார்கள்!

“ஒவ்வொரு ஜாதிக் குழுவும் தனித்தனியாக பிரிந்து நின்று, தங்கள் ‘பிறவி’ அடையாளத்தைக் காப்பாற்ற வேண்டும். ஜாதிக் குழுக்கள் கலந்து ஒரே சமுதாயமாக உருமாற்றம் பெற்றுவிடக் கூடாது’’ என்பதே குருமூர்த்திகளின் கவலை. அப்போதுதானே ‘பிறவி’ வழியாக ‘சமூக மூலதனம்’ தங்களுக்கு வழங்கி வரும் பாரம்பர்ய ஆதிக்கத்தையும் சுரண்டலையும் காப்பாற்றிக் கொள்ள முடியும்?

‘தேவேந்திரன்’ ஆரியர்களின் கடவுளாகப் போற்றப்படுகிறவன். அந்தப் பெயரை சூட்டிக் கொண்டு ‘இந்து’ அடையாளங்களுக்குள்ளே தங்களை மீண்டும் முடக்கிக் கொள்ள முன் வருவதும், பார்ப்பனிய வலைக்குள் மீண்டும் சிக்கிக் கொள்ள தாங்களாகவே துடித்துக் கொண்டிருப்பதும், போராடி பெற்ற சமூக உரிமைகளையும், சுயமரியாதையையும் அடகு வைக்கும் ஆபத்தான முயற்சி என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

பெயர் மாற்றங்களாலேயே பெருமை கிடைத்து விடாது. அனைத்துப் பிரிவு மக்களையும் சமப்படுத்தும் ஒரு சமூக அமைப்பை நோக்கி முன்னேற வேண்டும்; அது ஜாதி அற்ற சமுதாயமாகவே இருக்க முடியும். ஜாதி பெருமைகளில் ‘சுகம்’ காணும் சமுதாயமாக இருக்க முடியாது!

# மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள்

***இரண்டாம் சுற்று – மாவட்டக் கலந்துரையாடலில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிவித்த கழகப் பொறுப்பாளர்கள்.***

## சேலம் மேற்கு

சேலம் மேற்கு மாவட்டம்: தலைவர் - ப.க.சூரியகுமார், மாவட்ட செயலாளர் - சி. கோவிந்தராசு.

மேட்டூர் அணை நகரம் : தலைவர் - செ. மார்ட்டின்; நகர செயலாளர் - அ. சுரேசு குமார்; நகர பொருளாளர் - கதிரேசன்.

குமரன் நகர் (கிளை கழகம்): தலைவர் - பொன். தேவராசு, செயலாளர் - அ. சீனி வாசன்.

காவலாண்டியூர்: தலைவர் - வ.மாரியப் பன்; செயலாளர் - பழனிச்சாமி.

கொளத்தூர் : தலைவர் - பெரியசாமி; செயலாளர் - சி. இராமமூர்த்தி.

கோவிந்தபாடி: பொறுப்பாளர் - சென்னியப்பன்.

உக்கம்பருத்திக்காடு : பொறுப்பாளர் - ஆட்டோ செல்வம்.

தார்க்காடு மற்றும் தண்டா : தலைவர் - தர்ம லிங்கம்; செயலாளர் - குமரேசன்.

நீதிபுரம் : தலைவர் - வெங்கடேஷ்; செயலாளர்- கார்த்தி.

நங்கவள்ளி : நகரத் தலைவர் - ராஜேந் திரன்; துணைத் தலைவர் - மனோஜ்குமார்; செயலாளர் - கண்ணன்; துணைச் செயலாளர் - செந்தில்குமார்; பொருளாளர் - இந்திராணி; அமைப்பாளர் - உமாசங்கர்.

## சேலம் கிழக்கு

சேலம் கிழக்கு மாவட்டப் பொறுப் பாளர்கள்: - தலைவர் - க. சக்திவேல்; செயலாளர் - இரா. டேவிட்; பொருளாளர் அ. பெருமாள்.

சேலம் மாநகரம்: தலைவர் - பரமேஷ் குமார்; செயலாளர் - சோ. பிரபு; துணைச் செயலாளர்: செல்வ மணி; அமைப்பாளர் - மோ. பாலு.

இளம்பிள்ளை : தலைவர் - கோனேரிப் பட்டி சி.தனசேகர்; துணைத் தலைவர் - முருங்கப்பட்டி ப. குப்புசாமி; செயலாளர் - இராசிக்கவுண்டனூர் சி. தங்கதுரை; துணைச் செயலாளர் - பாப்பாபட்டி தங்க ராஜ்; பொருளாளர் - காடையாம்பட்டி அ.காவேரிச் செல்வம்; துணைப் பொரு ளாளர் - புளியம்பட்டி நை. திருநாவுக்கரசு; அமைப்பாளர் - குள்ளனம்பட்டி மணி மாறன்; துணை அமைப்பாளர் - புளியம் பாடி குமார்; ஒருங்கிணைப்பாளர் - சு. சௌந்தர்ராஜன் (எ) குட்டி; துணை ஒருங் கிணைப்பாளர் - பெத்தாம்பட்டி கு. பார்த்தீபன்.

ஏற்காடு ஒன்றியம் : தலைவர் - கு.சர வணன்; செயலாளர் - இரா. கார்த்திகேயன்; பொருளாளர் - இரா. உலகநாதன்.

ஓமலூர் பகுதி : தலைவர் - சின்னதுரை; செயலாளர் - கி. ஜெயப்பிரகாஷ்; பொரு ளாளர் - இரவி.

ஆத்தூர் : தலைவர் - ந.மகேந்திரன்; செயலாளர் - கோ. கணபதி; பொருளாளர் - ராமுலு; அமைப்பாளர் - ராகுல்.

தலைவாசல் ஒன்றியம் : தலைவர் - கோ. பெரிய சாமி; செயலாளர் - பெ. காளிதாஸ்; பொருளாளர் - கா. பாலகிருஷ்ணன்.

## நாமக்கல்

நாமக்கல் மாவட்டம் : தலைவர் - மு. சாமிநாதன்; செயலாளர் - மு. சரவணன்; காப்பாளர் - கேப்டன் அண்ணாதுரை; அமைப்பாளர் - மா.வைரவேல்; பொருளாளர் - அ. முத்துப்பாண்டி.

குமாரபாளையம் நகரம் - தலைவர் - தண்ட பாணி; செயலாளர் - வெங்கட்.

பள்ளிபாளையம் நகரம் - தலைவர் - அ. பிரகாசு; செயலாளர் - மு.சரவணன்; நகர பொருளாளர் - கோபி; இளைஞரணி அமைப்பாளர் - யுவராஜ்.

நாமக்கல் நகர அமைப்பாளர் : நா. முத்துசாமி.

திருச்செங்கோடு நகரம் : தலைவர் - மு. சோம சுந்தரம்; செயலாளர் - செ. நித்தி யானந்தம்; இளைஞரணி தலைவர் - கார்த்தி; இளைஞரணி செயலாளர் - இரா. பிரகாசு.

மல்லை சமுத்திரம் ஒன்றியம் : தலைவர் - பெரியண்ணன்; செயலாளர் - கோபி.

வெண்ணத்தூர் ஒன்றியம் : அமைப் பாளர் - அன்பழகன்.

கருவேப்பம்பட்டி ஒன்றிய அமைப்பாளர் - சதீஷ்குமார்.

## திருச்சி

திருச்சி மாவட்டப் பொறுப்பாளர்கள் : தலைவர் - இ. ஆரோக்கியசாமி; செயலாளர்- கந்தவேல் குமார்; துணைத் தலைவர் - டார்வின்தாசன்; அமைப்பாளர் - குணராஜ்; பொருளாளர் - மனோகரன்; மாநகர அமைப்பாளர் - தமிழ்முத்து.

திருவரங்க நகரம் : செயலாளர் - அசோக்; தலைவர் - டாக்டர் எஸ்.எஸ். முத்து. மாணவரணி அமைப்பாளர் - வழக்கறிஞர் சந்துரு.

அம்பேத்கர் பெரியார் படிப்பு வட்டம், திருச்சி மாவட்ட அமைப்பாளர் - புதியவன்.

## பெரம்பலூர்

பெரம்பலூர் மாவட்டம் - தலைவர் துரை. தாமோதரன்; அமைப்பாளர் - பழனி முருகன், நகர செயலாளர் - இராஜேசு குமார்; ஒன்றிய செயலாளர் - கண்ணையன்.

# பேராசிரியர் இராமு. மணிவண்ணன் மீதான பழி வாங்கும் நடவடிக்கை கண்டனத்துக்குரியது

சென்னை பல்கலைக்கழகத்தில் அரசியல், விஞ்ஞானம் மற்றும் பொது நிர்வாகத் துறையின் தலைமைப் பேராசிரியர் இராமு. மணிவண்ணன். ஈழத் தமிழர் உரிமைப் போராட்டத்தில் அளப்பரிய பங்காற்றி வரும் பேராசிரியர். அய்.நா.வின் கூட்டங்கள் நடக்கும் போதெல்லாம் ஜெனிவா சென்று மனித உரிமைத் தளங்களில் ஈழத் தமிழர் பிரச்சினைகளை முன்னெடுத்தவர். ஈழத் தமிழர்கள் மீதான இனப்படுகொலைக்கான சான்றுகளைத் திரட்டி, ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்கங்களில் ஆவணமாக்கியவர்.

ஒரு பேராசிரியர் என்ற எல்லையோடு தனது கடமை முடிந்துவிடவில்லை என்று சமுதாயப் பணியாற்றக் கூடியவர். அவரை இப்போது சென்னை பல்கலைக்கழகம் பழி வாங்கியிருக்கிறது. துறைத் தலைவர் பதவியிலிருந்து அவரை இறக்கிவிட்டு, அந்த இடத்துக்கு கோட்டீசுவர பிரசாத் என்பவரை துணைவேந்தர் நியமித்துள்ளார். பேராசிரியர் மணிவண்ணன் செய்த ‘குற்றம்’ தான் என்ன ?

“மதுக் கடைகளை மூடும் போராட்டத்தில் பங்கேற்ற மாணவர்கள் பற்றிய தகவல்களைத் தருமாறு என்னிடம் கேட்டார்கள். மாணவர்களுக்கான போராட்ட உரிமைகளில் நான் தலையிட முடியாது என்று கூறி, அது குறித்த தகவல்களைத் தர மறுத்து விட்டேன். அதன் காரணமாக எனக்கு இந்தத் ‘தண்டனை’ தரப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார். பேராசிரியர் இராமு. மணிவண்ணன், கடந்த மார்ச் மாதம் ஈழத் தமிழர்களுக்காக நடந்த கூட்டத்தில் பங்கேற்றுப் பேசினார். மோடி, இலங்கைக்கு செல்வதை எதிர்த்து, நடந்த கண்டனக் கூட்டம் அது. இதில் பங்கேற்றதற்காக துணைவேந்தர், பேராசிரியரை எச்சரித்துள்ளார்.

அப்போது பேராசிரியர் இராமு. மணிவண்ணன் அவர்களை, காவல்நிலையத்தில் வைத்து 3 மணி நேரம் விசாரணை நடத்தியுள்ளனர். தொடர்ந்து அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கம் இதைக் கடுமையாக எதிர்த்ததால் நடவடிக்கை கைவிடப்பட்டது.

பல்கலைக்கழகம் அரசின் நேரடி கட்டுப்பாட்டின்கீழ் செயல்படும் அமைப்பு அல்ல. ஒரு பேராசிரியரின் கருத்துரிமைகளை கல்வி வளாகங்களுக்குள் முடக்குவதும் தண்டிப்பதும் வன்மையாக கண்டனத்துக்கு உரியதாகும். தமிழ் நாட்டில் ஒரு பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் ஆளும் கட்சியின் தீவிர ஆதரவாளராக மாறி, பேராசிரியர்களைப் பழிவாங்குவது வன்மையான கண்டனத்துக்குரியது.

# உலகம் முழுதும் கடந்த ஆண்டில் மரண தண்டனைக்கு உள்ளானோர் 607 பேர்

உலகில் முழுமையாக மரணதண்டனையை நீக்கம் செய்துள்ள நாடுகளின் எண்ணிக்கை (ஜூன் மாத நிலவரம்) 101; கடந்த ஆண்டு உலகம் முழுதும் நிறைவேற்றப்பட்ட மரணதண்டனைகளின் எண்ணிக்கை 607; (இது 2013ஆம் ஆண்டைவிட 22 சதவீதம் அதிகம்) கடந்த ஆண்டு 22 நாடுகள் மரண தண்டனையை நிறைவேற்றியுள்ளன. 2,466 பேர் கடந்த ஆண்டு மட்டும், மரணதண்டனைக்கு உள்ளாகியுள்ளனர். அமெரிக்காவில் 2007 முதல் 2012 வரை மரணதண்டனைக்கு உள்ளாக்கப்பட்டவர்கள் 220 பேர். இதே காலகட்டத்தில் அமெரிக்காவில் மரணதண்டனை விதிக்கப்பட்டு, தண்டனை நிறைவேற்றப்படாதவர்கள் 504 பேர். இந்தியாவில் 2004 முதல் 2013 வரையிலான காலகட்டத்தில் மரணதண்டனையிலிருந்து ஆயுள் தண்டனை யாக்கப்பட்டவர்கள் 3751 பேர். 2007ஆம் ஆண்டில் தான் இந்தியாவில் ஓராண்டில் அதிக எண்ணிக்கை யில் 186 பேருக்கு நீதிமன்றம் மரணதண்டனை விதித்தது.

## ‘கருவறை’யிலிருந்து ‘கவர்னர்’ மாளிகை நோக்கி

கடவுளோடு உரையாடக்கூடிய மொழியாக வேதத்துக்கு பெருமை கொண்டாடுகிறது பார்ப்பனியம். வேதம் படித்த பார்ப்பனர்கள், ‘கடவுளுக்கு’ உரிமை கொண்டாடி, ‘கருவறையை’ தங்களுக்கான ‘தீட்டுப்படாத’ புனித இடமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ‘கருவறை’யைப் மட்டுமல்ல; ‘கவர்னர் மாளிகையையும்’ வேத பண்டிதர்கள் ஆக்கிரமிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். இமாசலப் பிரதேச ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள ஆச்சார் யாதேவ விரத் வேதம் படித்த பார்ப்பனர். அரியானாவில் ‘குருகுல குருக்ஷேத்ரா’ என்ற பெயரில் வேத பாடசாலை நடத்து கிறார். யோகா, பயிற்சியும் இயற்கை மருத்துவமனையையும் நடத்தி வரும் இவர், உலகம் முழுதும் வேத கலாச்சாரத்தைப் பரப்புவதை நோக்கமாகக் கொண்டு வேதம், உபநிஷத்துக்களை ‘பிராமணர்’களுக்கு கற்பித்து வருகிறார்.

பீகாருக்கு ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள ராம்நாத் கோவிந்த் என்பவரும் வேத கலாச்சாரத்தைப் பரப்புவதற்காகவே அரியானாவில் பயிற்சி மய்யம் நடத்தி வருகிறார். ஆனால், இவர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர். பா.ஜ.க. - தாழ்த்தப்பட்ட வர்களுக்காகவே தனியாக உருவாக்கியிருக்கும் ‘ஷெட்யூல்ட் கேஸ்ட் மோர்ச்சா’ என்ற அமைப்பின் தலைவர். என்னதான் வேதம் படித்தாலும், பா.ஜ.க. வின் தாழ்த்தப்பட்டோருக்கான தனிப் பிரிவில்தான் இவர் இயங்க முடியும். இனி அடுத்தடுத்த ஆளுநர்களாக வரப் போகிறவர்கள், இப்போது எந்தக் கோயிலில் அர்ச்சகர்களாக இருக்கிறார்களோ தெரியவில்லை. ஆளுநர் மாளிகைகள் - வேத மடாலயங்களாகிவிடும்போல!

## கழுத்துக் கயிறும் கைக் கயிறும்

கணவன் - திருமணம் செய்யப்போகும் ஒரு பெண், இனி தனக்கு ‘கீழ்ப்படிந்தவளாகவே’ இருக்கவேண்டும் என்பதன் அடையாளமாகக் கட்டப்படுவதுதான் தாலி. சமத்துவத்தையும் சுயமரியாதையையும் விரும்பும் பெண்கள், தாலியை அகற்றிக் கொள்ள முன் வந்தால், அது இந்து மதத்துக்கும், பண்பாட்டுக்கும் எதிரானது என்று தோள் தட்டி தொடை தட்டி, ‘இந்துத்துவா’வாதிகள் கிளம்பி விடுகிறார்கள். கடந்த ஏப்.14ஆம் தேதி, பெரியார் திடலில் நடந்த தாலி அகற்றும் நிகழ்வில், உள்ளே புகுந்து வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டார்கள். தாலி குறித்து விவாத நிகழ்ச்சி நடத்திய ஒரு தொலைக்காட்சி நிறுவனத்துக்கு வெடிகுண்டு வைத்தார்கள்.

கழுத்தில் கயிறு கட்டுவதுபோல கையில் கயிறு கட்டும் ஒரு பழக்கமும் ‘இந்து கலாச்சாரமாக’ நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. இதற்குப் பெயர் ‘ரக்ஷா பந்தன்’. இது பெண்கள் ஆண்களின் கைகளில் கட்டும் கயிறு. ஒரு பெண், ஆணின் கையில் இந்தக் கயிறை கட்டிவிட்டால் அவனை சகோதரராக ஏற்றுக் கொண்டதாக அர்த்தம். சகோதரனாக இப்படி அறிவிக்கப்பட்ட ஒரு ஆண், அந்தப் பெண்ணின் மீது சகோதரன் என்ற உரிமையில், தனது கட்டுப்பாட்டைத் திணிக்க முடியும். இதையெல்லாம் இப்போது ஏன் குறிப்பிட வேண்டியிருக்கிறது என்று, சந்தேகம் வரலாம். இந்த ‘ரக்ஷா பந்தன்’ என்ற இந்துமத சடங்கை மோடி ஆட்சி, தேசிய விழாவாக ஆகஸ்ட் இறுதியில் அறிவிக்கப் போகிறதாம். இதற்கு சமூக ஆர்வலர்களும் இடதுசாரி சிந்தனையாளர் களும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

ரக்ஷாபந்தன் என்ற சடங்கு 1905ஆம் ஆண்டு அறிமுக மானது. இந்து மத முறைப்படி பெண்கள் பிற மதத்தினரை சகோதரராகக் கருதவே இது அறிமுகப் படுத்தப்பட்டது. இந்து-முஸ்லீம் பிரிவினருக் கிடையே திருமண உறவுகள் நிகழ்ந்துவிடாது தடுப்பதே இதன் நோக்கம். பிறகு ‘இந்து’ மதத்துக் குள்ளேயே இந்த கயிறு கட்டும் பழக்கம் வந்து விட்டது. இது குறித்து சமூக ஆர்வலர் ராம்புனியானி தலைமையில் கூடிய சமூக ஆர்வலர்கள் விடுத்துள்ள அறிக்கையில், “இந்துமத சடங்கை - ஒரு அரசு தேசிய விழாவாக ஏன் அறிவிக்க வேண்டும்? இதன் மூலம் பெண்கள் ஆண்களுக்குக் கட்டுப்பட வேண்டும். அவர்களை சகோதரர்களாக மட்டுமே ஏற்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்படுகிறது. ஒரு பெண்ணை ‘சக மனுஷியாக’ ஒரு ஆண் பார்க்காமல் அவளை தனது கட்டுப்பாட்டில் இருப்பவளாக ஒரு ஆண் ஏன் பார்க்க வேண்டும்? வடமாநிலங்களில் நடக்கும் கட்டப் பஞ்சாயத்துகள் இதே பார்வையில் தீர்ப்பை அளிக்கின்றன. அதற்கும், இதற்கும் என்ன வேறுபாடு என்ற கேள்விகளை எழுப்புகிறது, அந்த அறிக்கை. மதக் கட்டுகள் பழக்க வழக்கங்களை எதிர்த்து, பெரியார் உயர்த்திய பெண்ணுரிமைக் குரல், இப்போது சமூக மாற்றத்தை விரும்புவோரின் குரலாகவே ஒலிக்கத் தொடங்கியிருப்பது பெரியாரியத்துக்குக் கிடைத்துள்ள வெற்றி அல்லவா?

## குப்பை பொறுக்கும் ‘பூணூல்’கள்!

பார்ப்பனக் கோட்டையான சென்னை மேற்கு மாம்பலத்தில் சத்குரு வேத பாடசாலை, சுப்ரமணிய வீதியில் உள்ளது. இந்த வீதியில் குப்பைகள் தேங்கிப் போய் கிடந்த நிலையில், ‘வேதம்’ படிக்கும் ‘பார்ப்பன’ சிறுவர்கள், ‘பூணூல்’ அணிந்த கோலத் துடன் வீதிகளில் இறங்கி குப்பைகளைப் பொறுக் கினார்கள். இதைப் படம் பிடித்து முகநூலில் ஒருவர் வெளியிட்டார். உடனடியாக இதை வரவேற்று முக நூலில் 2300 விருப்பப் பதிவுகள் விழுந்தன. அவ்வளவு தான். ஆடிப் போனது சென்னை மாநகராட்சி. உடனே, ‘பூணூல்’ தரிக்காத ‘சூத்திரர்’, ‘பஞ்சமர்’ களைக் கொண்டுவந்து இறக்கி, குப்பைகளை அகற்றி சுத்தம் செய்தனர். நாள் முழுதும் குப்பைகளை நீக்கி சுத்தம் செய்வதும், குப்பைகளைப் பொறுக்கி வாழ்க்கையை நடத்துவதும், ‘பஞ்சமர்’, ‘சூத்திரர்’ களுக்கு விதிக்கப்பட்ட ‘தர்மம்’; வேதம் ஓதுவதையே ‘தர்மம்’ மாக்கிக் கொண்ட ‘பிராமணர்கள்’ - இப்படி வீதிகளில் இறங்கி ‘குப்பை’களை சுத்தம் செய்யத் தொடங்கினால், நாடு அதைத் தாங்குமா?

எனவே தான் மாநகராட்சி அதிரடியாக ‘இறங்கி’ தர்மத்தைக் காப்பாற்றியிருக்கிறது.

## ஆர்.எஸ்.எஸ்ஸை அம்பலப்படுத்துகிறார் சுப்ரமணியசாமி


1976ஆம் ஆண்டு இந்திராகாந்தி பிரதமராக இருந்தபோது அவசர நிலையைப் பிரகடனம் செய்து, அடிப்படை உரிமைகளை முடக்கியதோடு, ‘மிசா’ எனும் ஆள் தூக்கி சட்டத்தின் கீழ் விசாரணையின்றி ஓராண்டு காலம் தனது ஆட்சியை எதிர்த்தவர்களை சிறையில் போட்டார். அந்த கொடுங்கோல் ஆட்சியை எதிர்த்த வீராதி வீரர்களாக ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் இப்போது மார்தட்டிக் கொள்கிறார்கள். ஆனால், உண்மையில் சிறை செல்ல அஞ்சி, இந்திராகாந்தியிடம் மன்னிப்புக் கடிதங்களை எழுதிக் குவித்தவர்கள் என்பதே உண்மையான வரலாறு. ஆனாலும், இப்போது பா.ஜ.க.வின் முன்னணி தளபதியாக வலம்வரும் பார்ப்பனர் சுப்ரமணியசாமியே எழுதிய கட்டுரை ஒன்று கிடைத்திருக்கிறது. ‘இந்து’ ஆங்கில நாளேட்டில் 2000ஆம் ஆண்டில் ஜூன் 13ஆம் தேதி, சுப்ரமணியசாமி இக்கட்டுரையை எழுதினார். அப்போது இவர் பா.ஜ.க.வில் இல்லை.

“பா.ஜ.க.-ஆர்.எஸ்.எஸ். தலைவர்களில் பெரும்பாலோர், அவசர நிலை காலத்தில் அதற்கு எதிராக நடந்த போராட்டத்தில் துரோகிகளாகவே மாறிவிட்டார்கள். இதற்கான ஆதாரங்கள், மகாராஷ்டிரா சட்டமன்ற நிகழ்வுகளின் ஆவணங்களிலேயே பதிவாகியுள்ளன. அப்போது புனேயில் ஏர்வாடா சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஆர்.எஸ்.எஸ். தலைவர் பாலாசாகேப் தேவரஸ். இந்திரா காந்திக்கு பல மன்னிப்பு கடிதங்களை எழுதினார். ஜெயப்பிரகாஷ் நாராயண் இயக்கத்துடன் (அப்போது இந்திரா ஆட்சிக்கு எதிராக முழுப் புரட்சி இயக்கம் நடத்தியவர் ஜெயப்பிரகாஷ் நாராயண்) ஆர்.எஸ்.எஸ். உறவை துண்டித்துக் கொண்டுவிட்டது என்றும், இந்திரா காந்தி கொண்டு வந்துள்ள அரசுத் திட்டங்களுக்கு ஆதரவாக (20 அம்ச திட்டம் என்று அதற்குப் பெயர்) மக்களிடையே பணியாற்ற ஆர்.எஸ்.எஸ். தயாராக இருக்கிறது என்றும் தொடர்ந்து கடிதங்களை எழுதினார்.

ஆனால், இந்திரா காந்தி எந்த கடிதத்துக்கும் பதில் எழுதவில்லை. வாஜ்பாய், இந்திராவுக்கு எழுதிய கடிதத்தில் அரசுக்கு எதிரான எந்த நடவடிக்கையிலும் தான் பங்கேற்க மாட்டேன் என்று உறுதி தந்து, 20 மாதம் நீடித்த அவசர நிலை காலத்தில் கைதாகியும், ‘பரோல்’ விடுதலையிலேயே இருந்தார். அரசுக்கு கட்டுப்பட்டு ஒழுக்கமுடன் செயல்படுவேன் என்று ஏராளமான முன்னாள் ஜனசங்கத் தலைவர்கள் மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்து, சிறையிலிருந்து வெளிவரத் துடித்ததை அகாலிதளத் தலைவர் சுர்ஜித் சிங் பர்னாலா, தனது நூலில் விரிவாக எழுதியுள்ளார். இத்தகைய பா.ஜ.க.வினரும், ஆர்.எஸ்.எஸ்.காரர்களும் அவசர நிலையின் 25ஆவது நினைவுநாளை அறிவித்திருப்பது கேலிக்குரியது” என்று சுப்ரமணியசாமி, அந்தக் கட்டுரையில் எழுதியிருக்கிறார்.

இப்போது அதே சுப்ரமணியசாமி, அதே பா.ஜ.க., ஆர்.எஸ்ஸோடு சேர்ந்து கொண்டு, ‘அவசர நிலை’ எதிர்ப்புகளையும் தங்களின் ‘வீர தீர சாகசங்களையும்’ மக்களிடையே பேசுகிறார். பார்ப்பனர்களின் ‘பொய்’களுக்கு இந்த நாட்டில் “வேதங்கள்” என்ற பெருமையும் புனிதமும் உண்டு தானே! (சு. சாமியின் இந்தக் கட்டுரையை தேடிப் பிடித்து, ‘தி ரேடிக்கல் ஹியூமனிஸ்ட்’ மாத இதழ் இப்போது வெளியிட்டுள்ளது)

## பெரியார் சிலையை மறைத்து ஜாதிக்கட்சியின் கொடி நட முயற்சி; கழக செயல்வீரர்கள் பதிலடி



நாமக்கல் மாவட்டம், திருச்செங் கோட்டில் அமைந்துள்ள தந்தை பெரியாரின் சிலையை இழிவுபடுத்தும் நோக்கோடு சிலைக்கு முன்பாக கொங்குநாடு மக்கள் தேசியக்கட்சி சார்பில் அவர்களின் கொடிமரம் நடுவதற்கு முயற்சிகள் நடந்தது.

செய்தியறிந்த நாமக்கல் மாவட்ட திராவிடர் விடுதலைக்கழக செயலாளர் வைரம் கழகத் தோழர்களுடன் சென்று தடுக்க முயன்றார். காவல்துறை தலை யிட்டு இருதரப்பினரையும் கலைத்தனர். மீண்டும் கழகம் சார்பில் காவல்துறை யிடம் புகார் அளித்தபோது, காவல்துறை புகாரை வாங்க மறுத்தது.

பின்பு திவிக தோழர்கள் சதீசு, பிரகாசு, கார்த்தி, நித்தியானந்தம், மாணிக்கம் மற்றும் ஆதித் தமிழர் பேரவையின் மாநில கொள்கை பரப்பு துணைச்செயலாளர் செல்வவில்லாளன், மாவட்ட செயலாளர்களோடு மதியம் 2.00 மணிக்கு பெரியார் சிலைக்கு முன் திரண்டு ஜாதிவெறியர்களின் கொடிமரத்திற்கான பீடத்தை அகற்றினார்கள்.

## திருச்சியில் டாஸ்மாக் முற்றுகை: கழகத் தோழர்கள் கைது

காந்தி மார்க்கெட் பகுதியில் பள்ளி வளாகங்களுக்கு அருகிலுள்ள நெல்பேட்டை ஒயின்ஷாப், பொது மக்கள் மற்றும் மாணவர்களுக்கும் பெரும் இடையூறாக இருந்து வருகிறது. இந்நிலையில் திருச்சி மாவட்ட திராவிடர் விடுதலை கழக சார்பில் ஒயின்ஷாப் முற்றுகைப் போராட் டத்தை 4.8.2015 காலை 10 மணிக்கு அறிவித்த நிலையில், முன்னெச் சரிக்கை நடவடிக்கை என்ற பெயரில் காந்தி மார்க்கெட் காவல் துறையினர் கழக மாவட்டச் செய லாளர் சுந்த வேல் குமார், பிள்ளை நகர் பகுதி தலைவர் வெனிஸ் கிளமெண்ட், ஜெனிபர் ஆகியோரை நள்ளிரவில் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

DATE OF PUBLICATION 13.08.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# மாவட்டக் கலந்துரையாடல் காட்சிகள்















திருச்சி 'இன்னோவேட்டர்ஸ் குரூப் ஆப் கம்யூனிட்டி காலேஜ்' நிறுவனர் அருள், நிர்வாக இயக்குனர் ஜான்சி, கழகத் தலைவரிடம் நன்கொடை வழங்கினர்.







## வினாக்கள்... விடைகள்...!

- *மது விலக்கு எங்கள் கொள்கை; மற்ற கட்சிகள் பறித்துக் கொண்டு விட்டன.* **– பா.ம.க. அன்புமணி**

  *அரசியல் கட்சிகள விடுங்க; அரசாங்கமே உங்க கிட்டேயிருந்து இதை பறிச்சு அமுலாக்கிடாமல் பாத்துக்குங்க; அப்புறம் கட்சியே நடத்தமுடியாமல் போயிடும்!*

- *அரசு தடையையும் மீறி, கோயில்களில் சினிமா படப்பிடிப்புகள் நடக்கின்றன.* **– 'இந்து' ஏடு**

  *அதெல்லாம் கோயில் பிரச்சினைகளில், அரசு தலையிட முடியாது; தலையிடவும் கூடாது. இது இராமகோபாலன் உத்தரவு; தெரிஞ்சுக்குங்க.*

- *இந்தியாவிலேயே தூய்மையான நகரங்களில் முதலிடம் மைசூரு; இரண்டாவது திருச்சி.* **– செய்தி**

  *புண்ணியஸ்தலங்களான காசி, இராமேசுவரத்தை இப்படியெல்லாம் அவமானப் படுத்தக் கூடாது.*

- *இரயில்களில் பாட்டுப்பாடி, பிச்சை எடுப்பவர்களை அரசு திட்டங்களின் பிரச்சாரத்துக்குப் பயன்படுத்த மத்திய அரசு திட்டம்.* **– செய்தி**

  *இந்தத் திட்டத்தில், இஸ்லாமிய கிறிஸ்துவ பிச்சைக்காரர்களையும் சேர்த்துப் பீங்களா?*

- *பங்கு சந்தையில் ஏழுமலையான் பெயரில் கணக்கு தொடங்கப்பட்டுள்ளது.* **– செய்தி**

  *சுவிஸ் வங்கியில் ஏற்கெனவே கணக்கு தொடங்கிட்டீங்களா?*

- *'கோ' சாலைகளில் உள்ள பசுக்களை வெளிநாடு வாழ் இந்துக்கள் தத்து எடுக்கலாம்.* **– மத்திய அரசு**

  *அப்படியே அமெரிக்காவுக்கு கொண்டு போய் அங்கே 'கிரீன் கார்டு' கிடைக்கவும் ஏற்பாடு செஞ்சிடுங்க!*

- *இழப்பீடு ஏதும் கிடைக்காத 25,000 மதுரா விவசாயிகள், 'தற்கொலை'க்கு அனுமதி கோரி குடியரசுத் தலைவருக்கு கருணை மனு.* **– செய்தி**

  *அதெல்லாம் உடனே அனுமதி கிடைச்சிடாது! முதலில் உள்துறை அமைச்சகம் பரிசீலிக்கணும்; பிறகு குடியரசுத் தலைவருக்கு பரிந்துரைக்கணும்; அதுக்கப்புறம் குடியரசுத் தலைவர் உடனே கையெழுத்து போட்டுடுவாரு! கவலைப்படாதீங்க!*

(முதல் பக்கத் தொடர்ச்சி)


வேண்டும். இப்போது தமிழகம் முழுதும் மதுக்கடைகளை மூடக் கோரி நடத்தப்படும் போராட்டத்தை ஒடுக்குவதற்கு இந்த அரசு மேற்கொள்ளும் அடக்குமுறைகளை வன்மையாகக் கண்டிக்கிறோம்'' என்று கழகத் தலைவர் கூறினார்.

### கரூர்

திருச்செங்கோட்டைத் தொடர்ந்து கரூரில் மாலை 5 மணியளவில் 'அரெஸ்ட்' தொண்டு நிறுவனக் கட்டிடத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் காமராசர் ஏற்பாடு செய்திருந்த இந்தக் கூட்டத்தில் கரூர் மாவட்டத்தில் கழகப் பரப்புரைப் பயணம் நடத்தும் ஊர்கள் முடிவு செய்யப்பட்டன. பரப்புரை இயக்கத்துக்கு முன் மீண்டும் மாவட்டக் கழகக் கூட்டத்தைக் கூட்டுவது என்றும், அப்போது கழகத் தலைவரை அழைத்து பொதுக் கூட்டம் நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது. கூட்டத்தைத் தொடர்ந்து கழகத்துக்கு பல்வேறு உதவிகளை வழங்கி வரும் 'அரெஸ்ட்' தொண்டு நிறுவன நிர்வாகிகள் கிறிஸ்டி, சாமி ஆகியோரை கழகத் தலைவர், பொதுச் செயலாளர் தோழர்களுடன், 'கட்டளை' கிராமத்திலுள்ள அவர்கள் இல்லம் சென்று சந்தித்து உரையாடினர். அனைவருக்கும் கிறிஸ்டி, சாமி இணையர் இரவு உணவு வழங்கினர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 6th August 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | ஆகஸ்டு 20, 2015 | புரட்சி 14 | முழக்கம் 32 | விலை: ரூ.3.00

## யுவராஜை தேடப்படும் குற்றவாளியாக காவல்துறை அறிவிக்கக் கோரி திருச்செங்கோட்டில் கழகம் ஆர்ப்பாட்டம்

# கொளத்தூர் மணி தலைமையில் 200 தோழர்கள் கைது






*தலித் பொறியாளர் கோகுல்ராஜ் கொலை வழக்கில் தலைமறைவாகியுள்ள குற்றவாளி யுவ ராஜை, தேடப்படும் குற்றவாளியாக அறிவித்து, அவரது சொத்துக்களை பறிமுதல் செய்ய காவல் துறையை வலியுறுத்தி, திராவிடர் விடுதலைக் கழகம் திருச்செங்கோட்டில் தடையை மீறி கண்டன ஆர்ப் பாட்டம் நடத்தியது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் 200க்கும் மேற்பட்ட கழகத்தினர், ஆதித் தமிழர் பேரவை பொறுப்பாளர்களும் கைதானார்கள்.*

சேலம் மாவட்டம் ஓமலூர் பகுதியைச் சேர்ந்தவர் பொறியாளர் கோகுல்ராஜ். நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் ஒத்தகடை பகுதியைச் சேர்ந்தவர் சுவாதி. இருவரும் ஒன்றாகக் கல்லூரியில் படித்த நண்பர்கள் ஆவர். கடந்த 50 நாள்களுக்கு முன்னர் பொறியாளர் கோகுல் ராஜும், சுவாதியும் திருச்செங்கோட்டில் உள்ள அர்த்த நாரீஸ்வரர் மலைக்கோவிலுக்கு வந்தபோது அவர்களை ஜாதியின் பெயரால் பிரிக்கும் நோக்கத்தில் தீரன் சின்னமலை கவுண்டர் பேரவை என்கிற ஜாதி அமைப்பின் நிறுவனர் யுவராஜ் என்பவர் தலைமையில் 20க்கும் மேற்பட்ட ரவுடிகள் கோகுல்ராஜ், சுவாதி ஆகியோரைப் பிடித்து அவர்களின் ஜாதிகளைப் பற்றி விசாரித்தப்பின்னர் சுவாதியை மட்டும் வீட்டுக்கு அனுப்பிவிட்டு தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர் என்கிற காரணத்தினால் ஜாதிய வெறியோடு பொறியாளர் கோகுல்ராஜை கடத்திச் சென்று பள்ளிபாளையம் இரயில் மார்க்கத்தில் தொட்டிபாளையம் என்ற பகுதியில் அவரை கொலை செய்து இரயில்வே தண்டவாளத்தில் தூக்கி எறிந்துவிட்டுச் சென்றனர்.

தமிழகம் முழுவதும் பெரும் அதிர்வை ஏற்படுத்திய இந்த ஜாதிய ஆணவ படுகொலையில் சம்மந்தப்பட்ட குற்றவாளிகளை தமிழக அரசும், காவல்துறையும் கைது செய்யாமல் மெத்தனம் காட்டி வந்தது. பல்வேறு அமைப்பினர் தொடர்ச்சியாக போராட்டங்களில் ஈடுபட்டபிறகு இக்கொலையில் சம்மந்தப்பட்ட 11 நபர்களை மட்டும் கைது செய்தனர். இக்கொலையில் முக்கிய குற்றவாளியான தீரன் சின்னமலை கவுண்டர் பேரவை நிறுவனர் யுவராஜை மட்டும் காவல்துறையினர் இதுவரை கைது செய்யவில்லை. இதனைக் கண்டித்தும் யுவராஜை கைது செய்ய வலியுறுத்தியும், திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் ஆகஸ்டு 17ந் தேதி நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிவித்தார். அதன்பிறகு இவ்வழக்கில் ஏற்கனவே கைது செய்யப்பட்ட 11 நபர்களில் நான்கு பேர்கள் மீது காவல்துறையினர் குண்டர் சட்டத்தை பாய்ச்சினர். முக்கிய குற்றவாளியான யுவராஜ் தொடர்ந்து தலைமறைவாக உள்ளார் என காவல் துறையினர் சொல்லிவந்தனர்.

ஏற்கனவே கழகத்தலைவர் கொளத்தூர் மணி அறிவித்தப்படி திருச்செங்கோட்டில் நாமக்கல் மாவட்ட செயலாளர் வைரம் 17-ந்தேதி கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த ஆகஸ்ட் 8ஆம் தேதியே காவல்துறையினரிடம் முறையாக அனுமதிக் கேட்டு விண்ணப்பித்திருந்தார். அனுமதி கொடுக்காமல் இழுத்தடித்த திருச்செங்கோடு காவல்துறை கண்காணிப்பாளர் விஷ்ணுபிரியா 16-ந்தேதி இரவு அனுமதி மறுத்ததாக தெரிவித்தார்.

எனவே, ஏற்கனவே திட்டமிட்டபடி 17-ந்தேதி திங்கள்கிழமை 11 மணியளவில் காவல்துறை தடையை மீறி திருச்செங்கோடு காவல் நிலையம் எதிரே கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேசுகையில் -

“தமிழ்நாட்டில் அண்மைகாலங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான தாக்குதல் அதுவும் ஆணவக் கொலைகள் என்கிற பெயராலே ஏராளமான ஜாதிய ஆணவக் கொலைகள் நடைபெற்று வருவதை திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் வன்மையாக கண்டிக்கிறோம். அதேபோல் பொறியாளர் கோகுல்ராஜ் கொலைவழக்கில் முக்கிய குற்றவாளியான யுவராஜ் இதுவரையிலும் கைதுசெய்யப்படாமல் இருக்கிறார். குற்றவியல் நடைமுறை சட்டத்தில் 82ஆவது பிரிவின் கீழ் அவரை அறிவிக்கப்பட்ட குற்றவாளியாக அறிவிக்கவேண்டும். 83ஆவது பிரிவின்படி அவரின் சொத்துக்களை முடக்கி அவரை உடனடியாக சரணடையச் செய்யவேண்டுமென்று கழகத்தின் சார்பில் நாங்கள் வலியுறுத்துகிறோம். இது வரை காவல் துறை அவ்வாறு செய்யவில்லை உடனடியாக மேற்கூறிய நடவடிக்கைகளை காவல்துறை எடுக்கவேண்டும். அதேபோல் இந்தியாவின் சட்ட ஆணையம் இப்படிப்பட்ட கவுரவ கொலைகளுக்கு, திருமண விவகாரங்களில் தலையிடுவதற்கு எதிராக ஒரு சட்டத்தை வடிவமைத்து கடந்த 2012இல் கொடுத்திருக் கிறது. அந்த சட்ட வரைவு குறித்து மற்ற மாநிலங்களில் கருத்து கேட்டப்பொழுது தென்னிந்தியாவில் தமிழகத்தை தவிர அனைத்து மாநிலங்களும் தங்களின் கருத்துக்களை தெரிவித்து விட்டனர். ஆனால் தமிழ்நாடு மட்டும் தனது கருத்தை இன்னமும் தெரிவிக்கவில்லை. தமிழ்நாடு அரசு உடனடியாக ‘திருமண விவகார தலையீட்டு தடுப்புச் சட்ட’த் தில் தனது கருத்தை தெரிவிப்பதோடு மற்ற மாநிலங் களுக்கு முன்மாதிரியாக அச்சட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டு”மென கூறி வலியுறுத்தினார்.

முன்னதாக தடையை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி மற்றும் நான்கு பெண்கள் மூன்று குழந்தைகள் உள்பட 200க்கும் மேற்பட்ட கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டு திருச்செங்கோடு காமராஜர் திருமண அரங்கில் வைக்கப்பட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் மாநில பொருளாளர் திருப்பூர் துரைசாமி, மாநில பரப்புரைச் செயலாளர் தூத்துக்குடி பால். பிரபாகரன், மாநில அமைப்பு செயலாளர் ஈரோடு ரத்தினசாமி, மாநில வெளியீட்டுச் செயலாளர் கோபி இராம. இளங்கோவன், ஈரோடு தெற்கு மாவட்ட செயலாளர் சண்முக பிரியன், மாவட்ட அமைப்பாளர்கள் சென்னிமலை செல்வராஜ், குமார், தர்மபுரி மாவட்ட செயலாளர் பரமசிவம், ஈரோடு வடக்கு மாவட்டத் தலைவர் நாத்திகஜோதி, மாவட்ட செயலாளர் பவானி வேணு கோபால், பவானி ஒன்றிய செயலாளர் வினோத், மாவட்ட பொருளாளர் பள்ளிபாளையம் முத்துப்பாண்டி, சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் மேட்டூர் கோவிந்தராஜ், மாவட்ட அமைப்பாளர் டைகர் பாலன், மாவட்ட பொருளாளர் சம்பத், சேலம் கிழக்கு மாவட்ட தலைவர் ஓமலூர் சக்திவேல், மாவட்ட செயலாளர் டேவிட், மாவட்ட பொருளாளர் ஏற்காடு பெருமாள், சுகபக ஒருங்கிணைப் பாளர் கொளத்தூர் குமார், கோவை மாநகர தலைவர் நேருதாஸ், மாநகர செயலாளர் நிர்மல் குமார், மாநகர பொருளாளர் கிருஷ்ணன், கோவை வடக்கு மாவட்ட தலைவர் மேட்டுப்பாளையம் இராமசந்திரன், செயலாளர் பாபு, அமைப்பாளர் முருகேசன், திருப்பூர் மாவட்ட செயலாளர் முகில்ராசு, மாநகர செயலாளர் நீதிராசன், அகிலன், பல்லடம் வடிவேலு, பல்லடம் சண்முகம், ஆதித்தமிழர் பேரவை பொறுப்பாளர்கள் துணைச் செயலாளர், லேமு சந்திரன், கொள்கைப் பரப்பு துணை செயலாளர் செல்வ வில்லாளன், நாமக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் தமிழரசு, கார்த்திகை முருகன் சிவகுமார், திருவாரூர் மாவட்ட செயலாளர் இரா.காளிதாசு உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகள் கைதாகினர்.

ஆர்ப்பாட்ட நிகழ்ச்சியை நாமக்கல் மாவட்டத் தலைவர் சாமிநாதன், மாவட்டச் செயலாளர் சரவணன், மாவட்ட அமைப்பாளர் வைரம், திருச்செங்கோடு நகரத் தலைவர் சோம சுந்தரம், நகரச் செயலாளர் நித்தியானந்தன், கார்த்தி, பிரகாஷ் உள்ளிட்ட தோழர்கள் சிறப்பாக ஏற்பாடுகள் செய்திருந்தனர்.

செய்தி -மன்னை இரா.காளிதாசு

**யுவராஜின் மற்றொரு வெறிப் பேச்சு உள்ளே**

தலையங்கம்

# தீண்டாமையைத் திணிக்கும் 'திருவிழா' கலவரங்கள்

தலித் மக்களுக்கு எதிராக தமிழ்நாட்டில் ஜாதிவெறித் தாக்குதல் அதிகரித்து வருவது தமிழ்நாட்டுக்கே அவமானம்! ஆடி மாதம் வந்து விட்டால் போதும்; கிராமத் திருவிழாக்களில் ஜாதி வெறியாட்டம் போடத் தொடங்கிவிடுகிறது. சங்கராபுரம் வட்டத்தில் சேஷ சமுத்திரம் கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் நடத்தும் அம்மன் தேர் ஊர்வலம், ஊர் பொதுச் சாலையில் வரக்கூடாது என்று ஜாதிவெறியோடு தேர் மீது பெட்ரோல் குண்டுகளை வீசி, தலித் மக்கள் குடியிருப்புகளையும் எரித்ததோடு, பாதுகாப்புக்கு வந்த காவல்துறையினரையும் தாக்கியுள்ளனர்.

இந்தியாவின் 'சுதந்திர' நாளை தேசியக்கொடி ஏற்றிக் கொண்டாடிக் கொண்டிருக்கிற நேரத்தில் சமூகத்தின் ஒரு பிரிவு மக்களை நாட்டின் 'குடிமக்களாகவே' ஏற்க முடியாது என்று ஜாதி வெறியர்கள் ஆணவத்தோடு கொக்கரிக் கிறார்கள். இதில் மிகப் பெரிய கொடுமை, பா.ம.க. நிறுவனர், மருத்துவர் இராமதாசு வெளியிட்டுள்ள அறிக்கைதான். தாழ்த்தப்பட்ட மக்களின் அம்மன் தேர், பொது வீதியில் வரக் கூடாது என்று தடுக்கும் 'தீண்டாமை-ஜாதி' வெறியையோ, தேர் மீது பெட்ரோல் குண்டு வீசி எரித்ததையோ, முற்றிலுமாக புறந்தள்ளி விட்டு, ஜாதிவெறியர்கள் மீது காவல்துறை தாக்குதல் நடத்தியதாக மட்டும் கூறி மனித உரிமை மீறல் என்று கண்டித்துள்ளார். ஒவ்வொரு கிராமத்திலும் தீண்டாமையும் ஜாதி வெறியையும் பாதுகாப்பதுதான் 'பாட்டாளி' களுக்கான அடையாளமா என்று கேட்கிறோம். இவர்கள்தான் தமிழ் நாட்டின் ஆட்சி அதிகாரத்தை தங்களிடம் தரவேண்டும் என்று மக்களிடம் மனு போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இதேபோல், மயிலாடுதுறை அருகே உள்ள வழுவூர் கிராமத்தில், தலித் மக்களின் 'சாமி' ஊர்வலம் பொது வீதிகளில் வருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, ஜாதி வெறியர்கள் தலித் மக்களை வெட்டியிருக்கிறார்கள். சிவகங்கை மாவட்டம் கண்டதேவியில் கள்ளர்கள் என்ற ஜாதிப் பிரிவினர் மட்டுமே தேர்வடம் பிடிக்க வேண்டும். தலித் மக்கள் தேர் நின்று போகும்போது, பின்னால் இருந்து தள்ளிவிட வேண்டுமே தவிர, 'தேர் வடம்' பிடிக்க முடியாது என்று தடை போட்டு வரு கிறார்கள். 1934ஆம் ஆண்டிலேயே காந்தியார் தேவ கோட்டைக்கு வந்து இரு பிரிவினருக்கும் 'சமாதானம்' செய்ய முயன்றார். 1875ஆம் ஆண்டு இந்தத் தேரை இழுப்பதில் கலவரம் ஏற்பட்டு, 8 பேர் கொல்லப்பட்டார்கள். 1998ஆம் ஆண்டு தலித் மக்கள் தங்கள் மீது திணிக்கப்பட்டு வரும் 'தீண்டாமை' அவமானத்துக்கு எதிராக தங்களுக்கும் தேர்வடம் பிடிக்கும் உரிமை கோரினார்கள். பழுதாகிக் கிடக்கும் தேரை சரி செய்வதற்காக கடந்த சில ஆண்டுகளாக தேரோட்டம் நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்து அற நிலையத் துறைப் பிரச்சினையிலிருந்து தப்பித்துக் கொள்ள 'தேரை' சரி செய்யாமல் போட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

'கிராமக் கடவுள்கள்' பார்ப்பனிய சடங்குகளுக்கு எதிரானவை என்றும், அதில் தமிழர்களின் பண்பாட்டு அடை யாளங்கள் இருப்பதாகவும் தமிழின உணர்வாளர்களிலேயே சிலர் எழுதியும் பேசியும் வருகிறார்கள். கிராமக் கடவுள்கள் ஜாதிவாரியாகப் பிரிந்து கிடப்பதும், அதன் விழாக்களில் ஜாதி வெறி வெளிப்படுவதும்தான் தமிழர்களின் பண்பாட்டு அடையாளங்களா என்று நாம் கேட்க வேண்டியிருக்கிறது.

ஜாதி எதிர்ப்பைப் பேசிய பெரியார், அதில் பார்ப்பன எதிர்ப்பு, இந்து மத எதிர்ப்பு, மூடநம்பிக்கை எதிர்ப்பு ஆகிய வற்றையும் இணைத்துக் கொண்டு, இவை ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாமல் பிணைந்திருப்பதை சுட்டிக் காட்டினார். இப்போது நடக்கும் கலவரங்களில் இந்த மூன்றும் இணைந்தே நிற்கின்றன. சொல்லப் போனால் கடவுள் பக்தியைவிட ஜாதி வெறிதான் முந்திக் கொண்டு நிற்கிறது. அதனால்தான் அம்மன் தேர் மீதே பெட்ரோல் குண்டுகளை வீசுகிறார்கள். கண்டதேவி தேர் ஓடாவிட்டாலும் பரவா யில்லை; 'தலித்' மக்கள் வடம் பிடிக்கக் கூடாது என்கிறார்கள்.

கடவுள் மறுப்பை கொள்கையாக ஏற்றுக் கொண்ட பெரியார் இயக்கம், அனைத்துப் பிரிவினருக்குமான கோயில் நுழைவையும் அர்ச்சகர் ஆகும் உரிமையையும் வலியுறுத்தி வருவதுபோல இந்த 'திருவிழா'க்களில் திணிக்கப்படும் 'தீண்டாமை'ப் பிரச்சினைகளையும் சுயமரியாதைக் கண்ணோட்டத்தில் பார்க்கிறது. தமிழ்நாட்டை ஜாதி வெறிக் களமாக மாற்றிடும் சமுதாய ஆபத்துகளை எந்த அரசியல் கட்சியும் கண்டு கொள்வதே இல்லை. ஓட்டு அரசியல் அவர்களைத் தடுக்கிறது. இந்தப் பின்னணியில் தான் திராவிடர் விடுதலைக் கழகம் – "எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்; இளைய தலைமுறைக்கு வேலை வேண்டும்" என்ற முழக்கத்தோடு மக்கள் சந்திப்பு பரப்புரை இயக்கங்களை நடத்த திட்டமிட்டிருக்கிறது. தமிழகத்தில் சமூக ஒற்றுமைக்கும் சமத்துவ உணர்வுக்கும் ஜாதிய அமைப்புகள் சவால்விட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த வெறி யூட்டல்களை எதிர்கொள்வதில் அலட்சியம் காட்டினால் தமிழகம் ஜாதி வெறிக் களமாகிவிடும் ஆபத்தினை சமுதாயக் கவலை கொண்ட இயக்கங்கள் உணர வேண்டும்.

ஜாதிவெறியை உசுப்பிவிட்டு, தீண்டாமையை நியாயப் படுத்தும் ஜாதிவெறி சக்திகள் மீது உறுதியான நட வடிக்கைகளை எடுக்க தமிழக காவல்துறை முன் வரவேண்டும்.

# மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள்

*மாவட்டக் கலந்துரையாடல் கூட்டங் களில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிவித்த மாவட்டப் பொறுப்பாளர்கள்.*

## நாகை

**நாகை மாவட்டப் பொறுப்பாளர்கள் :** ம. மகாலிங்கம்-தலைவர்; தெ. மகேசு-செய லாளர்; தெ. ரமேசு-துணைச் செயலாளர்; மு. அன்பு-அமைப்பாளர்; ந.விஜயராகவன்-பொருளாளர்.

**மயிலாடுதுறை நகரப் பொறுப்பாளர்கள் :** நாஞ்சில் சங்கர்-தலைவர்; நி. நடராஜ் -துணைத் தலைவர்; ப. தமிழ்வேலன்-செயலாளர்; ரா. ராஜராஜசோழன்-இணைச் செயலாளர்; ஜி.ஆர். செந்தில்குமார்-அமைப்பாளர்.

**ஒன்றிய அமைப்பாளர்கள்:** யுவராஜ்-மயிலாடுதுறை ஒன்றிய அமைப்பாளர்; ஜெ. இயற்கை-குத்தாலம் ஒன்றிய அமைப்பாளர்; பூம்புகார் முருகன் - செம்பனார்கோயில் ஒன்றிய அமைப்பாளர்.

**தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப் பாளர்** – தெ. சுரேஷ்

**அறிவியல் மன்ற உறுப்பினர்கள் :** ம. ஜீவன் ராஜ், சரவணகுமாரி, இளவரசி, நவநீதம்.

## கடலூர்

**மாவட்டப் பொறுப்பாளர்கள்:** நட. பாரதி தாசன்-செயலாளர்; ப. பாலமுருகன்-அமைப் பாளர்; செந்தில்நாதன்-பொருளாளர்.

**விருத்தாசலம் நகரப் பொறுப்பாளர்கள் :** சங்கர்-செயலாளர்; சரவணகுமார்-ஒன்றிய செயலாளர்; ஐய்யப்பன்-துணைச் செயலாளர்; அலெக்ஸ்சாண்டர்-ஒன்றிய அமைப்பாளர்; விஜயகுமார்-துணை அமைப்பாளர்.

**சிதம்பரம் நகரச் செயலாளர் :** மதன் குமார்

**நெய்வேலி நகரச் செயலாளர் :** சிலம்பரசன்

**கம்மாபுரம் ஒன்றியப் பொறுப்பாளர்கள் :** ப. பார்த்திபன்-செயலாளர்; ம.ராஜதுரை-துணை செயலாளர்; சிலம்பரசன்-ஒன்றிய அமைப்பாளர்; ப.மோகன்-துணை அமைப் பாளர்.

**தமிழ்நாடு மாணவர் கழகப் பொறுப் பாளர்கள்:** ப. கரிகாலன்-தலைவர்; சே.பாலாஜி-செயலாளர்; ஆ.தினேஷ்-பொருளாளர்; செ. மணிகண்டன்-அமைப்பாளர்.

## திருவாரூர்

**திருவாரூர் மாவட்டப் பொறுப்பாளர்கள்:** மன்னார் குடி நகர அமைப்பாளர்-சசிக்குமார்; மன்னை ஒன்றிய அமைப்பாளர் - பொறியாளர் நெடுவை. வாசுதேவன்; தமிழ்நாடு அறிவியல் மன்ற மாவட்ட அமைப்பாளர்-முரளி சங்கர்; இரா. காளிதாஸ்-மாவட்ட செயலாளர்; செந் தமிழன்-நீடாமங்கலம் ஒன்றிய அமைப்பாளர்; முருகன்-நல்லிக்கோட்டை ஒன்றிய செய லாளர்; தென்பரை பன்னீர்செல்வம்-கோட்டூர் ஒன்றிய அமைப்பாளர்.

## தஞ்சை

**தஞ்சை மாவட்டப் பொறுப்பாளர்கள்:** சித. திருவேங்கடம்-அமைப்பாளர்; அ.கோவிந் தன்-பேராவூரணி ஒன்றிய அமைப்பாளர்; ப. வைத்தியலிங்கம்-சேதுபவா சத்திரம் ஒன்றிய தலைவர்; சுப. ஜெயச்சந்திரன்-சேதுபவா சத்திரம் ஒன்றிய செயலாளர்; சிவ.சுப்ரமணியம்-ஒரத்தநாடு ஒன்றிய செயலாளர்; ஏனாதி சங்கர்-பட்டுக்கோட்டை ஒன்றிய செயலாளர்; கரிகாலன்-திருவிடைமருதூர் ஒன்றிய செய லாளர்; கார்த்திகேயன்-வடசேரி ஒன்றிய தலைவர்; பிரபாகரன்-செயலாளர்.

## விழுப்புரம்

**விழுப்புரம் மாவட்டப் பொறுப்பாளர்கள் :** கொள்ளியூர் வழக்கறிஞர் தமிழ்குமரன்-தலைவர்; கடுவனூர் கு.ச. பெரியார் வெங்கட்-செயலாளர்; நெடுமானூர் செ.நாவாப்பிள்ளை-அமைப் பாளர்; நைனார்பாளையம் மதியழகன் -துணைத் தலைவர்; தொழுவந்தாங்கல் குப்பு சாமி-துணைச் செயலாளர்; நெடுமானூர் வேலாயுதம்-இளைஞரணி செயலாளர்; கடுவனூர் மு.நாகராஜ்-இளைஞரணி அமைப் பாளர்; வீ. வினோத்-தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர்.

**சங்கரபாபுரம் ஒன்றியம் :** செம்பரம் பட்டு ராஜேஷ்-செயலாளர்; மூங்கில்துறைபட்டு பன்னீர்செல்வம்-தலைவர்; அரசு. மூக்கனூர்-அமைப்பாளர்.

**ரிஷிவந்தியம் ஒன்றியம்:** தொழு வந்தாங்கல் முருகன்-தலைவர்; கடுவனூர் வெங்கடேசன்-செயலாளர்.

**தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப் பாளர்** -கல்லை சி. ஆசைத்தம்பி

# சேஷ சமுத்திரத்தில் ஜாதி வெறிக் கலவரம்: நடந்தது என்ன?

விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டத்துக்கு உட்பட்டது சேஷ சமுத்திர கிராமம். இந்த கிராமத்தில் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன் அப்பகுதியைச் சார்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் அம்மன் தேர் ஊர்வலம், பேருந்து போகும் ஊர் பொதுச் சாலையில் தாழ்த்தப்பட்ட மக்கள் தேர் இழுக்க முயன்றனர். இதைப் பொருத்துக் கொள்ள முடியாத ஜாதி வெறியர்கள் தேர் ஊர்வலத்தைத் தடுத்து நிறுத்தி, அம்மக்கள் மீது தாக்குதல் நடத்தினர். இதனால் இரு தரப்பு ஊர் விழாக்களையும் நடத்த தடை உத்தரவு போட்டனர். ஆதலால் கடந்த நான்கு ஆண்டுகளாக அந்த கிராமத்தில் எந்த விழாவும் நடைபெறவில்லை. இருப்பினும் இரு தரப்பினர்களுக்கிடையே இதுவரை பத்து முறை சமாதானக் கூட்டம் நடைபெற்றது. கடைசியாக நான்கு ஆண்டுகளுக்கு முன்பு சமாதானக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் முதலில் தாழ்த்தப்பட்ட மக்கள் திருவிழாவிற்குப் பிறகு பிற்படுத்தப்பட்ட மக்கள் நடத்திக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்யப்பட்ட நிலையில், 16.8.2015 அன்று காலையில் தேர் இழுப்பதென்று முடிவு செய்து, இந்த ஊர்வலத்தில் மாவட்ட ஆட்சியரும் பங்குபெற இருந்தார்.

விழா ஏற்பாடு செய்த கொண்டிருந்த நிலையில், அந்த ஊரைச் சார்ந்த ஊராட்சி மன்றத் தலைவர் சுப்ரமணி (தலைவர், பா.ம.க.), அண்ணாதுரை (கவுன்சிலர் அ.தி.மு.க.), இளையாமுட்டு இராமச்சந்திரன் (அ.தி.மு.க.), வேலு (தி.மு.க.) ஆகியோர் தூண்டுதலின்பேரில் பெட்ரோல் பாட்டிலுடன் சென்று 15.8.2015 அன்று இரவு தாக்குதல் நடத்தினர். இதில் தாழ்த்தப்பட்ட மக்களின் ஏழு வீடுகள் எரிந்து தீக்கிரையாக்கப்பட்டது. முற்றிலும் எல்லா பொருள்களும் எரிந்தன. தாழ்த்தப்பட்ட மக்கள் பலர் படுகாயமுற்றதுடன் பாதுகாப்பிற்கு இருந்த ஏழு காவல்துறையினர் படுகாயம் அடைந்தனர். ஒரு காவலருக்கு கண் பாதிக்கப்பட்டுள்து. பாதிக்கப்பட்ட ஏழு காவல்துறையினரும் கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். தாழ்த்தப்பட்ட மக்கள் ஏற்பாடு செய்திருந்தனர். தேரையும் தீ வைத்து எரித்ததுடன் பொது மக்கள் மற்றும் காவல்துறையை சார்ந்த அய்ந்து இரு சக்கர வாகனங்களை எரித்து விட்டனர்.

பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் இரவோடு இரவாக உயிருக்கு பயந்து பல கிராமங்களுக்குச் சென்று தஞ்சம் அடைந்தனர். கழகத்தின் மாவட்ட பொறுப்பாளர்கள் செ.நாவாப்பிள்ளை, வேலாயுதம் ஆகியோர் பாதிக்கப்பட்டவர்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்தனர். மறுநாள் காலையில் மாவட்டப் பொறுப்பாளர்கள் தமிழ்க் குமரன், பெரியார் வெங்கட், செ.நாவாப்பிள்ளை, குப்புசாமி, வேலாயுதம், நாகராஜ், முருகன், இராமர் ஆகியோர் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சென்று பார்த்து வந்தனர். இவ்வளவு பெரிய சாதிவெறி தாக்குதலுக்கு மேற்குறிப்பிட்ட நான்கு பேரையும் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் கைது செய்யக் கோரியும், தாழ்த்தப்பட்ட மக்கள் தேர் இழுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கக் கோரியும், காவல்துறையின் தடையை மீறி கழகம் ஆர்ப்பாட்டம் நடத்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

**– நமது செய்தியாளர்**

## சங்கராபுரத்தில் பறை முழக்கத்துடன் வரவேற்பு

# ஜாதி எதிர்ப்புக் களம் நோக்கி கழகம் தயாராகிறது!

*திராவிடர் விடுதலைக் கழக மாவட்டக் கலந்துரையாடல் கூட்டங்களின் 3ஆம் கட்டப் பயணம், ஆகஸ்ட் 12ஆம் தேதி தொடங்கியது. இந்தப் பயணத்தில் கழகப் பொறுப்பாளர்களுடன் பரப்புரை செயலாளர் பால். பிரபாகரனும் பங்கேற்றார்.*

### தஞ்சை



தஞ்சை மாவட்டக் கழகத்தின் கலந்துரையாடல், ஆக.12ஆம் தேதி பகல் 11 மணியளவில் பட்டுக் கோட்டை 'அரசு பிளாசா' அரங்கில் தொடங்கியது. அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, கடவுள், ஆத்மா மறுப்புகளைக் கூறி, தொடக்க உரை நிகழ்த்தினார். தோழர்கள் கு.பாரி, சி.த. திருவேங்கடம், அ.கோவிந்தன், மூத்த பெரியார் தொண்டர் ப.வைத்தியலிங்கம், ப.ஜெயச்சந்திரன், வடசேரி சிவசுப்ரமணியன், கார்த்திகேயன், பள்ளத்தூர் நாவலரசன், கரிகாலன், பசு. கவுதமன், பொருளாளர் துரைசாமி, பரப்புரை செயலாளர் பால். பிரபாகரன் ஆகியோரைத் தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரையாற்றி, பொறுப் பாளர்களை அறிவித்தார். "எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்; இளைய தலைமுறைக்கு வேலை வேண்டும்" - என்ற முழக்கத்தை முன் வைத்து கழகம் திட்டமிட்டுள்ள பரப்புரை இயக்கத்தை மாவட்டத்தில் நான்கு நாட்கள் நடத்துவதாக தோழர்கள் தெரிவித்தனர்.

நூறு வயதைக் கடந்த மூத்த பெரியார் தொண்டர் வைத்தியலிங்கம், ரூ.10,000-த்துக்கு கழக நூல்களை சொந்தப் பொறுப்பில் வாங்கிக் கொள்வதாக அறி வித்தார். பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட வேண்டும் என்ற கருத்தை தோழர்கள் பலரும் வலியுறுத்தினர். குறைந்த செலவில் ஒரு நாள், இரண்டு நாள் பயிற்சி வகுப்புகளை நடத்த தோழர்கள் திட்டமிட்டால், பொறுப்பாளர்கள் பயிற்சி அளிக்கத் தயாராக இருக்கிறோம் என்று கழகத் தலைவர் அறிவித்தார்.

### மன்னார்குடி



ஆகஸ்டு 12ஆம் தேதி மாலை 6.30 மணியளவில் மன்னார்குடி மதர்சா அரங்கில் திருவாரூர் மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் தொடங்கியது. கடவுள், ஆத்மா மறுப்பு உறுதி ஏற்பைத் தொடர்ந்து, இரா. காளிதாசு வரவேற்புரையாற்றிட பரப்புரைச் செய லாளர் பால். பிரபாகரன் தொடக்க உரையாற்றினார். தொடர்ந்து ஆசிரியர் கலைபாரதி, சசிகுமார், கோவில் வேள்ளி செந்தமிழன், முருகன், ஃபிளக்ஸ் முரளி, கழக அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, பொருளாளர் துரைசாமி உரையாற்றினர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரையாற்றி, பொறுப் பாளர்களை அறிவித்தார். மாவட்டத்தில் பரப்புரைப் பயணத்தை 6 நாள்கள் நடத்துவதாக மாவட்ட கழக சார்பில் காளிதாசு அறிவித்தார். பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட வேண்டும். கல்லூரி மாணவர்களிடம் பெரியார் கருத்துகளைக் கொண்டு செல்ல வேண்டும். செயல்வீரர்கள் கூட்டத்தைக் கூட்டி, பெரியார்- அம்பேத்கர் கொள்கைகளை விளக்க வேண்டும். பெரியார் பிறந்த நாள் விழாவை கொள்கைப் பரப்பும் நாளாக பின்பற்ற வேண்டும் என்ற கருத்துகளை தோழர்கள் வலியுறுத்தினர்.

### மயிலாடுதுறை



ஆகஸ்டு 13ஆம் தேதி பகல் 11.30 மணியளவில் நாகை மாவட்ட கலந்துரையாடல் கூட்டம், சின்னகடை வீதியிலுள்ள ஆர்.ஓ.ஏ. கட்டிடத்தில் தொடங்கியது. அன்பு, கடவுள், ஆத்மா மறுப்பு உறுதி மொழிகளைக் கூறினார். மகேஷ் வரவேற் புரையாற்ற, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், பரப்புரைக் கூட்டத்தின் நோக்கங்களை விளக்கினார். கழகத் தோழர்கள் மகாலிங்கம், வழக்கறிஞர் இளையராஜா, 'புத்தகச் சோலை' விஜி, செந்தில், மாணவர் சுரேஷ், ஜீவன் ராஜ், குவைத் செந்தில்நாதன், யுவராஜ், சரவண குமாரி, பூம்புகார் முருகன், கோவி. அசோகன், உதயகுமார், வழக்கறிஞர் நன்மாறன், இரமேஷ் ஆகியோர் உரையாற்றினர். அமைப்புச் செயலாளர் இரத்தின சாமி, பொருளாளர் துரைசாமி, பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் ஆகியோர் உரையைத் தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரையாற்றி, பொறுப்பாளர்களை அறிவித்தார். கீழ்க்கண்ட கருத்துகளை தோழர்கள் முன் வைத்தனர்.

மயிலாடுதுறையில் கழகத்தை வளர்ப்பதற்கு நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன. நாம்தான் அதைப் பயன்படுத்தாமல் இருக்கிறோம். இனியாவது, நமது பணிகளை மேலும் தீவிரப்படுத்த வேண்டும். ஜாதிய உணர்வுகள் வேகமாக பரவத் தொடங்கியிருப்பதால், நமது ஜாதி எதிர்ப்பு இயக்கமும் தீவிரமாக வேண்டும். அவ்வப்போது குறைந்தது இரண்டு மாதத்துக்கு ஒரு முறையாவது துண்டறிக்கைகள் வழியாக கருத்துகளை மக்களிடம் கொண்டு செல்லும் இயக்கத்தை தொடர்ந்து நடத்த வேண்டும். வாழ்க்கையோடு இணைந்த ஒரு பகுதிதான் நமது சமூகச் செயல்பாடு.கலை வடிவங்கள் வழியாக பரப்புரைக்கு திட்டமிடல் வேண்டும். இது மக்களிடம் எளிதில் சென்றடைகிறது என்ற கருத்துகளை தோழர்கள் முன் வைத்தனர். பகல் 2 மணியளவில் கூட்டம் நிறைவடைந்தது.

### கம்மாபுரம்



கடலூர் மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம், கம்மாபுரத்தில் ஒரு திருமண கூடத்தில் மாலை 6 மணிக்கு தொடங்கியது. கடவுள்-ஆத்மா உறுதி யேற்புக்குப் பிறகு அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, கூட்டத்தின் நோக்கத்தை விளக்கினார். பாரதிதாசன் வரவேற்புரையாற்றினார். இந்த கலந்துரையாடல் கூட்டம். பயிற்சி வகுப்பாகவே நடந்தது. பரப்புரை செயலாளர் பால். பிரபாகரன், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகத்தின் அடிப்படையான கொள்கைகளை விளக்கிப் பேசினர். கழகத் தோழர்கள் மதன்குமார், பாலகுமாரன், அம்பேத்கர், செந்தில் ராஜா ஆகியோரைத் தொடர்ந்து கழகப் பொருளாளர் துரைசாமி பேசினார். இறுதியில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரையாற்றி, பொறுப்பாளர்களை அறிவித்தார். மாணவர்களும், இளைஞர்களும் இணைந்து புதிதாக கடலூர் மாவட்டத்தில் உருவாக்கியுள்ள அமைப்பு இதுவாகும். சில மாதங்களுக்கு முன் விருத்தாசலத்தில் இந்தத் தோழர்கள் கழகத் தலைவரை அழைத்து சிறப்பான பொதுக் கூட்டத்தை நடத்தியது குறிப்பிடத்தக்கதாகும். பரப்பரைப் பயணத்தையும் பயிற்சி முகாமையும் நடத்த தயாராக இருப்பதாக தோழர்கள் தெரிவித்தனர்.

### சங்கராபுரம்



ஆகஸ்டு 14ஆம் தேதி, விழுப்புரம் மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம் பகல் 11.30 மணியளவில் சங்கராபுரத்தில் வாசுகி திருமண மண்டபஅரங்கத்தில் தொடங்கியது. முன்னதாக, கள்ளக்குறிச்சியிலிருந்து புறப்பட்டு, சங்கராபுரம் வந்து சேர்ந்து, கழகப் பொறுப்பாளர்களை நகரத்தின் மய்யப் பகுதியி லிருந்து பறை இசை முழக்கத்தோடு தோழர்கள் வரவேற்று, கூட்டம் நடைபெறும் மண்டபம் வரை ஊர்வலமாக அழைத்து வந்தனர். மக்கள் நெருக்கம் அதிகமாக இருந்த கடை வீதியில் கருஞ்சட்டைத் தோழர்கள் ஊர்வலமாக வந்த காட்சியை பொது மக்கள் பெருமளவில் திரண்டு பார்த்தனர்.

அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, கடவுள் ஆத்மா மறுப்புக் கூறி, கூட்டத்தின் நோக்கங்களை விளக்கிப் பேசினார். தலைமைக் குழு உறுப்பினர் அய்யனார்-விழுப்புரம் மாவட்டக் கழகம், பல்வேறு உள்ளூர் பிரச்சினைகளுக்காக தொடர்ந்து களத்தில் போராடுவதை விளக்கினார். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், பரப்புரைப் பயணத்தின் நோக்கங்களையும், ஜாதி வெறியூட்டக் கிளம்பியிருக்கும் ஜாதி சங்கத்தின் சுயநலத்தை மக்களிடம் அம்பலப்படுத்த வேண்டிய அவசியத்தையும் விளக்கிப் பேசினார்.

தொடர்ந்து தோழர் வெற்றிவேல், "பெரியார் காலத்துக்குப் பிறகு அவரது கொள்கைக்கு எதிராக உருவாகியுள்ள புதிய ஆபத்துகளை சுட்டிக்காட்டினார். முதலாளித்துவம் வளர்ந்து, மூடநம்பிக்கைகளை பரப்புகிறது. தமிழ் தேசியம் பேசுவோர் ஜாதி தேசியம் பேசுகிறார்கள். சமூக, விடுதலைக்கும் புரட்சிக்கும் வழி காட்டிய பெரியார், சேகுவேரா, மாாக்ஸ், அம்பேத்கர் போன்ற தலைவர்களை இவர்கள் 'தமிழர்கள் அல்ல' என்று கூறி ஒதுக்கி வள்ளுவரும், வள்ளலாரும்தான் ஜாதி எதிர்ப்பைப் பேசியதாகக் கூறுகிறார்கள். நாமும் இவர்களை மதிக்கிறோம். வள்ளுவர் தனது கருத்துகளை எழுத்தில் வடித்தார். வள்ளலார், தான் வாழ்ந்த இடத்துக்கு மக்களை அழைத்துப் பேசினார். ஆனால், மக்களிடம் சென்று, எதிர் நீச்சல்போட்டு இயக்கங்களை நடத்தியது இல்லை. இந்தத் தலைவர்கள் வாழ்ந்த காலத்தைவிட, பெரியார் வாழ்ந்த காலம் அறிவியல் வளர்ந்த காலம். எனவே சமுதாய மாற்றத்துக்கு அறிவியலைப் பயன்படுத்த வேண்டும் என்ற பார்வை பெரியாருக்கு இருந்தது. அதனால்தான், தமிழ் அறிவியல் மொழியாக்கப்பட வேண்டும் என்ற கவலையில் தமிழ்மொழி பற்றிய தனது கருத்துகளை துணிவுடன் வெளியிட்டார். இதற்காக பெரியாரை தமிழின் எதிரியாக சித்தரிக் கிறார்கள். கோயில்களில் இப்போது ஏராளமான புதிய சடங்குகளை உருவாக்கி விட்டார்கள். சடங்குகள் வழியாக மக்களிடையே கடவுள் நம்பிக்கையை தீவிரமாகப் பரப்புகிறார்கள். கோயில் வழிபாட்டு முறைகளில் ஏராளமான மாற்றங்களைக் கொண்டுவந்து விட்டார்கள். இந்த மாற்றங்களையும் சடங்குகளையும் நாம் கேள்விக்கு உட்படுத்த வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

செஞ்சி சாக்ரட்டீஸ் பேசுகையில்: "மாணவர்கள், இளைஞர்களிடையே பிரச்சாரம் நடத்தப்பட வேண்டும். பயிற்சி வகுப்புகளை நடத்த வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

தொடர்ந்து தோழர்கள் நாவாப்பிள்ளை, பெரியார் வெங்கட், மதியழகன், தமிழ்க் குமரன், இராமன், பொருளாளர் துரைசாமி ஆகியோர் பேசினர். இறுதியாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரையாற்றி பொறுப்பாளர்களை அறிவித்தார். வெங்கடேசன் நன்றி கூற, பிற்பகல் 2 மணியளவில் நிகழ்ச்சி நிறைவடைந்தது. அடுத்தக் கட்ட மாவட்டக் கலந்துரையாடல் ஆகஸ்டு 18இல் சிவகங்கையிலிருந்து தொடங்குகிறது.

**– நமது செய்தியாளர்**

DATE OF PUBLICATION 20.08.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

### “காவல்துறை அதிகாரிகளின் சட்டையை கழற்ற வைப்பேன்”

# யுவராஜின் மற்றொரு வெறிப் பேச்சு

கவுண்டர் ஜாதிப் பெண்ணோடு பழகினார் என்பதற்காக கோகுல் ராஜ் என்ற தலித் பொறியியல் பட்டதாரியை கடத்திச் சென்று கொலை செய்த குற்றத்தில் தேடப்படும் குற்றவாளியாக உள்ள யுவராஜ் என்பவர், ‘வாட்ஸ் அப்’ வழியாக மீண்டும் ஒரு வெறிப் பேச்சை பேசி யிருக்கிறார். ஏற்கெனவே ஒரு முறை இதேபோல் பேசியிருக்கிறார்.

ஆகஸ்டு 15ஆம் தேதி அன்று அவர் பேசிய இரண்டாவது பேச்சு, 37 நிமிடம் நீடிக்கிறது. கவுண்டர் ஜாதியைச் சார்ந்த இளைஞர்கள், அரசியல் கட்சிகளைக் கடந்து, ஒரே அணியாகத் திரள வேண்டும் என்றும், அதற்கான ஒருங்கிணைப்புப் பணி களை தொடங்குமாறும் அவர் கூறி யுள்ளதோடு காவல்துறை அதிகாரி களையும் கடுமையாக எச்சரிக்கை செய்கிறார். ‘நான் வெளியே வந்து உங்கள் சட்டையை கழற்றாமல் விட மாட்டேன்’ என்றும் சவால் விட் டுள்ளார்.

“நமது பெண்டு பிள்ளைகள் கவுரவத்தையும், நமது ஜாதிக்கான பழம் பெருமையையும் காப்பாற்ற வேண்டும்; நமது சமூகத்தின் ஒற்றுமையை அரசியல் கட்சிகள் திட்டமிட்டு சீர்குலைக்க முயற்சிக் கின்றன; நாம் சட்டமன்ற உறுப் பினராகி ஒன்றும் நடக்கப் போவது இல்லை; ஒரு எம்.எல்.ஏ. போய் கிழிச்சது போதும்; நமது ஒட்டு மொத்த ஜாதியும் ஒரே குடையின் கீழ் திரள வேண்டும்; நமக்கு அரசியல் வேண்டாம்; ஒரே சமூகமாக நாம் திரள வேண்டும் என்பதே நமது தாரக மந்திரம். கவுண்டர் சமுதாயத்துக்கு எங்கே, ஒரு பிரச்னை என்றாலும் உடனே அந்த கிராமத்தில் போய் நிற்க வேண்டும். நமது சமுதாயத்தை வைத்து வளர்ந்து எம்.எல்.ஏ.வான தனியரசை எச்சரிக்கிறேன், நீ செய்த மோசடிகள், கோடி கோடியாக அடித்த கொள்ளைகள் அத்தனையும் எனக்குத் தெரியும்; நான் வெளியே வந்த பிறகு, உன்னை சிறைக்கு அனுப்புவதுதான் எனது வேலை; நீ என்ன பெரிய மாவீரனா? சமுதாயத்தைப் பயன் படுத்தி வளர்ந்த நீ, ஜாதியின் ஆணி வேரைப் பிடுங்க நினைக்கிறாய்; அது நடக்காது. பேசாமல், ஒதுக்கிக் கொள் (தனியரசு நடத்திய அமைப்பிலிருந்து வெளியேறி புதிய அமைப்பை உருவாக்கியவர் தான் இந்த யுவராஜ்).

நாம் மற்ற ஜாதிக்காரர்களுக்கு எதிரிகள் அல்ல; அதே நேரத்தில் நமக் கென்று பாரம்பர்யப் பெருமைகள் உண்டு. ஒரு கவுண்டர் இறந்து விட்டால், அதற்கான சாங்கியம் சடங்குகளை செய்வதற்கு அந்தந்த ஜாதிக்காரர்கள்தான் வரவேண்டும். எனவே நாம் மற்ற ஜாதிக்காரர்களிடம் சமூகமாக இருக்கவே விரும்புகிறோம். நமது சமுதாயம்தான் அனைவரையும் அரவணைக்கிற சமுதாயம். நாம் மற்றவர்களுக்கு படியளந்த ஜாதி. இப்போது பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறோம். திருமாவளவன் என்ன செய்தார்? கோகுல்ராஜ் கொலைக்காக கண்ணீர் வடிக்கும் அவர், அந்த குடும்பத்துக்கு இலட்சம் இலட்சமாக அள்ளிக் கொடுத்து விட்டாரா?

நாமக்கல் மாவட்ட காவல்துறை எல்லை மீறி போய் கொண்டிருக்கிறது. நமது சமுதாயத்தைச் சார்ந்த பூபதி, குமாரை குண்டர் சட்டத்தில் கைது செய்திருக்கிறார்கள். இதற்குப் பின்னால் நின்று இயக்குபவர்கள் யார் என்பது தெரியும்! யார் இயக்கினாலும் சரி, காவல்துறைக்கு எச்சரிக்கிறேன், நீங்கள் தான் நீதிமன்றத்துக்கு வந்து நிற்கப் போகிறீர்கள்! நீங்கள் போட்டிருக்கிற காக்கி சட்டையை கழற்றாமல் நான் விடப் போவதில்லை. உயர் அதிகாரிகளுக்குக் கூறுகிறேன், நான் வெளியே வருவேன். அப்போது உங்களைப் பார்த்துக் கொள்கிறேன்.

காவல்துறை குண்டர் சட்டத்தில் கைது செய்ய பரிந்துரைத்தால், கலெக்டர் உடனே கையெழுத்துப் போட்டு விடுவாரா? கலெக்டரும் பதில் சொல்ல வேண்டிய நேரம் வரும்; சொல்ல வைப்பேன். மிரட்டுவதாக நினைக்க வேண்டாம். எனக்கு அதற்கான அவசியமில்லை. நான் உனக்கு பயந்தவன் அல்ல. சாவுதான் உச்சபச்ச பயம். எனக்கு அந்த பயமில்லை. திருச்செங்கோடு நகர காவல்நிலையத்தில் இந்த வழக்கில் ஒரு கவுண்டர் குடும்பப் பெண்ணை அழைத்துப் போய் விசாரித்திருக் கிறார்கள். காவல்துறை அதிகாரிகள் தெருபொறுக்கி நாய்களைப்போல் நடந்திருக்கின்றார்கள். நான் வெளியே வந்தவுடன் என்ன நடக்கப் போகிறது என்பதை பார்க்கப் போகிறீர்கள். எங்கள் பெண்கள் செருப்பு, துடைப்பத்தை எடுத்துக் கொண்டு காவல் நிலையத்துக்கு வரத்தான் போகிறார்கள். டி.எஸ்.பி. ராஜூ, ஒரு சர்வதேச ரவுடி. 8 மாவட்டங்களிலே வலிமையாக உள்ள ஒரு ஜாதி அமைப் பின் தலைவனாக நான் இருக்கிறேன். அதைப் பற்றிக்கூட கவலைப்படாமல், வாய்க்கு வந்தபடி பேசினால் என்னவாகும் தெரியுமா?

ஏ.டி.எஸ்.பி. சந்திரமோகனுக்கு கூறுகிறேன், நீ நிரந்தரமாக வேலை இழக்கப் போகும் நிலை வரும். நான் பயந்து போய் ஓடி ஒளிந்து விட்டதாக நினைத்து விட வேண்டாம். உங்களுக்கு எல்லாம் பாடம் கற்பிக்க - வெளியே வருவேன்” என்று வெறியைக் கக்குகிறது இந்தப் பேச்சு. (அதில் இடம் பெற்றுள்ள வார்த்தை கள் அச்சில் ஏற்றப்பட முடியாதவை)

# கழகத் தலைவரை மனந்திறந்து பாராட்டினார் – காவிரி விவசாய சங்கத் தலைவர்!

கடந்த 11 ஆம் தேதி தஞ்சையில் நடைபெற்ற விவசாயிகள் வாழ்வுரிமை மாநாட்டில் பங்கேற்ற கழகத் தலைவர் கொளத்தூர் மணி, செய்தி தொடர்பாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான டி.கே.எஸ். இளங்கோவன், காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளர் எஸ். திருநாவுக்கரசர், தமிழ் மாநில காங்கிரசின் சட்டமன்ற உறுப்பினர் என்.ஆர்.ரெங்கராஜன், தே.மு.தி.க.வின் மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் பால. அருட்செல்வன் ஆகியோரும், பல்வேறு விவசாய சங்கங்களின் தலைவர்களும் உரையாற்றினர். மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ஆதரித்தும், விளக்கியும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றியதைத் தொடர்ந்து, அந்த மாநாட்டின் நெறியாளரும், அந்த இயக்கத்தின் தலைவருமான பி.ஆர்.பாண்டியன், அந்த இயக்கத்தின் கொடியினை அறிமுகப்படுத்துகின்ற பொறுப்பினை தலைவர் கொளத்தூர் மணியிடம் வழங்கினார்.

பி.ஆர். பாண்டியன், “விவசாயிகள் வாழ்வுரிமை மாநாட்டிற்கு எல்லா கட்சிகளுடைய தலைவர்களையும் அழைத்திருந்தேன். அவர்களில் பெரும்பாலோர் வந்திருந்தனர். வர இயலாதவர்கள் தங்களின் பிரதிநிதிகளை அனுப்பி பங்கேற்றனர். அவர்களை எல்லாம் விட்டுவிட்டு எங்கள் கொடியினை தலைவர் அண்ணன் கொளத்தூர் மணிதான் அறிமுகப்படுத்த வேண்டும் என்று நாங்கள் எண்ணியதற்குக் காரணம், இன்றைக்கு விவசாயிகள் தங்களுடைய வாழ்வதாரத்திற்கான போராட்டக் களத்தில் நின்று கொண்டிருக்கின்றோம், போராளிகளாக.

அப்படிப்பட்ட எங்களுடைய இயக்கத்தின் கொடியினை உண்மையான ஒரு போராளியைக் கொண்டு அறிமுகப்படுத்த வேண்டும் என்று நாங்கள் நினைத்தோம். எனவேதான் தகுதியான ஒரு போராளியைக் கொண்டு, எங்கள் விவசாயத் தோழர்கள் எல்லோரின் ஒப்புதலோடு தலைவர் கொளத்தூர் மணியைக் கொண்டு எங்கள் இயக்கத்தின் கொடியினை அறிமுகப்படுத்துகின்றோம்” என்று பலத்த கைத்தட்டல்களுக்கிடையே அறிவித்தார்.

# ஆர்.பி.எஸ். ஸ்டாலினை கழகத் தலைவர், பொதுச் செயலாளர் சந்தித்தனர்



13.8.2015 அன்று 2 மணிக்கு, மூத்த பெரியாரியலாளரும், கீழ்வெண்மணி கோபால கிருஷ்ண நாயுடு கொலை வழக்கில் கைதான 11 திராவிடர் கழகத் தோழர்களுக்கான வழக்கை முன்னின்று நடத்தியவரும், குடி தாங்கி நிகழ்வில், (தலித் சடலம், ஆதிக்க ஜாதி வீதி வழியாகச் செல்லத் தடை போட்ட ஊர் - குடிதாங்கி. அதை மீறி சடலம் எடுத்துச் செல்லப்பட்டது) மையப் புள்ளியாய் நின்று இயங்கியவருமான ஆர்.பி.எஸ்.ஸ்டாலின், உடல் நலிவுற்றிருக்கிற செய்தியறிந்து, கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழக முன்னணித் தோழரும், எழுத்தாளருமான தஞ்சை பசு. கவுதன் ஆகியோர் கும்பகோணத்தில் அவரது இல்லமான அம்பேத்கர் வளாகம், தந்தை பெரியார் இல்லத்தில் சந்தித்தனர்.

அவரிடம் கீழ்வெண்மணி கொலை, குடிதாங்கி நிகழ்வு போன்றவற்றிலுள்ள அய்யங்களைக் கேட்டறிந்ததோடு, நிகழ்கால அரசியல் குறித்தும் இரண்டு மணி நேரம் உரையாடிவிட்டு விடைபெற்றனர்.

## வினாக்கள்... விடைகள்...!

- இந்தியாவில் ஜாதியம், வகுப்புவாதத்துக்கு இடமில்லை. **– மோடி ‘சுதந்திர’ நாள் பேச்சு**

  அப்போ, ஜாதியை ஆதரிக்கும் அமித்ஷாவையும் குருமூர்த்தியையும் நாடு கடத்தப் போறீங்களா?

- ‘எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்; இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்’ என்றார் பாரதியார். **– ஜெயலலிதா பேச்சு**

  மேடம், இது பாரதியார் பாட்டு அல்ல; ‘கருப்புப் பணம்’ சினிமாவுல கண்ணதாசன் எழுதி நடிச்ச பாட்டு!

- மேல்மலையனூர் அங்காளம்மன் கோயிலில் அம்மனை ஊஞ்சலில் ஆட்டி, அர்ச்சகர் தாலாட்டு பாடினார். **– ‘தினமணி’ செய்தி**

  அம்மனுக்கு காது கேட்காதுங்குற துணிச்சல்... தாலாட்டுப் பாட அர்ச்சகர்கள் எல்லாம் கிளம்பீட்டீங்க.

- தில்லை நடராஜன் கோபுரத்தில் தீட்சதர்கள் தேசியக் கொடி ஏற்றினர். **– செய்தி**

  பரவாயில்லையே! ‘சிவபெருமானால்’ நேரடியாக பூமியில் குதிச்சதா, உச்சநீதிமன்றத்துல மனு போட்டவங்க, இப்ப இந்தியாவின் ‘குடிமகனாக’ மாறிட்டீங்களா?

- வெளியுறவுத் துறையில் சமஸ்கிருதத்துக்கு தனி அதிகாரி. **– செய்தி**

  அப்பாடா! இனிமே ‘லலித்மோடி’ பிரச்சினைகள் வராது. சமஸ்கிருதத் துலேயே வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு கடிதம் எழுதிட்டா, எவனுக்கு, எது புரியப் போவுது?

- பொதுத் துறை நிறுவனமான ‘பி.எஸ்.என்.எல்.’ கடந்த நிதியாண்டில் 2 கோடி வாடிக்கையாளர்களை இழந்துள்ளது. **– செய்தி**

  மிச்சம் மீதியிருக்கும் வாடிக்கையாளர்களையும் விரட்டி அடிக்கும் இலக்கை எட்டும் வரை, பி.எஸ்.என்எல். சேவையை எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது!

- கங்கையை தூய்மைப்படுத்தும் திட்டத்துக்கு உதவிட ஜெர்மன்– ஆஸ்திரேலியா விருப்பம். **– செய்தி**


  ‘புனித’ கங்கையைக் காப்பாற்ற ஏன் கிறிஸ்தவர்களை அழைக்கிறீங்க; இது ‘இந்து’ தர்மத்துக்கே இழுக்கு இல்லையா?

- சுதந்திர தின உரையை மோடி இந்தியில் பேசினார். **– செய்தி**

  இந்தி பேசாத மாநிலங்களுக்கு இந்த பேச்செல்லாம் தேவையில்லைன்னு அவரே ‘தேசபக்தியோடு’ நல்ல முடிவுக்கு வந்துட்டாரு போல!

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 20th August 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | ஆகஸ்டு 27, 2015 | புரட்சி 14 | முழக்கம் 33 | விலை: ரூ.3.00


## எங்கே நிம்மதி?

மனதுக்கு நிம்மதி தேடி, கடவுளைத் தேடிப் போகிறோம் என்கிறார்கள் - பக்தர்கள்! ஆனால் கதை தலைகீழாகிவிட்டது. இப்போதெல்லாம் "கடவுளே நிம்மதி இல்லாமல் இருக்கிறார்" என்ற குரல் கேட்கிறது.

இதைச் சொல்வது - பெரியார் இயக்கத்தினர் அல்ல; சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சய் கிஷன் கவுல், டி.எஸ். சிவஞானம் அடங்கிய அமர்வுதான், இப்படி ஒரு அதிரடி கருத்தை வெளியிட்டிருக்கிறது! அதிரடி இத்துடன் முடிந்துவிடவில்லை. இன்னும் இருக்கிறது.

கோயில் திருவிழாக்களில் பொது அமைதிக்கு குந்தகம் ஏற்படும் வாய்ப்புகள் இருக்குமானால், காவல்துறை திருவிழா நடத்துவதற்கே அனுமதி வழங்கக் கூடாது. இது நீதிபதிகள் வெளியிட்ட இரண்டாவது அதிரடி.

கோயில் விழாக்களை தடை போடுவது, கடவுளுக்கு செய்யும் அவமதிப்பு அல்லவா என்று 'சங்பரிவாரங்கள்' தொடை தட்டி, மீசை முறுக்கிக் கொண்டு கிளம்பக் கூடும். அதற்கும் நீதிமன்றம் ஆப்பு வைத்திருக்கிறது. "இப்படி பக்தர்கள் தங்களுக்குள் மோதிக் கொள்வதை இந்தத் திருவிழாக்களுக்கு தடை போட்டால் மட்டுமே கடவுள் அதைப் பார்க்காமல் இருப்பார்" என்று ஓங்கி அடித்துவிட்டது உயர்நீதிமன்றம்.

இதைத் தானே இத்தனை ஆண்டுகாலமாக பெரியாரியல்வாதிகளும், மதச்சார்பின்மையாளர் களும் தொண்டைக் கிழியக் கூறி வந்தார்கள்.

அப்போதெல்லாம், "இதோ, 'இந்து' விரோதிகள்; இந்து மதத்தைப் புண்படுத்து கிறார்கள்; தமிழக அரசே கைது செய்; கொடும்பாவி எரிப்போம்; அலுவலகத்துக்குள் புகுந்து தாக்குவோம்" என்றெல்லாம் தோள்தட்டி தொடை தட்டிக் கிளம்பிய 'சேனைகள்', 'முன்னணிகள்' - இப்போது நீதிமன்றம் 'செவியில் அறைந்து' கூறியதற்குப் பிறகு பெட்டிப் பாம்பாய் அடங்கிக் கிடப்பது ஏன்?

"கடவுளையே நிம்மதியிழக்கச் செய்து விட்டீர்களே, பக்தர்களே! 'பாவி'களே! இதைவிட தெய்வ நிந்தனை ஏதாவது உண்டா?" என்று உண்மையான கடவுள் பக்தர்கள் எவரிடமிருந்தும் எந்த முணுமுணுப்பும்கூட வரவில்லை. நீதிமன்றத்தின் தீர்ப்புகளை எல்லாம் அலசி ஆராயும் தமிழ் நாட்டின் நாளேடுகள் எல்லாம் 'கப்சிப்' ஆகிவிட்டன. நீதிமன்றத்தின் கருத்தை ஆதரித்தோ, எதிர்த்தோ எழுத முடியாமல் பறி கொடுத்தவர்களாக திக்குமுக்காடி நிற்கிறார்கள்.

விவாதங்களுக்கு தலைப்புகளை வலைவீசி தேடிக் கொண்டிருக்கும் தொலைக்காட்சிகளும் இந்தப் பிரச்சினையில் வாயடங்கிப் போய் விட்டன!

"கடவுளின் நிம்மதியையே பக்தர்களாகிய மனிதர்கள் கெடுக்கிறார்கள்; கடவுள் நிம்மதியைக் குலைக்கும், மனிதர்கள் நடத்தும் கோயில் திருவிழாக்களுக்கு அனுமதி வழங்கக் கூடாது" - இது நீதிமன்ற கருத்து.

வேறு வகையில், இதையேதான் பெரியாரிய லாளர்களும் கூறுகிறார்கள்.

"கடவுளை உண்டாக்கியது மனிதன்!
கடவுளை ஜாதிவாரியாக கூறு
போட்டது மனிதன்!
கடவுள் பெயரால் மூடநம்பிக்கைகளை
திணித்தது மனிதன்!
கடவுள் பெயரால் சமூகத்தின்
நிம்மதியைக் குலைத்தது மனிதன்!
சமூக அமைதியைக் குலைக்கும்
கடவுளும் வேண்டாம்;
கலவரங்களை உருவாக்கும்
திருவிழாக்களும் வேண்டாம்"

இதைச் சொல்லும் பெரியார் இயக்கங்களை 'இந்து விரோதிகள்' என்று சீறிக் கிளம்பும் வீரர்களே! சூரர்களே! இப்போது நீதிமன்றம் கூறியதற்குப் பிறகும் கைகட்டி, வாய் பொத்திக் கிடப்பது ஏன்?

உச்சநீதிமன்றத்தின் கருத்து உங்கள் நிம்மதியையும் குலைத்து விட்டதோ?

### ஆக. 30 – சர்வதேச 'காணாமல் போனோர் நாள்'!

# ஈழத்தில் 30 ஆயிரம் தமிழர்களின் கதி என்ன?

காணாமல் போனவர்களுக்கான சர்வதேச தினம் (International Day of the Disappeard) வருடந் தோறும் ஆகஸ்டு 30ஆம் தேதி கடைப்பிடிக்கப்படுகிறது.

குறித்த ஒரு நபரை விரும்பாத ஒரு அரசியல் தலைமை அல்லது ஒரு இராணுவ தலைமை அவரை அவரது குடும்பத்திலிருந்து அல்லது வீட்டிலிருந்து தூக்கிச் சென்று விட்டாலோ அல்லது கைது செய்து காணாமல் போக செய்வதாலோ அதன் பின்னர் அவருடன் தொடர்பு கொள்வதற்கு அவர்களது குடும்பத்துக்கு எந்தவிதமான வழியும் இல்லாமல் போய்விடுகிறது. அவர் உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்பதுகூட தெரியாமல் போய்விடும். இதையே 'காணாமல் போதல்' என்கிற சொல் பதத்தில் அழைக்கிறார்கள்.

அதாவது தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் சட்ட நடவடிக்கைகளுக்கு உரித்துடையவர்கள் என்றும் அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறியும் உரிமை அவர்களது குடும்பத்தினருக்கு உள்ளது என்றும் ஐ.நா. கூறுகிறது. எனினும் அப்படி காணாமல் செய்வோரை இரகசிய சிறைகூடங்களில் அடைத்தோ அல்லது இரகசியமாக படுகொலை செய்தோ விடும் நிலை இன்னமும் தொடர்கிறது. உலகெங்கும் பல இலட்சம் பேர் காணாமல் போயுள்ளார்கள். எத்தனை பேர் என குறிப்பிட்டு நிச்சயமாக சொல்ல எந்த அமைப்பும் முயற்சி எடுக்கவில்லை.

உலக மகா யுத்தங்களின் போதே அதிகளவிலானோர் காணாமல் போயுள்ளனர். குறிப்பாக இரண்டாம் உலக போரின்போது ஹிட்லரின் கொடூர நடவடிக்கையால் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட யூதர்கள் காணாமல் போயுள்ளனர்.

ரவுல் வாலன்பெர்க் (Raoul Wallenberg) : இரண்டாம் உலகப் போர் காலத்தில், காணாமல் போனோரை கண்டுபிடிப்பதற்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்த ஒரு ஹீரோ என்றே இவரை சொல்லலாம். 20ஆம் நூற்றாண்டின் மிகச் சிறந்த மனிதாபிமானி என இன்றளவும் பாராட்டப்படு கிறார். காரணம் இவர் மட்டுமே ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட காணாமல் போனவர்களை அவர்களது குடும்பத்தினருக்கு மீட்டுக் கொடுத்துள்ளாராம். ஆனால் இவரின் முடிவு பரிதாபகரமானது. 1945ஆம் ஆண்டு ஜனவரி 17ஆம் தேதி இரஷ்ய படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனார்.

காணாமல் போனவர்களில் உலகிலேயே இரண்டாவது இடம் வகிப்பது சிறீலங்கா. முதலிடம் ஈராக்.

'சர்வதேச காணாமல் போனவர்கள் நாளை' யொட்டி சர்வதேசப் பொது மன்னிப்புக் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் 1980ஆம் ஆண்டு முதல் இன்று வரை இலங்கையில் குறைந்தது 12000 பேர் வரை காணாமல் போயிருப்பதாகக் கூறப்பட் டுள்ளது. உண்மையில் போர்க் காலத்திலும் அதன் பிறகும் 30000 பேர் வரை காணாமல் போயிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

காணாமல் போனவர்களைக் கண்டுபிடித்துத் தரக் கோரி தமிழீழம் எங்கிலும் மனித உரிமை அமைப்பு களும் குடிமக்கள் குழுக்களும் தொடர்ந்து போராடி வருகின்றன. காணாமல் போனவர்களின் குடும்பத் தினர் சங்கங்கள் அமைத்துப் போராடி வருகின்றனர்.

'தமிழக வாழ்வுரிமை கட்சி' நிறுவனர் வேல் முருகன், ஈழத்தில் காணாமல் போன தமிழர்கள் நிலையை விவரித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரனின் கணவர் எழிலன், போரின் இறுதிக் கட்டத்தில் இன்னும் பலரோடு மக்கள் முன்னிலை யில் சரணடைந்தவர். அதன் பிறகு என்ன ஆனார் என்ற கேள்விக்கு விடையில்லை. எத்தனையோ முயற்சிகள் மேற்கொண்டும் கணவரைக் கண்டுபிடிக்க முடியாமல், அனந்தி தொடர்ந்து போராடிக் கொண்டே இருக்கிறார். முல்லைத் தீவு நீதிமன்றத்தில் அவர் தொடுத்த ஆட்கொணர்வு வழக்கில் சாட்சிகளை இராணுவம் மிரட்டித் தடுத்து வருவதாகக் குற்றம் சாட்டுகின்றார்.

காணாமல் போனவர்கள் பலரும் இரகசியச் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டு அடிமைகளாய் வேலை வாங்கப்படுவதாகத் தமக்கு இரகசியத் தகவல் கிடைத்திருப்பதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.டிவி. விக்னேஸ்வரன் கூறுகிறார்.

காணாமல் போன மகனைக் கண்டுபிடித்துத் தருமாறு தாய் பாலேந்திரன் ஜெயகுமாரியும், மகள் விபூசிகாவும் நடத்திய போராட்டம் உலகத்தின் கவனத்தை ஈர்த்தது. ஜெயகுமாரி இதற்காக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் பல மாத காலம் சிறை வைக்கப்பட்டார். கோரிக்கை மட்டும் நிறைவேறவில்லை.

போர்க் காலத்தில் குண்டுவீச்சிலிருந்து பொது மக்களுக்குத் தம் கத்தோலிக்க தேவாலயத்தில் பாதுகாப்பு வழங்கிய அருள்தந்தை ஜிம் பிரௌன் கடைசியாகக் காணப்பட்டது, ஒன்பதாண்டு முன்பு ஒரு சிங்களக் கடற்படை முகாமில்! என்ன ஆனார் என்று தெரியவில்லை. கடந்த 2009 மே மாதம் இராணுவத்திடம் சரணடைந்த அருள்தந்தை பிரான்சிஸ் ஜோசப்பை என்ன செய்தீர்கள்? என்ற கேள்விக்கு இராணுவம் விடை தர மறுக்கிறது.

தமிழீழத்தின் தேசியப் பாவலர் புதுவை இரத்தின துரை எங்கே? பாலகுமாரன் எங்கே? யோகி எங்கே? திலகர் எங்கே? இந்தக் கேள்விகளுக்கு அன்றும் இன்றும் சிங்கள அரசின் விடை வெறும் மௌனமே. இது பல்லாயிரம் உயிர்களை விழுங்கி ஏப்பமிட்ட மௌனம்!

காணாமல் போனவர்களைக் கண்டுபிடிக்கவும், அவர்களை யார் என்ன செய்தார்கள் என்பதை அறிந்து, காணாமலடித்த குற்றவாளிகளைத் தண்டிக்கவும் சர்வதேசப் புலனாய்வும் சர்வதேசப் பொறி முறையும் தேவை. சிங்களம் நிகழ்த்திய தமிழினப் படுகொலையின் ஒரு கூறுதான் காணாமல் போனவர்களின் அவலம்!

"இனக் கொலைக்குப் பன்னாட்டுப் புலனாய்வு வேண்டும்! குற்றவாளிகளைப் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தில் கூண்டிலேற்ற வேண்டும்" என்று வேல்முருகன் அறிக்கையில் கூறியுள்ளார்.

## தலைநகரில் தமிழர் நீதி ஆர்ப்பாட்டம்

ஆகஸ்டு 30 - இந்த நாள், சர்வதேச காணாமல் போனவர்கள் நாள்' என உலகெங்கும் அனுசரிக்கப்படுகிறது. காணாமல் போனவர்களின் உலகு தழுவிய போராட்டத்தில் தமிழகத் தமிழர்களாகிய நாமும் தோழமை கொள்வோம் !

ஆயிரக்கணக்கில் நம் மக்களை காணாமல் போனவர்களாக தொலைத்து நிற்கிறோம் என்ற உண்மையை இந்த நாளில் நினைவில் நிறுத்துவோம் !

சர்வதேச காணாமல் போனவர்கள் நாளை முன்னிட்டு...

ஆகஸ்டு 31 திங்கள் காலை 10 மணியளவில் சென்னை அடையார் காந்தி நகர், ஐ.நா.வின் யுனிசெஃப் அலுவலகம் எதிரில் தமிழர் நீதி ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

ஆர்ப்பாட்டத்தில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தமிழர் வாழ்வுரிமை கட்சி நிறுவனர் வேல்முருகன் பங்கேற்கின்றார்கள்.

தலையங்கம்

## ஜாதி வெறி சக்திகளின் கொலை வெறி

தமிழ்நாட்டில் தற்பொழுது நடைபெற்றுவரும் ஜாதிவெறி சக்திகளின் ஜாதிவெறி நடவடிக்கைகளையும், இதனை கண்டு கொள்ளாத தமிழக அரசையும் திராவிடர் விடுதலைக் கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது.

சமீப காலமாக தமிழ் நாட்டில் ஜாதிவெறியர்களின் நடவடிக்கைகள் நவீன ஊடகங்கள் வழியாகவும் மிகவும் வெளிப்படையாக நடந்தேறிக் கொண்டிருக்கிறது. ஏற்கனவே 'வாட்ஸ் அப்' எனும் நவீன தொடர்பு ஊடகம் மூலம்பொறியாளர் கோகுல் ராஜ் கொலையில் முக்கிய குற்றவாளியான தீரன் சின்னமலைக் கவுண்டர் பேரவை நிறுவன தலைவர் யுவராஜ் எனும் ஜாதிவெறியர், ஜாதி வெறியூட்டும் வகையிலும், காவல்துறைக்கு பகிரங்கமான மிரட்டல் விடுத்தும், சட்டம் ஒழுங்கை சீர்குலைக்கும் வகையிலும் பேசி அதனை அனைவரும் கேட்கும் வகையில் பரப்பினர்.

தற்பொழுது முக்குலத்தோர் பாதுகாப்பு பேரவை எனும் அமைப்பின் நிறுவனர், தலைவர் செங்குட்டுவன் வாண்டையார் எனும் ஜாதி வெறியர் மிகவும் பகிரங்கமாக கொலை மிரட்டல் விடுத்தும், காவல்துறைக்கு சவால் விடுத்தும், சட்டம் ஒழுங்கை சீர்குலைக்கும் செயலிலும் இறங்கி அதனை வாட்ஸ் அப் உரையாடல் மூலம் அனைவருக்கும் பரப்பி இருப்பது மிகவும் அதிர்ச்சி அளிக்கிறது.

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை அருகே உள்ளது வடசேரி எனும் ஊர். விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன், கடந்த 20.08.2015 அன்று பட்டுக்கோட்டையில் நடந்த திருமண விழா ஒன்றில் பங்கேற்று விட்டு, மன்னார்குடிக்கு சென்றார். அப்போது வழியில், வடசேரி என்னும் ஊரில் கொடியேற்றி விட்டு செல்ல திட்டமிட்டு, காவல்துறையிடம் ஏற்கனவே அனுமதி வாங்கி இருந்தனர். ஆனால், அன்று பகல், 2 மணிக்கு, திருமாவளவன் வடசேரிக்கு புறப்பட்ட போது, அவர் வடசேரியில் கொடியேற்றுவதை கண்டித்து வடசேரி ரவுண்டானா அருகில் ஆர்ப்பாட்டம் நடந்த, 40க்கும் மேற்பட்டவர்கள் கூடியிருந்துள்ளனர்.

மேலும் பட்டுக்கோட்டை அருகே உள்ள ஆலத்தூரில் ஒரு கும்பல், பயங்கரப் பெட்ரோல் குண்டுகளுடன் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் செல்லும் போது, அவர் மீது அந்தக் குண்டுகளை வீச திட்டமிட்டதாக காவல்துறை தெரிவித்து திருமாவளவன் அவர்களை வடசேரி வருவதை காவல்துறையே தடுத்துள்ளனர். அவரை வேறு வழியில் மன்னார் குடிக்கு காவல்துறை அழைத்து சென்றுள்ளது.

இந்தியா ஒரு ஜனநாயக நாடு என்றும், அனைத்து உரிமைகளும் சமமாக அனைவருக்கும் உள்ளது எனவும் இந்நாட்டில் யாரும் எங்கும் செல்ல அனைவருக்குமான உரிமை உண்டு என சொல்லப்படுகிறது. ஆனால் தோழர் திருமாவளவனை ஒரு ஊருக்கு செல்ல விடாமல் தமிழக காவல்துறையே தடுத்திருப்பது ஜாதிவெறியர்களுக்கு துணை போகும் செயலே.

ஏற்கனவே காவல்துறையிடம் அனுமதி பெற்ற வடசேரி எனும் ஊரில் நடக்கவிருந்த நிகழ்ச்சிக்கு காவல்துறை முழு பாதுகாப்பு வழங்கி அந்நிகழ்ச்சியை நடத்த துணைபுரிவதுதான் காவல்துறையின் சட்டம் ஒழுங்கை காப்பாற்றும் கடமையும், இந்திய அரசியல் சட்டம் வழங்கியிருக்கும் உரிமைகளை உறுதிப்படுத்தும் செயலும் ஆகும். மாறாக காவல்துறை இவ்வாறு நடந்திருப்பது தமிழ்நாட்டில் காவல்துறை செயலிழந்திருப்பதையும், ஜாதிவெறியர்கள் சர்வ சுதந்திரமாக செயல்படுவதையும் காட்டுகிறது.

இவ்வளவுக்கும் நடந்த பிறகும் தமிழக காவல் துறை செங்குட்டுவன் வாண்டையார் மீதும் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது ஜாதி வெறியர்களுக்கு மீண்டும் மீண்டும் துணைபோகும் செயலாகும்.

தோழர் திருமாவளவன் மீது நடந்த கொலை முயற்சியை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இத்தகைய ஜாதி வெறி சக்திகளின் செயல்பாடுகளை நாம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

திராவிடர் விடுதலைக் கழகம் ஜாதிவெறி சக்திகளுக்கு எதிராக ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாக அவர்களின் உரிமைப் போராட்டத்தில் தொடர்ந்து களத்தில் நிற்கும்.

தமிழ்நாட்டில் மிகவும் மோசமான நிலைக்கு சென்று கொண்டிருக்கும் ஜாதிவெறி சக்திகளுக்கு எதிராக ஜனநாயக, இடதுசாரி சக்திகள் ஒன்றிணைந்து போராட முன் வரவேண்டும் என திராவிடர் விடுதலைக் கழகம் அறைகூவி அழைக்கிறது.

**– கொளத்தூர் மணி**
**தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்**

## மாவட்டப் பொறுப்பாளர்கள்

*மாவட்டக் கலந்துரையாடல் கூட்டங்களில் கழகத் தலைவர் அறிவித்த கழகப் பொறுப்பாளர்கள்.*

**சிவகங்கை மாவட்டம் :** தலைவர் - நா. முத்துக்குமார்; செயலாளர் - பெரியார் முத்து; அமைப்பாளர் - சி. முத்துக்குமார்; அறிவியல் மன்ற அமைப்பாளர் - தமிழ் மாறன்.

**மதுரை மாவட்டம் :** தலைவர் - திலீபன் செந்தில்; செயலாளர் - மா.பா. மணிகண்டன்; அமைப்பாளர் - ச.மா. மாப்பிள்ளை சாமி.

**தேனி மாவட்டம் :** தலைவர் - க. சரவணன்; செயலாளர் - பா. குமரேசன்.

**தமிழ்நாடு மாணவர் கழகம்** - செ.உதயசங்கர்

**தூத்துக்குடி மாவட்டம் :** தலைவர் - பொறிஞர் சி. அம்புரோசு; துணைத் தலைவர் - வே. பால்ராசு; செயலாளர் - ரவிசங்கர்; துணைச் செயலாளர் - பாலசுப்பிரமணியன்; பொருளாளர் - வீர பெருமாள்; அமைப்பாளர்- பால். அறிவழகன்.

**ஆழ்வை ஒன்றியத் தலைவர்** - நாத்திகம் முருகேசன்; செயலாளர் - உதயக்குமார்.

**விளாத்திகுளம் ஒன்றிய அமைப்பாளர் :** மாரி செல்வம்

**திருவைகுண்டம் ஒன்றிய அமைப்பாளர்** - சந்தனராஜ்

**தமிழ்நாடு மாணவர் கழகம்:** தலைவர் - கண்ணதாசன்; செயலாளர் - பிரபாகரன்.

**நெல்லை மாவட்டம் :** தலைவர் - பால் வண்ணன்; செயலாளர் - சி.ஆ. காசிராசன்; அமைப்பாளர் - அ. அன்பரசு.

**கீழ்ப்பாவூர் ஒன்றிய பொறுப்பாளர்கள் :** தலைவர் - மாசிலாமணி; செயலாளர் - சுப்பையா; பொருளாளர் - சங்கர்; துணைத் தலைவர் - மாதவன்; துணை செயலாளர் - சபாபதி.

**தமிழ்நாடு அறிவியல் மன்றம்** - தமிழன்

## தேடி வந்த முதல்வர் பதவியை உதறியவர்



*ஜூனியர் விகடன்' இதழில் ப. திருமாவேலன், சர். பிட்டி. தியாகராயர் குறித்து எழுதிய கட்டுரை.*

'திராவிடர் இயக்கத்தின் மூலவர்' என்று திராவிட இயக்கத்தவர்களால் போற்றப்படும் தியாகராயர் எப்படிப்பட்டவர் தெரியுமா? எப்படி நடந்து கொண்டார் தெரியுமா? இரட்டையாட்சி முறைப்படி 1920இல் நடந்த முதல் பொதுத் தேர்தலில் பெரும்பாலான தொகுதிகளைக் கைப்பற்றி நீதிக்கட்சி ஆட்சியைப் பிடித்தபோது அந்தக் கட்சியின் தலைவர் தியாகராயர்.

ஆட்சியின் தலைவராக தியாகராயரே பதவியேற்பார் என்று எல்லோரும் நினைத்தார்கள். இன்றைக்கு முதலமைச்சர் என்கிறோம் அல்லவா? அந்தப் பதவிக்கு அன்றைய பெயர் 'பிரிமியர்'. அதாவது சென்னை ராஜதானியின் முதல் 'பிரிமியராக' தியாகராயர்தான் பதவியேற்றிருக்க வேண்டும்.

அன்றைக்கு கவர்னராக இருந்த வெல்லிங்டன், நீதிக்கட்சியின் தலைவரான தியாகராயரிடம் அமைச்சரவை அமைக்கும்படி கேட்டுக் கொண்டார். 'எனது கட்சி ஆட்சி அமைக்கும். ஆனால், நான் அதன் தலைமைப் பொறுப்பில் உட்கார மாட்டேன்' என்று கவர்னர் வெல்லிங்டனுக்கு கடிதம் அனுப்பினார் தியாகராயர். 'இங்கிலாந்தில் கட்சித் தலைவராக இருப்பவர், ஆட்சித் தலைவராக இருக்க மாட்டார் அல்லவா?' என்று வெல்லிங்கடனுக்கே ஞாபகப் படுத்தினார்.

அப்போது தியாகராயருக்கு வயது ஒன்றும் அதிகம் இல்லை. 67-தான். "நிறைய பொறுப்புகளைக் கவனிக்க முடியாது என்றால் யாரையாவது பிரிமியர் ஆக்கிவிட்டு நீங்கள் அமைச்சராக இருந்து கொள்ளுங்களேன்" என்று மாற்று யோசனையையும் சொன்னார் வெல்லிங்டன். அதற்கும் சம்மதிக்கவில்லை தியாகராயர்.

அடுத்த இடைஞ்சல் குடும்பத்துக் குள் இருந்துதானே வரும்? தியாக ராயரின் அண்ணன், தனது தம்பியை எப்படியாவது பிரிமியர் பொறுப்பை ஏற்க வைத்துவிட வேண்டும் என்று பெரிய அளவில் முயற்சிகள் எடுத்தார், வற்புறுத்தினார். தம்பி சம்மதிக்காத தால் கட்டளையும் போட்டார். ஹூம், தம்பி சம்மதிக்கவே இல்லை. அண்ணனின் தொல்லைப் பொறுக்காமல் சத்தியாகிரகம் என்ற ஆயுதத்தை எடுத்து, மூன்று நாட்கள் சாப்பிடாமலேயே உண்ணாவிரதம் இருந்தார் தியாகராயர். இறுதியில் தம்பியை வலியுறுத்த முடியாமல் பின் வாங்கினார் அண்ணன். கவர்னரின் கட்டளை, குடும்ப நெருக்கடி எதுவும் தியாகராயரின் உறுதியை அசைக்க முடியவில்லை.

தியாகராயர் ஆரம்பித்த கட்சி இது. அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்களே தேர்தலில் நின்றார்கள். வென்றும் வந்தார்கள். எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும், ஏன் மரணிக்கும் வரைகூட பிரிமியராக இருந்திருக்கலாம் தியாகராயர். ஆனால் கொள்கை உள்ளம் கொண்ட மனிதனின் மனதில் பதவி நாற்காலியிட்டு அமர இடம் இருப்பது இல்லை என்பதை உணர்த்தி விட்டுப் போய்விட்டார் தியாகராயர்.

பெரும் பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவர் தியாகராயர். நெசவு ஆலையும் தோல் பதனிடும் தொழிற்சாலையும் அவருக்கு முன்பே அவரது குடும்பத்திடம் இருந்தது. சென்னை தண்டையார் பேட்டை பகுதியில் பெரும்பாலான இடங்கள் இவர்களுக்குச் சொந்தமாக இருந்தன. இந்த இடங்களைப் பார்க்க தினமும் குதிரை பூட்டிய சாரட் வண்டியில் போவார். இராயபுரத்தில் உள்ள மணியக்காரர் சத்திரத்தைத் தனது சொந்த செலவில் பராமரித்து ஏழைகளுக்கு உணவளித்தவர்.

வடசென்னை இந்து செகண்டரி பள்ளி இவர்கள் தொடங்கியது. பெரும்பாலும் இலவசப் பள்ளியாகவே இது செயல்பட்டது. அதுதான் பிற்காலத்தில் சர். தியாகராயர் கல்லூரியாக வளர்ந்து இன்றும் செயல்பட்டு வருகிறது. மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயில் குளத்தின் படிக்கட்டுகளைக் கட்டுவதற்கு உதவி செய்தவர். திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலுக்கு ஏராளமான பொருளுதவி செய்தவர்.

காந்தி சொன்ன தர்மகர்த்தா முறைக்கு உயிருள்ள உதாரணமாக வாழ்ந்தவர் தியாகராயர். அதனால்தான் காந்தி தனது ஆசிரமத்தில் உள்ளவர்களுக்கு நெசவுப் பயிற்சி அளிக்க மதன்லாலையும், மணிலாலையும் சென்னைக்கு அனுப்பி தியாகராயரிடம் பயிற்சி பெற வைத்தார். "நீங்கள் எனது இயக்கத்துக்கு ஆதரவு தெரிவிக்கக் கூடாதா?" என்று காந்தியே தியாகராயரிடம் வீடு தேடி வந்து கேட்டார்.

ஒத்துழையாமை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தனது போராட்டத்தின்போது தியாகராயரையும் அவரது வீட்டையும் தாக்கினாாகள். இவரது ஆதரவாளர்கள் எதிர் தாக்குதல் நடத்த நினைத்துக் கிளம்பியபோது, "பழி வாங்கும் மனப்பான்மை உடையவர்களுக்கு எனது கட்சியில் இடமில்லை. இத்தகைய மனப்போக்குடன் இருப்பவர்கள் கட்சியைவிட்டே வெளியேறலாம்" என்று பகிரங்கமாக அறிவித்தார் தியாகராயர்.

சர். சி.பி. ராமசாமி அய்யரும், தியாகராயரும் எதிரெதிர் கொள்கை கொண்டவர்கள். சட்டசபையில் சரிக்குச் சரி நிற்பார்கள். ஆனால், வெளியில் வரும்போது சிரித்துப் பேசியபடி வருவார்கள். தியாகராயர் இறந்தபோது, "வீரம் மிக்க போராளி, நம்பத் தகுந்த நண்பர்" என்று சர். சி.பி. ராமசாமி அய்யர் பாராட்டினார். சட்டசபையில் தியாகராயர் உட்கார்ந்திருக்கும் போது அவருக்கு முன்பாகவே, "உங்கள் கட்சிக்கு சங்கு ஊதி சாவுமணி அடிப்பேன்" என்று சத்திய மூர்த்தி கர்ஜித்தார். தியாகராயர் முகத்தில் சிரிப்பைத் தவிர, கடுப்பு ஏற்படவே இல்லை. இப்படி ஒரு காட்சியை இன்று யோசிக்க முடியுமா? சாவு மணி யாருக்கு வரும் என்று சொல்லத் தேவையில்லை.

எட்டாம் எட்வர்டு மன்னர் சென்னை துறைமுகத்துக்கு வந்து இறங்கியபோது சென்னை நகராட்சித் தலைவராக இருந்தார் தியாகராயர்.

**( 4ஆம் பக்கம்)**

## கருப்பர்கள் தூக்குத் தண்டனை எதிர்ப்பு இயக்கத்தில் பங்கேற்றார்

# பெரியார் இலண்டன் பயணத்தில் ஓர் வரலாற்று நிகழ்வு


*1932ஆம் ஆண்டு பெரியார் இங்கிலாந்து நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது, நடந்த ஒரு நிகழ்வுக்கு வரலாற்று முக்கியத்துவம் உண்டு. அந்தப் பயணத்தில் பெரியாருக்கு பெரும் உதவிகளை செய்தவர் எஸ். சக்லத்வாலா. இவர் இந்தியாவிலிருந்து இலண்டனில் குடியேறிய கம்யூனிஸ்ட் நாத்திகர். 1922ஆம் ஆண்டிலேயே கம்யூனிஸ்ட் கட்சி சார்பில், பிரிட்டிஷ் மக்களவையில் உறுப்பினராக இருந்தவர். பெரியார் தனது மேல்நாட்டுப் பயணங்களை நாட்குறிப்பில் பதிவு செய்தார். அந்த நாட்குறிப்பை தோழர் வே. ஆனைமுத்து பெரியாரின், 'அயல்நாட்டுப் பயணக் குறிப்புகள்' என்ற தலைப்பில் 1997ஆம் ஆண்டில் நூலாக வெளியிட்டார். அதில் 28.6.1932 அன்றைய குறிப்பாக பெரியார் கீழ்க்கண்ட தகவலைப் பதிவு செய்திருக்கிறார்.*

"(சக்லத்வாலாவோடு) ஒரு 'நீக்ரோ' (கருப்பர்கள்) மீட்டிங்குக்குப் போனோம். அதாவது அமெரிக்காவில் ஸ்கார்பரோவில் 9 நீக்ரோ பய்யன்களை ரேப் குற்றத்திற்காக அமெரிக்க கவர்மெண்டார் கொலை தண்டனை விதித்ததை கேன்சில் (நீக்கம்) செய்யும்படி உலகக் கிளர்ச்சி செய்ய, அமெரிக்காவில் இருந்து இங்கு வந்திருக்கும் ஒரு 2 பையன்களின் தாயாரான ரைட்டு முன்னிலையில் கூட்டப்பட்ட கூட்டத்திற்குப் போனோம். பலர் நீக்கிரோ; சுமார் 40, 50 பேர் உள்பட வந்திருந்தார்கள். பலர் பேசினார்கள் சக். (சக்லத்வாலா) பேசினார். பணம் வசூல் செய்யப்பட்டது. 13 பவுன் சேர்ந்தது. ஈ.வெ.ரா. (பெரியார்) அரை பவுனுக்கு ஒரு ஜெர்மன் சில்வர் சங்கிலி ஏலத்தில் எடுத்தார்" என்று பெரியார் நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளார்.

பெரியார் பங்கேற்ற இந்த கூட்டம் பற்றிய மேலும் பல வரலாற்றுத் தகவல்களை ஆய்வாளர் ஏ.ஆர். வெங்கடாசலபதி 'இந்து' ஆங்கில நாளேட்டில் (ஆக.22, 2005) பதிவு செய்துள்ளார். அக்கட்டுரையின் சுருக்கமான கருத்துகள்:

பெரியார் தனது நாட்குறிப்பில் குறித்துள்ள 'ஸ்காட்ஸ்பரோ' வழக்கு அமெரிக்காவில் கறுப்பின மக்களுக்கு எதிரான இனவெறியில் தொடரப்பட்ட வழக்கு. வழக்கு இதுதான்: 1931ஆம் ஆண்டு மார்ச் 25ஆம் தேதி 9 ஆப்பிரிக்க-அமெரிக்க சிறுவர்கள் (அமெரிக்காவில் வாழும் கருப்பர்கள்) கட்டணூரகா என்ற ஊரில், தொடர் வண்டியில் ஏறினார்கள். வண்டியில் ஏறிய உடனேயே இரண்டு வெள்ளை நிறப் பெண்களை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கியதாக கைது செய்யப்பட்டார்கள். அந்தப் பெண்கள், ஆண்களுக்கான உடையில் இருந்தார்கள். இவர்கள் புலம் பெயர்ந்து வந்த தொழிலாளர்கள். வழக்கை விசாரித்த நீதிபதிகள் அனைவருமே வெள்ளையர்கள். கைது செய்யப்பட்ட இளைஞர்கள் - தங்கள் தரப்பு நியாயங்களை எடுத்துக் கூறும் வாய்ப்புகள் மறுக்கப்பட்டன. ஒரு இளைஞரைத் தவிர 8 கருப்பின இளைஞர்களுக்கு நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது. வழக்கில், அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சி தன்னை இணைத்துக் கொண்டு கறுப்பின இளைஞர்களுக்கு உதவிக்கரம் நீட்டியது.

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட இரண்டு இளைஞர்களின் தாய் அடா ரைட் (இவரைத்தான் ரைட்டு என்று பெரியார் நாட்குறிப்பில் குறிப்பிடுகிறார்). அடாரைட் - அடிமைகளாக இருந்த கருப்பர் இனத்தின் குடும்பத்திலிருந்து வந்தவர். இவரது பாட்டி அடிமையாக இருந்தவர். ரைட், வீட்டு வேலை செய்து பிழைப்பை நடத்திக் கொண்டிருந்தவர். தனது இரண்டு மகன்கள் ராய் (14), ஆண்டி (17) ஆகிய இருவரையும் மரண தண்டனையிலிருந்து காப்பாற்றுமாறு கம்யூனிஸ்ட் கட்சியின் உதவியை நாடுகிறார். உலக அளவில் இந்த வழக்கில் கருப்பர்களுக்கு நீதி கேட்கும் இயக்கங்களை கம்யூனிஸ்ட் கட்சி நடத்தியது. இது குறித்து விரிவாக ஆய்வு செய்து சூசன். டி. பென்னிபேக்கர் என்பவர் ஒரு நூலை வெளியிட்டார். 8 ஆண்டுகளுக்கு முன்பே தனது கணவனை இழந்து ஏழ்மையில் உழன்ற அடாரைட்டுக்கு அரசியல் என்றாலே என்னவென்று தெரியாது. மகனை தூக்குத் தண்டனை யிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்ற கட்டாயம். அவரை அரசியலை நோக்கித் தள்ளியது. தன்னுடைய கிராமத்தை விட்டு எந்தப் பகுதிக்குமே சென்றிடாத அந்த கருப்பின தாய், மகனின் விடுதலைக்காக அய்ரோப்பா முழுதும் பயணங்களை மேற்கொண்டார். சக்லத்வாலா இந்த இயக்கத்தில் தீவிரப் பங்கெடுத்து, இங்கிலாந்தில் பல்வேறு இயக்கங்களின் ஆதரவை திரட்டினார். சக்லத்வாலாவின் பெரு முயற்சிகள் குறித்து பென்னி பேக்கர் தனது நூலில் ஒரு தனி அத்தியாயத்தையே எழுதியிருக்கிறார்.




இங்கிலாந்தில் கருப்பர்களுக்கு நீதி கேட்டு அவர்களின் மரண தண்டனைக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. நீக்ரோ நலன் காப்பு சங்கம், ஏகாதி பத்திய எதிர்ப்பு லீக் உள்ளிட்ட அமைப்புகளும் இதில் கலந்து கொண்டன. இந்த இயக்கங் களில் பங்கேற்க ரைட் அம்மையாருக்கு, இங்கிலாந்து அரசு அனுமதி தரவில்லை. கடைசியில் அதிகாரிகள் இறங்கி வந்து, 10 நாட்கள் மட்டும் இங்கிலாந்தில் இருப்பதற்கு 'விசா' வழங்கினர். அந்த 10 நாட்களின்போது பெரியார் இங்கிலாந்தில் இருந்தார். 1932 ஜூன் 28ஆம் தேதி பாரிசிலிருந்து ரைட் அம்மையார் இங்கிலாந்து வந்த உடன் அவசரமாக அவருக்கு ஆதரவை தெரிவிக்கும் கூட்டம் இண்டனில், கிளர்க்கென்வெல் என்ற பகுதியிலுள்ள 'கிளப் அன்ட் இன்ஸ்டிடியூட் ஹாலில்' ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த செய்திகளை இலண்டனிலிருந்து வெளிவந்த பிரிட்டன் கம்யூனிஸ்ட் கட்சி பத்திரிகையான 'டெய்லி ஓர்க்கர்' விரிவாக பதிவு செய்தது. அரங்கில் கூட்ட மேடைக்கு ரைட் அம்மையாரை, நீக்ரோக்களும் இந்தியாவைச் சார்ந்த கம்யூனிஸ்ட் தோழர்களும் பாதுகாப்பாக அரண் அமைத்து, அழைத்து வந்தபோது கூட்டத்தினர் உணர்ச்சி வயப்பட்டு கரவொலி எழுப்பி ஆரவரித்தனர். அவர்களிடமிருந்து சர்வதேச பாடல் தன்னிச்சையாக ஒலிக்கத் தொடங்கியது.

அந்தக் கருப்பினத் தாய், தனது ஏழ்மையின் எளிய வாழ்க்கையைப் பற்றிப் பேசினார். தனது இரண்டு மகன்களும் ஏதேனும் வேலை கிடைக்குமா என்று வேலை தேட தொடர் வண்டியில் ஏறிச் சென்றார்கள். பொய் வழக்கில் சிறையில் அடைக்கப்பட்டார்கள். மின்சார நாற்காலியில் உட்கார வைத்து சாகடிக்கும் தண்டனை வழங்கப்பட்டுள்ளது என்று உருக்கமாகப் பேசியதாக, 'டெய்லி ஓர்க்கர்' பதிவு செய்திருக்கிறது. அரங்கில் திரண்டிருந்த 500 பார்வையாளர்களில் பெரியாரும் ஒருவர். அப்போது அவருக்கு வயது 53. அம்மையாரின் அமைதியான பேச்சை கூட்டத்தினரால் உன்னிப்பாகக் கேட்க முடியாத அளவுக்கு மென்மையான குரலில் இருந்தது. பேச்சின் இறுதியில் அவர் முன் வைத்த வேண்டுகோள், அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

"இந்த இரவு இங்கே கூடியிருக்கும் உங்களிடம் நான் வேண்டுவதெல்லாம், எனது இரண்டு மகன்களை மட்டுமல்ல; தண்டிக்கப்பட்டுள்ள 7 இளைஞர்களின் விடுதலைக்கு உதவி செய்யுங்கள். இந்தப் போராட்டம் எங்களுக்கானது மட்டுமல்ல; உலகம் முழுதும் சிறையில் அடைக்கப்பட்டுள்ள அனைத்து யுத்தக் கைதிகளுக்குமான போராட்டம்" என்று கூறியபோது, கூட்டத்தினர் உணர்ச்சி வயப்பட்டனர். சக்லத்வாலா தனது உரையில், "இதுபோல் 'பல ஸ்காட்ஸ்பரோக்கள்' இந்தியாவில் நடந்து கொண்டிருக்கின்றன" என்றார்.

அமெரிக்க தொழிலாளர் சங்கங்களில் கறுப்பர்கள் உறுப்பினராக அனுமதிக்காததைக் கண்டித்த அவர், அனைத்து இனத்தினரையும் கம்யூனிஸ்ட் தொழிற்சங்கங்கள் தான் அனுமதிக்கின்றன என்று பெருமையுடன் குறிப்பிட்டார். கூட்டத்தில் நிறைவாகப் பேசியவர் இசோபெல் பிரவுன் என்ற 'சர்வதேச தொழிலாளர் மறுவாழ்வு' அமைப்பின் பிரதிநிதி. இந்த இயக்கத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்கான நடைமுறைக்கான சாத்தியங்களை பட்டியலிட்டு, அவர் நிகழ்த்திய உரைதான் பெரியாரை மிகவும் கவர்ந்தது. அதைத் தொடர்ந்து நிகழ்வுக்கு தலைமை தாங்கிய இலண்டனில் கப்பலில் பணியாற்றும் ஜிம் ஹெட்லோ என்ற 'நீக்ரோ' (கறுப்பர்) நிதி திரட்டும் அறிவிப்பை வெளியிட்டு, சில பொருள்களை ஏலம் விட்டார். உடனே பெரியார் அரை பவுண்டுக்கு ஜெர்மன் வெள்ளிச் சங்கிலியை ஏலத்தில் வாங்கினார். கறுப்பின இளைஞர்களின் வழக்குக்காக இந்த நிதி திரட்டப்பட்டது. உலகம் முழுதும் முற்போக்குப் புரட்சிகர இயக்கங்களின் செயல்பாடுகளை நேரில் அறிந்து வருவதே பெரியாரின் பயண நோக்கம். (அதன்படி, லண்டனில் அவர் சந்தித்த இயக்கங்கள், இங்கிலாந்து அரசால் கண்காணிப்புக்கு உள்ளாக்கப்பட்ட புரட்சிகர அமைப்புகள்) 'ஸ்காட்ஸ்பரோ' வழக்கு தொடர்பான கூட்டத்தில் பெரியார் நேரடியாகவே பங்கேற்றது - ஒரு வரலாற்றுச் சிறப்பு. அடுத்த 8ஆவது நாளிலேயே 5.7.1932 அன்று பெரியார் போலீஸ் சேதனைக்கு உள்ளாக்கப்பட்டார். அவரது 'பாஸ்போர்ட்' விவரங்களை போலீஸ் பதிவு செய்தவுடன், அரசின் கெடுபிடியைப் புரிந்து, சக்லத்வாலா உடனே இங்கிலாந்தைவிட்டு பெரியாரை கிளம்பிடச் சொன்னார். பெரியாரின் செயல்பாடுகளை வைத்து இங்கிலாந்து அரசாங்கம், அவரை ஒரு கம்யூனிஸ்ட் என்றே முடிவுக்கு வந்தது. 5.7.1932 அன்று லண்டனிலிருந்து வெளியேறி பெரியார் பாரிசுக்கு வந்துவிட்டார். 'ஸ்காட்ஸ்பரோ' வழக்கின் அடிப்படையில்தான் பிரபல எழுத்தாளர் ஹேர்ப்பர் லீ - 1960இல் ஒரு நாவலையே எழுதினார். அந்த நாவலின் பெயர் "To kill a mocking bird" என்பதாகும்!

– '**இரா**'

## தபோல்கர் படுகொலை: குற்றவாளிகளுக்கு பா.ஜ.க. அடைக்கலம்!

மகாராஷ்டிராவில் மூடநம்பிக்கைகளுக்கு எதிராக மக்களிடையே பகுத்தறிவைப் பரப்பி வந்த மருத்துவர் தபோல்கர், பூனேயில் நடைப்பயிற்சி சென்றபோது 2013, ஆக. 20ஆம் தேதி மர்ம மனிதர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். பம்பாய் காவல்துறை குற்றவாளிகளைக் கண்டுபிடிக்காத நிலையில், பம்பாய் உயர்நீதிமன்றம், 2014 மே மாதம் சி.பி.அய். விசாரணைக்கு உத்தரவிட்டது. ஆனால், மகாராஷ்டிராவில் பா.ஜ.க. ஆட்சி விசாரணைக்கு ஒத்துழைப்புத் தர முன் வரவில்லை. மாநில காவல்துறையிலிருந்து 6 அதிகாரிகளை சி.பி.அய். விசாரணைக்கு ஒதுக்கித் தருமாறு ஜூலை முதல் வாரம் ஒரு கடிதமும், மீண்டும் ஆகஸ்டு முதல் வாரத்தில் இரண்டாவது கடிதமும் மாநில உள்துறைக்கு சி.பி.அய். எழுதிய கடிதங்களை உள்துறை கண்டு கொள்ளவே இல்லை. இது குறித்து கருத்து தெரிவிக்க விரும்பவில்லை என்று சி.பி.அய். அதிகாரிகள் கூறியதாக 'இந்து' ஆங்கில நாளேடு செய்தி வெளியிட்டிருக்கிறது. ஆனாலும், விசாரணைக்கு ஒத்துழைப்புத் தர அரசு தயாராக இருப்பதாக மாநில முதல்வர் தேவேந்திர பட்னாவிங் கூறியிருக்கிறார். இந்த வழக்கில் பூனே காவல்துறை திரட்டிய தகவல்கள்தான் அடிப்படை ஆதாரங்களாகும். அவை மராத்தி மொழியிலேயே பதிவு செய்யப்பட்டுள்ளதால் சி.பி.அய். அதிகாரிகள் புரிந்து கொள்ள முடியவில்லை.

இந்த வழக்கை புலனாய்வு செய்து, குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க பூனே காவல்துறை 22 குழுக்களை அமைத்தது. ஆனால், இப்போது சி.பி.அய்.யில் 22 அதிகாரிகள்கூட இல்லாத நிலையில் தடுமாறுகிறது. இதற்கிடையே பத்திரிகையில் செய்தி வந்த பிறகு, மகாராஷ்டிர முதல்வர், சில காவல்துறை அதிகாரிகளை சி.பி.அய்.க்கு உதவ ஒதுக்கியுள்ளார். ஆனாலும், குற்றவாளிகள் பா.ஜ.க.வின் பாதுகாப்பில் இருப்பதால் அவர்களைப் பிடிக்க முடியாது என்று மாநில முன்னாள் முதல்வர் நாராயணன் ரானே குற்றம் சாட்டியுள்ளார். தபோல்கர் சுட்டுக் கொல்லப்பட்டபோது மகாராஷ்டிராவில் காங்கிரஸ் தேசியவாத காங்கிரஸ் கூட்டணி ஆட்சி நடந்தது. அப்போது எதிர்கட்சியாக இருந்த பா.ஜ.க., மகாராஷ்டிராவில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விட்டதாக ஆட்சிக்கு எதிராக போர்க்கொடி உயர்த்தியது, நாடு முழுதும் அதிர்வலைகளை உருவாக்கிய வழக்கு இது.

மாநில அரசு சி.பி.அய்.க்கு காவல்துறை அதிகாரிகளை ஒதுக்கித் தருவதாக வாக்குறுதி தந்தாலும், அதற்கான முயற்சிகள் ஏதும் நடக்கவில்லை என்று தபோல்கர் குடும்பத்தினர் கவலையுடன் கூறுகிறார்கள்.

DATE OF PUBLICATION 27.08.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# செயலூக்கம் தந்த மாவட்ட கலந்துரையாடல்கள்!

திராவிடர் விடுதலைக் கழகத்தின் மாவட்டக் கலந்துரையால் கூட்டங்களின் நான்காம் கட்டப் பயணம் ஆகஸ்டு 18ஆம் தேதி சிவகங்கையிலிருந்து தொடங்கியது. சிவகங்கை பி.என்.ஆர். விடுதியில் பகல் 11 மணியளவில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் நடந்த கூட்டத்தில், கழகத்தின் பரப்புரைப் பயணம், கழக ஏட்டிற்கு சந்தா சேர்த்தல், பயிற்சி வகுப்புகள் நடத்துவது குறித்து கழகத் தோழர்கள் நா. முத்துக்குமார், பெரியார் முத்து, சி.முத்துக்குமார், தமிழ் மாறன் உள்ளிட்ட தோழர்கள் பேசினர்.

சிவகங்கை மாவட்டத்தில் பல கிராமங்களில் 'பேய்' மூட நம்பிக்கைகள் மக்களிடம் ஆழமாக ஊடுருவியிருப்பதையும், அதை எதிர்த்து மக்களிடையே உளவியல் நிபுணர்களைப் பயன்படுத்தி, அறிவியல் விழிப்புணர்வுப் பரப்புரை நடத்த வேண்டும் என்றும் தோழர்கள் கருத்து தெரிவித்தனர். ஏற்கனவே பேய் விரட்டுவதாகக் கூறி மக்களை ஏமாற்றி வந்த சில சாமியார்கள் மோசடிகளை எடுத்துக் கூறி பாதிக்கப்பட்டோரிடம் உளவியல் அடிப்படையில் கருத்துகளை எடுத்துக் கூறி கழகத் தோழர்கள் நல்வழிப்படுத்தி வரும் நிகழ்வுகளையும் பகிர்ந்து கொண்டனர். கழகத் தோழர்களுடன் கலந்து ஆலோசித்து, கழகப் பொதுச் செயலாளர், மாவட்ட பொறுப்பாளர்களை அறிவித்தார். முதல் நாள் 17ஆம் தேதி திருச்செந்தூரில் ஜாதி வெறியன் யுவராஜைக் கைது செய்யக் கோரி நடந்த ஆர்ப்பாட்டத்தில் கைது செய்யப்பட்டு, இரவு 8 மணிக்கு மேல் விடுதலை செய்யப்பட்டதால் சிவகங்கை மாவட்டக் கலந்துரையாடல் கூட்டத்துக்கு கழகத் தலைவர், அமைப்பு செயலாளர், பொருளாளர் பங்கேற்க இயலவில்லை.

**மதுரையில் :** ஆகஸ்டு 19ஆம் தேதி மதுரை மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம் மாலை 5 மணியளவில் மதுரை 'பி.அண்ட்.டி' நகரில் பொறியாளர் தளபதி இல்லத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடந்தது. கொடுமுடி பாண்டியன், திலீபன் செந்தில், மா.பா. மணிகண்டன், மாப்பிள்ளை சாமி, முருசேகசன் மற்றும் தேனியிலிருந்து வந்திருந்த தோழர்கள் க.சரவணன், பா. குமரேசன் கருத்தினைத் தெரிவித்தனர். கழகத் தலைவர், பொதுச் செயலாளர், அமைப்புச் செயலாளர், பொருளாளர் பேசியதைத் தொடர்ந்து, கழகத் தலைவர், மாவட்டப் பொறுப்பாளர்களை அறிவித்தார்.

**விருது நகர் :** ஆகஸ்டு 19ஆம் தேதி பகல் 11 மணியளவில் விருதுநகர் மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம், கழகத் தோழர் கணேச மூர்த்தி இல்லத்தில்



கடவுள்-ஆத்மா மறுப்புடன் தொடங்கியது. கணேசமூர்த்தி வரவேற்புரையாற்றி னார். தோழர்கள் மாப்பிள்ளைசாமி, தெப்புலங்கன்பட்டி ஜெகதீசுவரன், வீரபாண்டியன், வடமலைக்குறிச்சி ஜெயக்குமார், கிருஷ்ணமூர்த்தி, மாணிக்கராஜ், ராமன், பால் சரவணகுமார், ரமேசு ஆகியோர் உரையாற்றினர். கழகத் தோழர் கணேசமூர்த்தி, வாரந்தோறும் 50 பெரியார் முழக்கம் இதழ்களை தமது சொந்தப் பொறுப்பில் வாங்கி, தோழர்களிடம் தொடர்ந்து வழங்கி வந்தார். இதன் வழியாக, பெரியார் கொள்கை வழியை நோக்கி இளைஞர்களைக் கொண்டு வர முடிந்தது என்று கணேச மூர்த்தி குறிப்பிட்டார். நிகழ்வில் பேசிய இளைஞர்கள், கடவுள் மறுப்பு-ஜாதி எதிர்ப்புக் கொள்கைகளை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டிய அவசியத்தை கவலையுடனும் உணர்வுபூர்வமாகவும் கூறியது நிகழ்வின் சிறப்பான அம்சமாகும். மனு சாஸ்திர சுலோகங்களை அப்படியே அலைபேசியில் குறுஞ்செய்தி வழியாக அனுப்பி, அதன் மனித விரோத கொள்கைக்களை பரப்பி வருவதாக தோழர் மாணிக்கராஜ் கூறினார்.

"சேஷ சமுத்திரம் கிராமத்தில், தலித் மக்கள் தேர் ஊர்வலத்தை பொது வீதிகளில் நடத்தக் கூடாது என்று எதிர்ப்பு தெரிவித்த ஜாதி வெறியர்கள், இந்துக் கடவுளின் தேர் மீதே வெடிகுண்டு வீசியிருக்கும்போது, இதை பா.ஜ.க.வினரோ, ஆர்.எஸ்.எஸ்.காரர் களோ ஏன் கண்டிக்கவில்லை?" என்று ஜெயக்குமார் அர்த்தமுள்ள கேள்வியை எழுப்பினார்.

"சுயமரியாதைக்காகப் போராடிய தலைவர் பெரியார். அவர் காண விரும்பியது சுயமரியாதை தேசம். மொழி, பண்பாடு, அனைத்திலும் பெரியாரின் பார்வை சுயமரியாதைக் கண்ணோட்டத்திலேயே இருந்தது. பெரியார் கொள்கை பரப்பும் நூல்களை வாங்கி இளைஞர்களிடம் தந்து படிக்கச் செய்வதிலும், அவர்களுடன் நடத்தும் விவாதங்களின் வழியாகவும் புதிய இளைஞர்களை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையோடு செயலாற்றி வருகிறேன். பல இளைஞர்களை வென்றெடுக்க முடிந்திருக்கிறது. இது நாம் கொண்டு சென்ற பெரியார் கருத்துகளுக்குக் கிடைத்த வெற்றி" என்றார் தோழர் கணேசமூர்த்தி. கழகப் பொதுச் செயலாளர், அமைப்புச் செயலாளர், பொருளாளர் உரையைத் தொடர்ந்து கழகத் தலைவர் நிறைவுரையாற்றினார். தோழர் கணேசமூர்த்தி இல்லத்தில் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

**தூத்துக்குடி:** விருதுநகரிலிருந்து கழகப் பொறுப்பாளர்கள் தூத்துக்குடிக்கு



பயண மானார்கள். பாளையங்கோட்டை சாலையிலுள்ள அழகப்பா பல்கலைக்கழக படிப்பு மய்யத்தில் மாலை 5 மணியளவில் தூத்துக்குடி-நெல்லை மாவட்டங்களின் கலந்துரையாடல், கடவுள், ஆத்மா மறுப்புடன் தொடங்கியது. நிகழ்ச்சியின் தொடக்கத்தில் சில மாதங்களுக்கு முன் முடிவெய்திய கழகத்தின் மாவட்ட செயலாளர் மதன் உருவப்படத்தை கழகத் தலைவர் திறந்து வைத்தார். கழகப் பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் தொடக்க உரையாற்றினார். தோழர்கள் பால்ராஜ், பாலசுப்பிரமணியன், அன்பரசு, உதயகுமார், காசி ராஜா, குமார், அன்பு ரோசு, செல்லத்துரை, பால்வண்ணன் ஆகியோர் உரையைத் தொடர்ந்து, அமைப்புச் செயலாளர், பொருளாளர், பொதுச் செயலாளர், மற்றும் தலைவர் உரையாற்றினர். தூத்துக்குடி, நெல்லை மாவட்டக் கழகப் பொறுப்பாளர்களை கழகத் தலைவர் அறிவித்தார்.

# கழகத் தலைவர் பங்கேற்பு: புதுவையில் பெரியாரியல் பயிற்சி

16-8-2015 அன்று காலை முதல் மாலை வரை புதுச்சேரி மாநில திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக ' பெரியாரியல் பயிற்சி வகுப்பு, அரியாங்குப்பத்தை அடுத்த அலுத்துவேலியில் உள்ள தோழர் பழனிராசா தோட்டத்தின் இயற்கை எழில் கொஞ்சும் தென்னந்தோப்பில் நடந்தது. அறிமுக உரையை ஆற்றிய மாநிலக் கழகத் தலைவர் லோகு அய்யப்பன் மாநிலக் கழகம் எடுத்த முடிவை ஒட்டி மாதந்தோறும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள பெரியாரியல் பயிற்சி வகுப்பின் தொடக்க நிகழ்வே இது என்று குறிப்பிட்டார். கழகத் தோழர்கள் யார் எந்தவகையான கேள்விகளை கேட்டாலும் உடனே பதிலளிக்கும் அளவுக்கு கொள்கைத் தெளிவு உள்ளவர்களாக வளர்த்தெடுக்கும் முயற்சியே இது என்றார். தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி, " பெரியார் என்றொரு மனிதர்" என்ற தலைப்பில் பெரியாரின் இளமைக் காலம் முதற்கொண்டு அவர் பெரும் மானுடநேயராக, ஜாதி ஒழிப்பு, பெண்ணுரிமைப் போராளியாகப் பரிணமித்ததற்கான பின்புலம் போன்றவற்றை விளக்கி 11.00 மணி முதல் நண்பகல் 2-00 மணிவரை விளக்கினார். மதிய உணவாக மாட்டுக்கறி பிரியாணி வழங்கப்பட்டது. பிற்பகல் 3-00 மணி முதல் மாலை 5-30 வரை தோழர்கள் தாங்கள் பரவலாக எதிர்கொள்ளும் கேள்விகளுக்கான விளக்கங்களை கேட்டறிந்தனர். ஏறத்தாழ 75 தோழர்கள் கலந்துகொண்ட பயிற்சி வகுப்பு மாலை 6 மணிக்கு நிறைவடைந்தது.

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

மன்னரை வரவேற்க உயர்ந்த ஆடை அணிந்து வரவேண்டும் என்றார்கள். "என்னுடைய வழக்கமான (வெள்ளை) உடையில்தான் வருவேன்" என்று தியாகராயர் உறுதியாக இருந்து விட்டார். இறுதியில் அவரது உறுதியே வென்றது.

இன்று இராஜாஜி அரங்கமாக இருக்கும் இடம் முன்பு, கவர்னர்களின் விருந்து மாளிகை. அங்கு நடந்த விருந்துக்கு தனது வழக்கமான உடையில் போனார். காவலர்கள் இவரை உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. இவர் திரும்பி விட்டார். பின்னர் கவர்னருக்கு இந்தத் தகவல் சென்றது. 'இந்தியர்கள் இனி தங்களது வழக்கமான உடையிலேயே வரலாம்' என்று அதன் பிறகுதான் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஓர் இளைஞன், தியாகராயரைப் பார்த்து கேள்வி கேட்டான். அவனை நோக்கி தியாகராயர் நகர்ந்து போனார். அவன் பயந்து போய் பின்னேயே நகர்ந்துகொண்டே போனான். "ஏன் பின்னே ஓடுகிறாய்? உன்னைப் பின்னுக்கு இழுப்பது எது? இரத்தத்தில் அச்சம் இருக்கிறது. வாயில் மட்டுமே, வீரம் இருக்கிறது. அச்சத்தை விடு முதலில்!" என்றார் தியாகராயர். அதுதான் தியாகராயர்.

திரும்பிய பக்கம் எல்லாம் தியாகராயர்கள் எழுக!

### கேசவன் பூங்கா விஜயன் : கழக ஏட்டுக்கு நன்கொடை

கேசவன் பூங்கா கழகத் தோழர் விஜயன் அவர்களின் மகன்கள் இரணியன், இலக்கியன் ஆகியோரது 12ஆவது பிறந்த நாளை முன்னிட்டு 'புரட்சிப் பெரியார் முழக்க'த்துக்கு ரூ.500 நன்கொடை வழங்கினார். (நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். ஆர்)

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆9941613535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 28th August 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN